# பகுதி III

# பகுதி III

## 2005 ஆம் ஆண்டில் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள்

### தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும், சுற்றறிக்கைகளும், பணிப்புரைகளும், அறிவித்தல்களும்


| | | | |
|---|---|---|---|
| **வங்கி மேற்பார்வைத் திணைக்களம்** | | | **பக்கம்** |
| 1 | உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி (வைப்புக்கள் பணிப்புரைகளுக்கான திருத்தம் | | (i) |
| 2. | வங்கித் தொழில் (திருத்தச்) சட்டம் - வழங்கப்பட்ட பணிப்புரைகள் போன்றன | | (i) |
| 2.அ | வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தின் எஸ் 46 (1) இன் கீழான பணிப்புரை | 02/04/002/0012/0002 | (ii) |
| 2.ஆ | வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தின் எஸ்47(3) (4) (5) மற்றும் (6) என்பவற்றின் கீழான தீர்மானங்கள் | | (iii) |
| 2.இ | வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 47(4)இன் கீழ் வெளியிடப்பட்ட கட்டளை | | (v) |
| 3. | மாதாந்த காலாண்டு இணங்க அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் | 02/04/004/0010/001 | (vi) |
| 4. | பத்திரிகையில் வங்கிக் கணக்குகளைப் பிரசுரிப்பதன் மூலமாகப் பொது மக்களுக்கு வெளிப்படுத்தல் | 02/04/003/0400/001 | (vii) |
| 5. | 2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டப் (தனியொரு கடன்பாட்டாளரின்) பணிப்புரைகள் | | (viii) |
| 6. | பணிப்பாளர்களுக்கும் தொடர்பான கம்பனிகளுக்குமான கடன் வசதி | | (xii) |
| 7. | 2005ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டப் (தனியொரு கடன்பாட்டாளரின்) பணிப்புரைகள் | | (xiv) |
| 8. | வங்கிப் பணிப்பாளர்களின் நியமனம் (திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழிற் சட்டத்தின 42ஆம் பிரிவு ) | 02/04/002/0012/002 | (xvii) |
| 8.அ | வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 42 (2) இன் நியதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியக் கடதாசி | | (xviii) |
| 8.ஆ | வங்கியொன்றின் பணிப்பாளராக முன்மொழியப்பட்டுள்ள ஆள் ஒருவரினால் சமர்பிக்கப்பட வேண்டிய பிரகடனம் | | (xx) |
| 9. | வங்கிகளின் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளை அதிகரித்தல்(உவவ) | 02/17/402/0073/001 | (xxii) |
| 10. | வங்கிகளின் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளை அதிகரித்தல்(உசிவவ) | 02/17/402/0073/001 | (xxiii) |
| 11. | இஸ்லாமியத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட சாதனங்களை அறிமுகப்படுத்தல் | | (xxiv) |
| 12. | வெளிநாட்டு நாணயத்தில் மூலதனத்தினைப் பேணுவதற்கான கோரிக்கை | | (xxv) |
| 13. | 2005ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க தனியொரு கடன்பாட்டாளர் வரையறைப் பணிப்புரை | 02/04/002/0101/002 | (xxvi) |
| 14. | உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஆண்டு உரிமக் கட்டணம் | 02/08/006/001/002 | (xxxi) |
| 15. | வங்கிகளின் மூலதனத்தினை வெளிநாட்டு நாணயத்தில் பேணுவதற்கான கோரிக்கை | 02/04/002/0018/001 | (xxxii) |
| 16. | வங்கிகளின் காலாண்டு நிதிக்கூற்றுக்களை பத்திரிகைகளில் வெளியிடுதல் | 02/04/003/0401/001 | (xxxiv) |
| 17. | 2005ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டப் (தனியொரு கடன்பாட்டாளரின்) பணிப்புரைகள் - உசிவ | | (lii) |
| 18. | தனியொரு கடன்பாட்டாளர் வரையறை | | (lv) |
| **உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்** | | | |
| 19. | லங்கா செட்டிலுள்ள பத்திரங்களற்ற அரச பிணையங்களுக்கெதிராக ஒரு நாளுக் குள்ளேயான திரவ வசதி ஏற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 35/01/005/0006/09 | (lvii) |
| **செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்** | | | |
| 20. | அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 06/04/01/2005 | (lviii) |
| 21. | மறைமுக ஏற்றுமதியாளர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் | 06/04/02/2005 | (lix) |
| 22. | அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்குமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் | 06/04/03/2005 | (lxi) |
| 23. | சிறப்பு இறக்குமதி உரிம ஒழுங்கு விதிகளின் திருத்தங்கள் | 06/05/04/2005 | (lxii) |
| 24. | பன்னாட்டு இலத்திரனியல் கொடுகடன் பற்று, வாவு அல்லது வேறு ஏதாவது நிதிய மாற்றல் அட்டைகளுக்கெதிரான வெளிநாட்டுச் செலாவணி எடுப்பனவுகளின் மீதான கண்காணிப்புத் திட்டம் | 06/08/06/2005 | (lxiii) |

## பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்


25. நிதியியல் பெறுதி சாதனங்கள் மீதான பணிப்புரை (திருத்தப்பட்டது) 33/01/002/0086/002 (lxix)


## கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம்


26. லங்கா செட்டில் முதன்மை தலத்திலுள்ள நேரடி சிஏஎஸ்/ சிஎஸ்எஸ்/ வெப்தள கணனி சேமிப்பு பிரயோகங்கள்/ தரவுத் தளங்கள் என்பனவற்றைத் தரமுயர்த்துதல் ஆர்ரிஜிஎஸ்/03/2005 34/07/029/0001/001 (lxxviii)

27. லங்கா செட்டில் முறையின் ஒரு பங்கேற்பாளராக வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கியினை நியமித்தல் - ஆர்ரிஜிஎஸ்/04/2005 34/07/029/0001/001 (lxxix)

28. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் தேறிய தீர்ப்பனவுக் கடப்பாடுகளின் தீர்ப்பனவிற்காக அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையின் தீர்ப்பனவுக் கணக்குகளில் போதியளவு நிதியினைப் பேணத் தவறுமிடத்து செலுத்தத் தவறியமைக்கான கட்டணத்தினை விதித்தல் - ஆர்ரிஜிஎஸ்/05/2005 34/07/029/0001/001 (lxxx)

29. வரையறுக்கப்பட்ட முஸ்லீம் வர்த்தக வங்கியின் பெயரை மாற்றுதல் - ஆர்ரிஜிஎஸ்/07/2005 34/07/029/0001/001 (lxxxiii)


## பொதுப்படுகடன் திணைக்களம்


30. முதனிலை வணிகர்களின் ஆகக் குறைந்த மூலதனத் தேவைபாடுகளை அதிகரிப்பதன் மீதான பணிப்புரை 08/24/002/0001/005 (lxxxiv)

31. ஆகக் குறைந்த மூலதனத் தேவைபாடுகளை அதிகரித்தல், பங்கிலாபம், பகிர்ந்தளிப்பு மற்றும் முதனிலை வணிகர்களின் அடுக்கு 11 மூலதனத்தை பேணல் என்பன மீதான பணிப்புரை 08/24/002/0005/005 (lxxxv)

32. 2003 ஓகத்தில் லங்கா செட்டில் முறையின் ஒழுங்கு விதிகளுக்கான திருத்தம் - எஸ்எஸ்எஸ்எஸ்/01/2005 08/25/001/0034/001 (lxxxvi)


## வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்


33. நிதிக் கம்பனிகள் (வைப்புக்கள்) 2005ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கப் பணிப்புரை (lxxxvii)

34. நிதிக் கம்பனிகள் (வட்டி) 2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கப் பணிப்புரை (xc)

35. நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்து) 2005ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கப் பணிப்புரை (xcii)

36. நிதிக் கம்பனிகள் (வியாபாரத்திற்காக நிதிக்கம்பனிகளை மூடிவிடுதல்) 2005ஆம் ஆண்டின் 4ஆம் இலக்கப் பணிப்புரை (xciv)

37. நிதிக் கம்பனிகள் (அமைப்பு மாற்றங்கள்) 2005ஆம் ஆண்டின் 5ஆம் இலக்கப் பணிப்புரை (xcv)

38. நிதிக் கம்பனிகள் (கிளைகளை அலுவலகங்களை திறத்தல்/ இடம் மாற்றுதல்/ மூடிவிடுதல்) 2005ஆம் ஆண்டின் 6ஆம் இலக்கப் பணிப்புரை (xcvi)

39. நிதிக் கம்பனிகள் (பதிவு செய்தலும் உரிமம் வழங்குதலும்) 2005ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஒழுங்குவிதி (xcvii)

40. மூலதனப் போதுமை மீதான பணிப்புரை அறிவுறுத்தல்களுக்கான திருத்தம் (xcviii)

41. தகுதியுடைய மீள் மதிப்பீட்டு ஒதுக்குகளை மூலதன நிதியத்தில் உள்ளடக்குவது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கான வழிகாட்டல்கள் (c)

42. 2003ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (இடர் நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம்) பணிப்புரை அறிவித்தல்களுக்கான திருத்தங்கள் (ci)

43. நிதிக் குத்தகை (ஆகக் குறைந்த மூலதனம்) 2005ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கப் பணிப்புரை (cii)

44. நிதிக் குத்தகை (அறவிடமுடியா ஐயக் கடன்களுக்கான ஒதுக்கு) 2005ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கப் பணிப்புரை (ciii)

45. நிதிக் குத்தகை (தனி கொடுகடன்பாட்டாளர் வரையறை) 2005ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கப் பணிப்புரை (cvi)

46. நிதிக் குத்தகை (அதிகரிப்பு விகிதம்) 2005ஆம் ஆண்டின் 4ஆம் இலக்கப் பணிப்புரை (cix)

47. நிதிக் குத்தகை (ஒன்று சேர்ந்த வட்டி) 2005ஆம் ஆண்டின் 5ஆம் இலக்கப் பணிப்புரை (cxii)

48. நிதிக் குத்தகை (ஒதுக்கு நிதியம்) 2005ஆம் ஆண்டின் 6ஆம் இலக்கப் பணிப்புரை (cxiv)

*1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால்*

**திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம்**

*1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க வங்கித்தொழில் திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76 ஜே(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட 1998 ஆம் ஆண்டின் மே 7 ஆம் திகதியிடப்பட்ட பணிப்பிற்கான திருத்தம்.*

கொழும்பு
*2005 சனவரி 03*

**ஒப். சுனில் மெண்டிஸ்**
ஆளுநர்

**உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி (வைப்புக்கள்) பணிப்புரைகளுக்கான திருத்தம்**

மேற்குறிப்பிட்ட பணிப்புரையின் பிரிவு 4 இன் துணைப்பிரிவு (ஆ) உடனடியாக நடைமுறைக்கு வரும் விதத்தில் புறக்கீடு செய்யப்படுகிறது.

**சுற்றறிக்கை எண்** 02/04/002/0012/002

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
*2005 பெப்புருவரி 16*

*உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் பிரதம நிறைவேற்று அலுவலர்கள்*
*செயலாளர் நாயகம்/இ.வ.சங்கம்*

*அன்புள்ள ஐயா*

**2005 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம்**

நீங்கள் அறிந்திருக்கக் கூடியவாறு, வங்கித்தொழில் திருத்த மசோதா 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் திருத்தச் சட்டம் என்ற பெயரில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பின்வருவன இத்துடன் இணைக்கப்பட்டுள்ளமையினை தயவுசெய்து கவனிக்கவும்.

- பிரிவு 47(4) நியதிகளுக்கிணங்க நாணயச்சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வரையறைகள்
- பிரிவு 47 (3)(4)(5) மற்றும் (6) இன் நியதிகளுக்கிணங்க நாணயச்சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்
- பிரிவு 46(1) இன் நியதிகளுக்கிணங்க வழங்கப்பட்ட பணிப்புரைகள்

இவை கிடைத்தமை பற்றி தயவு செய்து அறியத்தரவும்.

உங்கள் உண்மையுள்ள
ஒப். **பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

## வங்கித் தொழில் சட்டம்

*2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள்.*

**ஒப்பம் சுனில் மெண்டிஸ்**
ஆளுநர்

கொழும்பு
*2005 பெப்புருவரி 11*

## பணிப்புரைகள்

*2005 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) இனால் வழங்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தி நாணயச்சபையானது பின்வரும் பணிப்புரைகளை விடுக்கின்றது.*

1. *2005 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் நடைமுறைக்கு வந்த நாளான 2005 பெப்புருவரி 9ஆம் நாளுக்கு உடனடியாக முற்போந்த நாளின்று நடைமுறையிலிருந்த வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46 இன் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பின்வரும் பணிப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்கி ஒழுகுமாறு உரிமம்பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.*

    (அ) *2003 நவெம்பர் 18ஆம் நாளன்று விடுக்கப்பட்ட 1999 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க பணிப்புரைக்கான திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1999 ஒத்தோபர் 11 ஆம் நாளன்று பிரிவு 46(1) இன் கீழ் விடுக்கப்பட்ட 1999 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க பணிப்புரை (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை)*

    (ஆ) *வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1)(இ) இன் கீழ் 1998 ஆம் ஆண்டு ஒத்தோபர் 22 ஆம் நாளன்று விடுக்கப்பட்ட 1988 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பணிப்புரை.*

2. *2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46 இன் துணைப்பிரிவு (1) இன் கீழ் அவை விடுக்கப்பட்டிருந்திருக்குமாயின் மேற்குறிப்பிட்ட பணிப்புக்கள் வாசிக்கப்பட்டு பொருள் கோடப்பட வேண்டும்.*

## வங்கித் தொழிற் சட்டம்

*2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 47 (3) (4) (5) மற்றும் 6 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.*

***ஒப். சுனில் மெண்டிஸ்***

ஆளுநர்

கொழும்பு

*2005 பெப்புருவரி 11*

## தீர்மானங்கள்

(1) வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 47 (3) (4) (5) மற்றும் (6) இன் ஏற்பாடுகளினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி நாணயச்சபையானது, உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அதன் பணிப்பாளருக்கு அல்லது அத்தகைய பணிப்பாளரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது பணிப்பாளர் கணிசமான அக்கறைகளைக் கொண்டிருக்கும் எந்த ஒரு விடயத்திற்கும் கடன் வசதிகளை வழங்கும்பொழுது பின்வருவனவற்றைப் பிணையாகப் பெற்றுக் கொள்வதற்கு ஒப்புதலளித்தது.

(அ) இலங்கை அரச உத்தரவாதங்கள்

(ஆ) வங்கி உத்தரவாதங்கள்

(இ) உலக வங்கி ப.நா.நிதியம், ப.நா.கூட்டுத்தாபனம், ஆ.அ.வங்கி ஐ.அ. உதவியமைப்பு போன்ற பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உத்தரவாதங்கள்.

கடன் வசதி மேலேயுள்ள விடயங்கள் (அ) (ஆ) அல்லது (இ) இனால் பிணையிடப்பட்டிருக்குமிடத்து வழங்கப்பட்ட கடனானது உத்தரவாதத்தின் 100 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(ஈ) வழங்கப்பட்ட கடன்கள் அரச அல்லது மத்திய வங்கி பிணைகளைப் பொறுத்தவரையில் அத்தகைய பிணையங்களின் முகப்புப் பெறுமதியில் அல்லது சந்தைப்பெறுமதியில் எது குறைவோ அதில் 90 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(உ) வழங்கப்பட்ட கடன்கள் கடன் வழங்கும் வங்கியின் கட்டளைக்கான பாத்தியத்தின் கீழ் எந்த ஒரு வர்த்தக வங்கிகளிலும் உள்ள காசு வைப்புக்களில் 90 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(ஊ) இலங்கையில் வழங்கப்பட்டு கடன் வழங்கும் வங்கிக்கு ஒப்படைக்கப்பட்ட ஆயுள் காப்புறுதிப் பூட்கையினைப் பொறுத்தவரையில் வழங்கப்பட்ட கடன்கள் அத்தகைய பூட்கையின் ஒப்புடைப்புப் பெறுமானத்தில் 75 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(எ) இறையிலி அடிப்படையில் வைத்திருக்கப்பட்டு கடன் வழங்கும் வங்கியினால் முதனிலை ஈடாக வைத்திருக்கப்படுகின்ற அசையாச் சொத்துக்களைப் பொறுத்தவரை வழங்கப்பட்ட கடன்கள் அத்தகைய சொத்துக்களின் பெறுமதியில் 60 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(ஏ) குத்தகை அடிப்படையில் வைத்திருக்கப்படும் அசையாச் சொத்துக்களை பொறுத்தவரை அவை பின்வரும் நிபந்தனைக்குட்பட்டிருத்தல் வேண்டும்.

(i) குத்தகையானது நியதிச்சபையொன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) குறைந்தது 50 ஆண்டுகளைக் கொண்ட காலாவதியாகாத குத்தகை.

(iii) குத்தகை உறுதியில் உள்ளடக்கப்பட்டிருக்கும் குத்தகை நிலஉரிமைகளின் ஈடு மீது தடை இருக்கக்கூடாது. அல்லது குத்தகை உறுதியானது நிலக் குத்தகை உரிமைகளின் ஈட்டிற்காக குத்தகையாளரின் முன்ஒப்புதலைத் தேவைப்படுமிடத்து அத்தகைய ஒப்புதல்கள் குத்தகையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv). நிலக் குத்தகை உரிமைகளின் மீது கடன் வழங்கும் வங்கியினால் பெற றுக்கொள்ளப்பட்ட முதனிலை ஈடொன்று;

அத்துடன் வழங்கப்பட்ட கடன்கள் அத்தகைய சொத்துக்களின் பெறுமதியில் 60 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(ஐ) கொழும்பு பிணையங்கள் சந்தையில் குறிப்பீடு செய்யப்பட்ட பொதுக்கம்பனிகளின் பங்குகளைப் பொறுத்தவரை வழங்கப்பட்ட கடன்கள் அத்தகைய பங்குகளின் சந்தைப் பெறுமதியில் 50 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(ஒ) கையிருப்புச் சரக்கின் ஈட்டினைப் பொறுத்தவரை வழங்கப்பட்ட கடன்கள் அத்தகைய கையிருப்புச் சரக்கின் சந்தைப் பெறுமதியில் 30 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(ஓ) வங்கித்தொழில் சட்டத்தின் 127 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறான உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தவிர்ந்த, வங்கித்தொழில் நிறுவனமொன்றினால் கணிசமான அக்கறை வைத்திருக்கப்படும் விடயத்தினைப் பொறுத்தவரையில் இறையிலி அடிப்படையில் வைத்திருக்கப்படும் அசையாச் சொத்துக்கள் மற்றும் இதன் மீது கடன் வழங்கும் வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட இரண்டாம் நிலை ஈடு என்பனவற்றைப் பொறுத்தவரை, வழங்கப்பட்ட மொத்தக் கடன் வசதி அத்தகைய சொத்துக்களின் பெறுமதியில் 60 சதவீதத்தினை விஞ்சக்கூடாது; அத்துடன்

(ஔ) அனைத்து தயாரிக்கப்பட்ட உணவுகள் மற்றும் வரையறுக்கப்பட்ட காலம் வரை மட்டுமே வைத்திருக்கப்படக்கூடிய பொருட்கள் தவிர்ந்த உடனடியாக சந்தைப்படுத்தத்தக்க வர்த்தக தன்மையினைக் கொண்ட பழுதடையாத பொருட்களின் பிணைகளைப் பொறுத்த வரையில் வழங்கப்பட்ட கடன்கள் அத்தகைய பொருட்களின் சந்தைப் பொறுமதியில் 40 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

2. பிரிவு 47(5) இன் நோக்கங்களுக்கிணங்க, உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட கடன் வசதிகளைப் பொறுத்தவரை, அத்தகைய வங்கியின் பணிப்பாளர் ஒருவர் கணிசமான அக்கறையினைக் கொண்டிருக்குமிடத்து அத்தகைய பணிப்பாளர் கணிசமான அக்கறை கொண்டிருக்கும் விடயம்

(i). குறிப்பிட்ட விடயம் கம்பனியாக இருக்குமிடத்து ஒரு மில்லியனை விஞ்சலாமெனினும் அதன் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 10 சதவீதத்தினை விஞ்சாததும் அல்லது உள்ள உத்தரவாதம் அல்லது நட்டோத்தரவாத தொகை அம்மூலதனத்தில் 10 சதவீதத்திற்கும் குறைவானதாக இருத்தல் வேண்டும்.

(ii). குறிப்பிட்ட விடயம் நிறுவனமொன்றாக இருக்குமிடத்து உள்ள உத்தரவாதம் அல்லது இழப்பீடு அதன் அனைத்துப் பங்காளர்களினதும் உதவப்பட்ட மொத்த மூலதனத்தின் 10 சதவீதத் திற்கும் குறைவாயிருத்தல் வேண்டும்.

குறிப்பிட்ட விடயத்தின் கடன் மதிப்பினைப் பொறுத்தவரை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் போதுமானது எனக் கருதுகின்ற அளவிற்கு அத்தகைய பிணையங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்தகைய கடன் வசதிகள் பற்றி அத்தகைய கடன்கள் வழங்கப்பட்ட ஒருகிழமைக்கிடையில் வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

# 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 47 (4) ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளை

*2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 47(4) ஆம் பிரிவின் கீழான நியதிகளில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது 2005 பெப்புருவரி 11 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் பணிப்பாளர் ஒருவருக்கு அல்லது அத்தகைய பணிப்பாளரின் நெருங்கிய உறவினருக்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட கடன் வசதிகள் தொடர்பாக பின்வரும் வரையறைகளுக்கு ஒப்புதலளித்துள்ளது.*

*(அ) 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 47 (3) இன் நியதிகளின்படி நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட தீர்மானத்தின் (அ) இலிருந்து (உ) வரையான காசு அல்லது காசுக் கணித்தான பிணையங்களினால் (விடயங்கள்) பிணையிடப்பட்ட கடன் வசதிகளைப் பொறுத்தவரையில் முன்னர் குறிப்பிடப்பட்ட தீர்மானங்களின் நியதிகளில் அனுமதிக்கப்பட்ட பிணையத்தின் வரையறை வரையில்.*

*(ஆ) ஒப்புதலளிக்கப்பட்ட பிணையங்களின் ஏனைய வகைகளினால் பிணையிடப்பட்ட கடன் வசதிகளைப் பொறுத்தவரையில், ரூபா 5 இலட்சம் (ரூ.500,000) வரை*

*(இ) கொடுகடன் அட்டையின் வழங்கல் மூலமான கடன் வசதிகளைப் பொறுத்தவரையில், தொடர்பான வங்கியின் மற்றைய வாடிக்கையாளர்களுக்கான அதே நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு ரூபா ஐந்து இலட்சம் வரையில் (ரூ.500,000) வழங்கலாம்.*

***ஓப். சுனில் மென்டிஸ்***

ஆளுநர்

கொழும்பு

*2005 பெப்புருவரி 11*

**சுற்றறிக்கை எண் 02/04/004/0010/001**

*வங்கி மேற்பார்வைத் திணைக்களம்*
*2005 பெப்புருவரி 18*

*உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம் பெற்ற*

*சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் முதன்மை*

*நிறைவேற்று அலுவலர்கள்*

*அன்புள்ள ஐயா*

**மாதாந்த காலாண்டு இணக்க அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

*2001 ஒத்தோபர் 26 ஆம் நாளிடப்பட்ட வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் சுற்றறிக்கை மற்றும் 2005.02.17 ஆம் திகதி நடத்தப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்ட விடயம் தொடர்பானது.*

*உடன்பாடு காணப்பட்டவாறு இத்திணைக்களத்திற்கு மாதாந்த காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகின்ற இணக்க அறிக்கைகளில் தொடர்பான வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலர் கையெழுத்திட வேண்டும் என அனைத்து வங்கிகளுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

*2005 பெப்புருவரி மாதத்திலிருந்து சமர்ப்பிக்கப்படவுள்ள இணக்க அறிக்கையுடன் இது நடைமுறைக்கு வரும்.*

*உங்கள் உண்மையுள்ள*

**ஒப். பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

படி - செயலாளர் நாயகம் இ.வ.சங்கம்

**சுற்றறிக்கை எண் 02/04/003/0400/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
*2005 பெப்புருவரி 18*

*உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம் பெற்ற*
*சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும்*
*முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

*அன்புள்ள ஐயா*

## பத்திரிகையில் வங்கிக் கணக்குகளை பிரசுரிப்பதன் மூலமாக பொதுமக்களுக்கு வெளிப்படுத்தல்

மேற்குறிப்பிட்ட விடயம் பற்றிய 1999.01.29 ஆம் நாளிடப்பட்ட பீஎஸ் 62/97 மற்றும் 2003.01.30 ஆம் நாளிடப்பட்ட 02/04/003/0400/001 எண் கொண்ட எமது சுற்றறிக்கைகள் மற்றும் 17.02.2005 ஆம் நாள் நடைபெற்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் தொடர்பானது.

உடன்பாடு காணப்பட்டவாறு, பத்திரிகைகளில் பின்வரும் நியதி மற்றும் முன்மதி சார்ந்த விகிதங்களை நிதியியல் கூற்றுக்களின் காலாண்டு, வருடாந்த வெளியீடுகளில் வெளிப்படுத்த வேண்டுமென அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

- நியதி மூலதன போதுமை விகிதம்
- நியதி திரவச்சொத்து விகிதம் (உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவும் தனித்தனியாகக் காட்டப்பட வேண்டும்)
- செயற்படா முற்பணங்களின் விகிதம் (மொத்த செயற்படா முற்பண விகிதமும் தேறிய செயற்படா முற்பண விகிதமும்)

இச்சுற்றறிக்கையானது, 2005 இன் முதலாம் காலாண்டிலிருந்து தொடங்குகின்ற வங்கிகளின் நிதியியல் கூற்றுக்களுக்கும் பொருந்தக் கூடியதாயிருக்கும்.

உங்கள் உண்மையுள்ள

**ஒப். பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

படி- செயலாளர் நாயகம்/ இ.வ.சங்கம்

*வங்கி மேற்பார்வைத் திணைக்களம்*
*2005 மார்ச்சு 07*

*அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*

*அன்புள்ள ஐயா/ அம்மணி*

**2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) பணிப்புரைகள்**

மேற்குறிப்பிட்ட பணிப்புரைகளை நான் இத்துடன் இணைத்துள்ளேன். இது இன்றிலிருந்து நடைமுறைக்கு வரும். இது கிடைத்தமை பற்றி தயவுசெய்து அறியத்தரவும்.

உங்கள் உண்மையுள்ள

**பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

## 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் என்பனவற்றினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம்

*2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் என்பனவற்றினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு (1) (இ) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்*

**சுனில் மெண்டிஸ்**

ஆளுநர்

கொழும்பு

*2005 மார்ச்சு 07*

## 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட (தனியொரு கடன்பாட்டாளரின் வரையறை) பணிப்புரைகள்

1. 2005 மார்ச்சு 07 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரவிருக்கும் இப்பணிப்புரைகளை 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட (தனியொரு கடன்பாட்டாளரின் வரையறைகள்) பணிப்புரை என எடுத்துக்காட்டலாம்.

2. உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று, 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் (இதனகத்துப் பின்னர் "சட்டம்" என அழைக்கப்படும்) மற்றும் 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் என்பனவற்றினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46 (1) இ(i) இல் குறிப்பிடப்பட்ட வகையைச் சார்ந்த எந்த ஒரு வாடிக்கையாளருக்கும் அல்லது சட்டத்தின் பிரிவு 46 (1) இ(ii) இன் நியதிகளுக்கிணங்க கடன்பாடுகள் கூட்டப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட வகைகளின் கீழ்வரும் எந்த ஒரு வாடிக்கையாளருக்கும் அத்தகைய வங்கியின் முன்னைய நிதியியல் ஆண்டின் இறுதியில் அதன் மூலதன நிதியில் முப்பது (30%) சதவீதத்தினை விஞ்சும் விதத்தில் கடன் வசதிகளை வழங்கக்கூடாது.

3. பிரிவு 46 (1) இ(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வகைக்கு உரிய எந்த ஒரு வாடிக்கையாளருக்கும் வழங்கப்பட்ட கடன் வசதிகள் அல்லது பிரிவு 46 (1) இ(i) இந்நியதிகளில் கூட்டப்பட வேண்டும் என தேவைப்படுத்தப்பட்ட கடன் வசதிகளுக்குரியவர் தொடர்பான வகையில் உள்ள எந்த வாடிக்கையாளர்களுக்குமென கூட்டு மொத்தத்தில் வழங்கப்பட்ட கடன் வசதிகள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலதன நிதியத்தில் பதினைந்து சதவீதத்தினை (15%) விஞ்சுமாயின், அத்தகைய அனைத்து வாடிக்கையாளர்களினதும் கூட்டு மொத்தத்தில் வழங்கப்பட்ட கடன் வசதிகள் கடந்த நிதியாண்டின் இறுதியில் காணப்பட்ட அத்தகைய வங்கியின் மொத்தக் கடன் வசதிகளில் ஐம்பது சதவீதத்தினை (50%) விஞ்சக்கூடாது.

4. பந்திகள் 2 மற்றும் 3 இன் கீழ் வழங்கப்படக்கூடிய கடன் வசதியின் ஆகக்கூடிய தொகையினைக் கணிக்கும் நோக்கத்துக்காக, ஏற்கனவேயுள்ள வசதிகளின் வரையறைகள் அல்லது அனைத்து கடன் வசதிகளினதும் வெளிநின்ற தொகை ஆகியவற்றில் எது கூடுதலானதோ அதுவும் இப்பணிப்புரைகள் செயற்பாட்டிற்கு வந்த நாளுக்கு முன்னர் அல்லது பின்னர் வழங்கப்பட்டவையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

5. சட்டத்தின் பிரிவு 46(1) இ(i) இல் குறிப்பிடப்பட்ட வகைக்குரிய வாடிக்கையாளரில் எந்த ஒருவருக்கும் அல்லது சட்டத்தின் பிரிவு 46 (i) இ(ii) இன் நியதிகளில் மொத்தத் தொகை தேவைப்படுத்தப்பட்ட கடன் வசதிகளுக்குரியவர் தொடர்பான வகைகளுக்குரிய வாடிக்கையாளர்களுக்கான கூட்டுத்தொகையில், உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவொன்றினால் அல்லது உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவொன்றினால் வழங்கப்பட்ட கடன் வசதிகள் தொடர்பில் கூட்டுத்தொகையைக் கணிக்கும்பொழுது அது பந்திகள் 2 மற்றும் 3 இல குறித்துரைக்கப்பட்ட வரையறைகளை விஞ்சக்கூடாது.

6. கீழே காட்டப்பட்டுள்ள (i) இலிருந்து (iv) வரையான விடயங்களைக் கொண்ட பிணைக்கெதிராக சட்டத்தின் பிரிவு 46(1) இ (i) அல்லது பிரிவு 46(1) இ (ii) இல் குறிப்பிடப்பட்ட வகைகளுக்குரிய எந்த ஒரு வாடிக்கையாளருக்கும் வழங்கப்பட்ட கடன் வசதிகள் தனியொரு கடன்பாட்டாளர் வரையறையிலிருந்தும் நீக்கப்பட வேண்டும்.

(i) காசு

(ii) அரசு/ மத்திய வங்கிப் பிணைகள்

(iii) திறைசேரி/ மத்திய வங்கி உத்தரவாதங்கள்

(iv) ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, உலக வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் பெற்றுக்கொள்ளத்தக்க மற்றைய நிறுவனங்கள் என்பனவற்றினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள்

7. பந்திகள் 2 மற்றும் 3 இல் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு மேலதிகமாக, உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று பின்வருவனவற்றிற்கு கடன் வசதிகளை வழங்கலாம்.

(i) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு;

(ii) இலங்கை மின்சபைக்கு;

(iii) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு; அல்லது

(iv) பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உட்கட்டமைப்பு செயற்றிட்டமொன்றிற்கு நேரடியாகப் பயன்படுவதற்காக கடன் வசதிகளைப் பெறுகின்ற வாடிக்கையாளர்/வாடிக்கையாளர்களுக்கு

(அ) உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டமொன்றில் நேரடியாக ஈடுபடுவதற்காக ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொண்டுள்ள வாடிக்கையாளர்/ வாடிக்கையாளர்கள்.

(ஆ) கடன்வழங்கும் வங்கியினால் வழங்கப்படுகின்ற கடன் வசதிகள் நீங்கலாக, அச் செயற்றிட்டத்தின் நிதியிடலில் குறைந்தது ஐம்பது சதவீதமாவது (50%) இலங்கைக்கு வெளியேயுள்ள மூலங்களினால் அல்லது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கூட்டிணைப்பின் மூலமாக அத்துடன்/ அல்லது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளினால் நிதியிடப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) அத்தகைய வர்த்தக வங்கிகள் கடன் வசதிகளை வழங்குவதற்கு முன்னர் (அ) இலும் (ஆ) இலும் உள்ள நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமை பற்றி தான் திருப்திப்படுவது பற்றி வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமாக உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும்.

8. உரிமம் பெற்ற வர்த்தக வங்கியானது பின்னர் அதன் மூலதன நிதியத்தினை பின்வருவனவற்றினூடாக அதிகரிக்குமிடத்து;

(i) புதிய பங்குவழங்கல் அல்லது உரிமம் வழங்கல் அல்லது புதிதாக சாட்டப்பட்ட மூலதனம் என்பனவற்றிலிருந்து பெறப்பட்ட நிதியத்தினைப் பொறுத்தவரை பந்திகள் 2 மற்றும் 3 இன் கீழான தனியொரு கடன்பாட்டாளருக்ககான வரையறைகளை பங்குவழங்கல்கள் உரிமம் வழங்கல்கள் அல்லது வங்கியினால் பெறப்பட்ட புதிய சாட்டுதல் பெறப்பட்ட நிதிகள் பெறப்பட்டு அவற்றின் ஏடுகளில் கணக்கு வைக்கப்பட்ட நாளிலிருந்து அதிகரித்த மூலதன நிதியங்களின் அடிப்படையில் கணிக்க முடியும்.

(ii) அத்தகைய இலாபங்களை மூலதன மயப்படுத்தியதன் மூலம், மூலதன நிதியங்களில் ஏற்பட்ட அத்தகைய அதிகரிப்புக்கள் வெளிக்கணக்காய்வாளர்களினால் உறுதிப்படுத்தப்படுமிடத்து, பந்திகள் 2 மற்றும் 3 இன் கீழான தனியொரு கடன்பாட்டாளர் வரையறைகளை அதிகரித்த மூலதன நிதியங்களின் அடிப்படையில் கணிக்கப்பட முடியும்.

9. நடைமுறையாண்டில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றிற்கு இழப்புக்கள் ஏற்படுமிடத்து அல்லது வங்கி இலாபக் கொடுப்பனவு அல்லது இலாபங்களை வெளியில் அனுப்புதல் போன்ற வற்றை உள்ளிட்ட எந்த ஒரு காரணத்தினாலும் அதன் மூலதன நிதியம் குறைவடையுமாயின் பந்தி 2 மற்றும் 3 இன் கீழான தனியொரு கடன்பாட்டாளர் வரையறை குறைவடைந்த மூலதன நிதியத்தின் அடிப்படையில் கணிக்கப்பட வேண்டும்.

10. 1999 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) பணிப்புரைகள் மற்றும் 2004 ஆம் ஆண்டு யூலை 16 ஆம் நாளிடப்பட்ட தனியொரு கடன்பாட்டாளர் வரையறை மீதான சுற்றறிக்கை என்பனவற்றிற்கிணங்க தமது முற்பணங்களின் அடிப்படையில் தமது தனியொரு கடன்பாட்டாளர் வரையறைத் தளத்தினை இதுவரை கொண்டிருந்ததும் அத்துடன் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட நடைமுறைக்கடன் வசதிகளை ஈடுசெய்வதற்கான இப்பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்டவாறு தனியொரு கடன்பாட்டாளர் வரையறையினை பேணுவதற்கு போதுமான நிதியினைக் கொண்டிருந்ததுமான இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு நடைமுறைக் கடன் வசதிகளை ஈடுசெய்யும் விதத்தில் பற்றாக்குறையாகவுள்ள மூலதன நிதியத்தில் குறைந்தது ஐம்பது சதவீதத்தினை உள்ளீடு செய்வதற்கு 2005 யூன் 30ஆம் நாள் வரையிலும் இப் பணிப்புரையினை பூர்த்தி செய்வதற்கான மீதி மூலதன நிதியத்தினை உள்ளீடு செய்வதற்கு 2005 திசெம்பர் 31 ஆம் நாள் வரையிலும் கால அவகாசம் வழங்கப்பட்டது.

11. இப்பணிப்புரைகளை எந்த ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் மீறி நடக்கின்றவிடத்து, அத்தகைய வங்கி அத்தகைய பணிப்புரைகளை தொடர்ந்து மீறிநடக்கின்ற வரையில் அத்தகைய வங்கிகள் இலாபங்களை வெளியில் அனுப்பவோ அல்லது பங்கிலாபங்களைக் கொடுப்பனவு செய்யவோ முடியாது.

12. இப்பணிப்புரைகள், 2003 ஆம் ஆண்டு நவெம்பர் 18 ஆம் நாளன்றும் மற்றும் 2002 திசெம்பர் 24 ஆம் நாளன்றும் திருத்தப்பட்டவாறான 1999 ஆம் ஆண்டின் வங்கித்தொழில் (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) சட்டத்தின் 2 ஆம் இலக்க பணிப்பரையையும் தனியொரு கடன்பாட்டாளர் வரையறை பற்றி இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து வழங்கப்பட்ட 2004 யூலை 1 ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கையையும் நீக்குகின்றன.

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2005 மார்ச்சு 17

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த

வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

## பணிப்பாளர்களுக்கும் தொடர்பான கம்பனிகளுக்குமான கடன் வசதி

2005.03.17 ஆம் நாளன்று நடைபெற்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டத்தில் உங்களுக்கு தெரிவிக்கப்பட்டவாறு, மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான பணிப்புரைகள் இது தொடர்பாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளுடன் ஒத்திருக்கும் விதத்தில் திருத்தப்பட்டிருக்கின்றன.

வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76 ஜே (1) இன் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கான திருத்தம் இணைக்கப்பட்டுள்ளமையினைத் தயவுசெய்து கவனிக்கவும்.

உங்கள் உண்மையுள்ள

**ஒப். பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

படி: செயலாளர் நாயகம்/இ.வ.சங்கம்

## 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் வங்கித்தொழில் சட்டம்

2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76 ஜே (1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கான திருத்தம்.

**ஒப். சுனில் மெண்டிஸ்**

ஆளுநர்

கொழும்பு

2005 மார்ச்சு 17

### பிரிவு 76(ஜே) (1) இன் கீழான பணிப்புரைகளுக்கான திருத்தம் பணிப்பாளர்களுக்கும் தொடர்பான கம்பனிகளுக்குமான கடன் வசதிகள்

பணிப்பாளர்களுக்கும் தொடர்பான கம்பனிகளுக்குமான கடன் வசதிகள் பற்றி 1997.11.21 ஆம் நாளன்று நாணயச்சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

(1) துணைப்பிரிவு 1.1 இனை நீக்கிவிட்டு பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம்

1.1 "அதன் எந்த ஒரு பணிப்பாளரும் அல்லது அத்தகைய பணிப்பாளரின் நெருங்கிய உறவினரும் ரூபா ஐந்து இலட்சத்தினை (ரூ.500,000) விஞ்சுமிடத்து, அத்துடன் அத்தகைய கடன்வழங்கலானது கொடுகடன் அட்டையை வழங்குவதன் மூலம் மேற்கொள்ளப் பட்டிருக்குமிடத்து அது நீங்கலாக அத்தகைய கடன் வசதிகள் கீழே பிரிவு 7 இல் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய குறித்துரைக்கப்பட்ட பிணையின் மூலம் பிணையிடப் படுகின்றன.

கொடுகடன் அட்டையின் வழங்கல் மூலம் கடன் வசதிகள் வழங்கப்படுமிடத்து பிரயோகிக்கத்தக்க வரையறை ரூபா ஐந்து இலட்சமாக விளங்கும். (ரூ.50,000) அத்தகைய கடன்வசதிகள் தொடர்பான வங்கியின் மற்றைய வாடிக்கையாளர்களுக்கான அதே நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டனவாக இருக்கும்.

எனினும், கடன் வசதியானது கீழேயுள்ள 7.1 இலிருந்து 7.5 வரையான துணைப்பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட பிணையத்தினால் பிணையிடப்பட்டிருக்குமிடத்து, கடன் வசதியானது தொடர்பான துணைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட பிணையத்தின் எல்லை வரை வழங்கப்படலாம்."

2. பிரிவு 6 இனை உடனடுத்து பிரிவு 6.1 இனை உட்புகுத்துவதன் மூலம்:

6.1 எந்த ஒரு நிதியியல் ஆண்டுக்காலத்திலும் பிரிவு 1 இன் கீழ் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியினால் எந்த ஒரு கடன் வசதியும் வழங்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய கடன் வசதிகள் முழுமையாக மீளச்செலுத்தப்படும் வரை அந்நிதியாண்டிற்கான கணக்குகளிலும் அதனைத் தொடர்ந்து வரும் நிதியாண்டுகளுக்கான கணக்குகளிலும் காட்டப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட திருத்தம் உடனடியாகத் தொழிற்பாட்டிற்கு வரும்.

## 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் என்பனவற்றினால் திருத்தப்பட்டவாறன 1985 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம்

*மற்றும் 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டம் 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச் சட்டம்)என்பனவற்றினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76 ஜே (1) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்.*

**ஒப். சுனில் மென்டிஸ்**

ஆளுநர்

கொழும்பு

*2005 மார்ச்சு 18*

## 2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் (தனியொரு கடன்பாட்டாருக்கான வரையறை) பணிப்புரை

1. *2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட (தனியொரு கடன்பாட்டாளருக்கான வரையறை) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் இது 2005 மார்ச்சு 21 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

2. *வங்கித்தொழில் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு பங்கு மூலதனத்தினைக் கொண்டிருக்கின்ற உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்று, முன்னைய நிதியியல் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான அத்தகைய வங்கியின் மூலதன நிதியத்தில் முப்பது சதவீதத்தினை (30%) விஞ்சுகின்ற விதத்தில் கடன் வசதிகளை வழங்கக்கூடாது;*

   2.1 *ஏதாவதொரு கம்பனி அரச கூட்டுத்தாபனம், நிறுவனம், ஆட்கள் அல்லது தனிப்பட்டவர்களைக் கொண்ட அமைப்பிற்கு;*

   2.2 *கூட்டு மொத்தத்தில்*

      2.2.1 *தனிப்பட்ட ஒருவர், அவரது நெருங்கிய உறவினர் அல்லது அவர் கணிசமான அக்கறை கொண்டுள்ள கம்பனி அல்லது நிறுவனமொன்றுக்கு*

      2.2.2 *கம்பனியொன்றும் பினவருவனவற்றில் ஏதாவதொன்று அல்லது அதற்கும் கூடுதலானது*

         2.2.2.1 *அதன் துணை நிறுவனங்கள்*

         2.2.2.2 *அதன் உடமைக் கம்பனி*

         2.2.2.3 *அதன் இணைக்கம்பனி*

         2.2.2.4 *அதன் உடமைக் கம்பனியின் துணை நிறுவனம்; அல்லது*

         2.2.2.5 *அத்தகைய கம்பனி அல்லது அதன் துணை, அல்லது அதன் உடமைக் கம்பனி அல்லது அதன் உடமைக் கம்பனியின் துணை நிறுவனம் கணிசமான அக்கறை கொண்டிருக்கும் கம்பனி ஒன்று.*

3. *மேலே பந்தி 2.2.1 இல் குறிப்பிடப்பட்ட வகைக்குரிய எந்த ஒரு வாடிக்கையாளருக்கும் அல்லது பந்தி 2.2.2 இன் நியதிகளுக்கிணங்க கூட்டுமொத்தம் தேவைப்படுத்தப்பட்ட கடன் வசதிக்குரியவர்*

தொடர்பான எந்த ஒரு வாடிக்கையாளருக்குமான கூட்டு மொத்தத்தில் வழங்கப்பட்ட கடன் வசதிகள் உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மூலதன நிதியத்தில் பதினைந்து (15%) சதவீதத்தினை விஞ்சுமாயின் அத்தகைய அனைத்து வாடிக்கையாளருக்குமாக மொத்தமாக வழங்கப்பட்ட கடன் வசதிகள் முன்னைய நிதியாண்டின் இறுதியில் இருந்தவாறான அத்தகைய வங்கியின் மொத்தக் கடன்வழங்கலில் ஐம்பது சதவீதத்தினை (50%) விஞ்சக்கூடாது.

4. பந்திகள் 2 மற்றும் 3 இன் கீழ் வழங்கப்படக்கூடிய கடன் வசதியின் ஆகக்கூடிய தொகையினைக் கணிக்கும் நோக்கத்திற்காக, ஏற்கனவேயுள்ள வசதியின் வரையறைகள் அல்லது அனைத்து கடன் வசதிகளினதும் வெளிநின்ற தொகை ஆகியவற்றில் எது கூடுதலானதோ அதுவும் இப்பணிப்புரைகள் செயற்பாட்டிற்கு வந்த நாளுக்கு முன்னர் அல்லது பின்னர் வழங்கப்பட்டவையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

5. கீழே 5.1 இலிருந்து 5.4 வரையில் காட்டப்பட்டுள்ள விடயங்களைக் கொண்ட பிணையங்களுக்கெதிராக மேலேயுள்ள பந்தி 2.1 இல் அல்லது 2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளுக்குரிய எந்த ஒரு வாடிக்கையாளருக்கும் வழங்கப்பட்ட கடன் வசதிகள் தனியொரு கடன்பாட்டாளர் வரையறையிலிருந்தும் நீக்கப்பட வேண்டும்.

5.1 காசு

5.2 அரச/ மத்திய வங்கி உத்தரவாதங்கள்

5.3 திறைசேரி/ மத்திய வங்கி உத்தரவாதங்கள்

5.4 ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, உலக வங்கி அல்லது இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க மற்றைய நிறுவனங்களினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள்

6. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்று பந்திகள் 2 மற்றும் 3 இல் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு விஞ்சியும் கடன் வசதிகளை வழங்க முடியும்.

6.1 இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு

6.2 இலங்கை மின்சபைக்கு

6.3 கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு; அல்லது

6.4 பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டமொன்றில் நேரடியாகப் பயன்படுத்தப்படுவதற்காக வாடிக்கையாளர்/ வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ள கடன் வசதிகள்

6.4.1 உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களில் நேரடியாக ஈடுபடுவதற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள வாடிக்கையாளர்/ வாடிக்கையாளர்களுக்கு

6.4.2 அத்தகைய செயற்றிட்டத்திற்கான நிதியிடலில் குறைந்தது ஐம்பது சதவீதம் (50%) இலங்கைக்கு வெளியேயுள்ள மூலங்களினால் அல்லது கடன் வசதியை வழங்குகின்ற வங்கி நீங்கலாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் அத்துடன்/ அல்லது உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கூட்டமைப்பினால் நிதியிடப்படுதல் அத்துடன்

6.4.3 அத்தகைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் கடன் வசதிகளை வழங்குவதற்கு முன்னர் 6.4.1 இலும் 6.4.2 இலும் உள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை பற்றி தான் திருப்திப்படுவது பற்றி வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமாக உறுதிப்படுத்தியிருத்தல்.

7. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி பின்னர் அதன் மூலதன நிதியத்தினை பின்வருவனவூடாக அதிகரிக்குமிடத்து;

7.1 புதிய பங்கு வழங்கல் அல்லது உரிமம் வழங்கல் அல்லது புதிதாகச் சாட்டப்பட்ட மூலதனம் என்பனவற்றிலிருந்து பெறப்பட்ட நிதியத்தினைப் பொறுத்தவரை, பந்திகள் 2 மற்றும் 3 இன் மூலமான தனியொரு கடன்பாட்டாளருக்கான வரையறைகளை பங்கு வழங்கல்கள், உரிமம் வழங்கல்கள் அல்லது வங்கியினால் பெறப்பட்ட புதிதாக சாட்டுதல் செய்யப்பட்ட நிதிகள் பெறப்பட்டு அவற்றின் ஏடுகளில் கணக்கு வைக்கப்பட்ட நாளிலிருந்து அதிகரித்த மூலதன நிதியங்களின் அடிப்படையில் கணிக்க முடியும்.

7.2 அத்தகைய இலாபங்களை மூலதன மயப்படுத்தியதன் மூலம், பந்திகள் 2 மற்றும் 3 இன் கீழான தனியொரு கடன்பாட்டாளர் வரையறைகளை, மூலதன நிதியங்களில் ஏற்பட்ட அத்தகைய அதிகரிப்புக்கள் வெளிக்கணக்காய்வாளர்களினால் உறுதிப்படுத்துமிடத்து அதிகரித்த மூலதன நிதியங்களின் அடிப்படையில் கணிக்க முடியும்.

8. நடைமுறையாண்டில் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றிற்கு இழப்புக்கள் ஏற்படுமிடத்து அல்லது வங்கிகளின் கொடுப்பனவு அல்லது இலாபங்களை வெளியில் அனுப்புதல் போன்றவற்றை உள்ளடக்கிய எந்த ஒரு காரணத்தினாலும் அதன் மூலதன நிதியம் குறை வடையுமாயின் பந்தி 2 மற்றும் 3 இன் கீழான தனியொரு கடன்பாட்டாளர் வரையறை குறை வடைந்த மூலதன நிதியத்தின் அடிப்படையில் கணிக்கப்பட வேண்டும்.

9. இப்பணிப்புரைகளை எந்த ஒரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் மீறி நடக்கின்ற விடத்து, அத்தகைய வங்கி அத்தகைய பணிப்புரைகளை தொடர்ந்து மீறி நடக்கின்ற வரையில் அத்தகைய வங்கிகள் இலாபங்களை வெளியில் அனுப்பவோ அல்லது பங்கிலாபங்களைக் கொடுப்பனவு செய்யவோ முடியாது.

10. இப்பணிப்புரைகள், 2003 ஆம் ஆண்டு நவெம்பர் 18 ஆம் நாளன்று திருத்தப்பட்டவாறான 1997.11.21 ஆம் நாளிடப்பட்ட வங்கித்தொழில் சட்ட (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) பணிப்புரைகளை நீக்குகின்றன.

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2005 மார்ச்சு 31

02/04/002/0012/002

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் (உள்நாடு)
உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்களினதும்
முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா

**வங்கிப் பணிப்பாளர்களின் நியமனம் (திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 42 ஆம் பிரிவு)**

வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 42(1) இன் நியதிகளின்படி, உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் பணிப்பாளராக நியமிக்கப்படவுள்ள, தெரிவு செய்யப்படவுள்ள அல்லது பெயர் குறிப்பிடப்படவுள்ள அல்லது அத்தகைய வங்கியின் பணிப்பாளராக தொடர்ந்துமிருக்க வேண்டிய ஆள் அத்தகைய பதவியைக் கொண்டிருப் பதற்கு தகுதியான, பொருத்தமான ஆளாக இருக்க வேண்டியதுடன் வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது மற்றைய எந்த ஒரு எழுதப்பட்ட சட்டத்தின் மூலமும் அவ்வாறு செய்யப்படுவதிலிருந்து தடுக்கப்படவும் கூடாது. ஆள் ஒருவர் தகுதியான பொருத்தமான ஆள் தானா என்பதனை தீர்மானிப்பதற்கு பரிசீலனைக்கு எடுக்கப்படக்கூடிய குறிப்பிட்ட விடயங்களைப் பற்றி சட்டம் எடுத்துக் கூறுகின்றது.

மேலும், சட்டத்தின் பிரிவு 42(4) இன் நியதிகளில் அனைத்து வங்கிகளும் இப்பிரிவின் கீழ் ஒப்புதலுக்காக முன்மொழியப்பட்ட/ நியமிக்கப்பட்ட/ தெரிவு செய்யப்பட்ட/ பெயர் குறிப்பிடப்பட்ட பணிப்பாளர்களின் விபரங்களை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.42(5). உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் சபைகள், பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்படவுள்ள/தெரிவு செய்யப்படவுள்ள/ அல்லது பெயர் குறிப்பிடப்படவுள்ள எந்த ஒரு ஆட்களுடனும் தொடர்பான போதுமான தகவல்களை அத்தகைய நியமனத் தேர்வு அல்லது பெயர் குறிப்பிடல் இடம்பெறுவதற்கு முன்னதாக சபைக்கு கிடைக்கச் செய்வதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் தற்போதைய பணிப்பாளர்கள் பற்றிய தொடர்பான தகவல்களை பணிப்பாளர் சபைக்கு கிடைக்கச் செய்வதும் அவசியமானதாகும்.

இந்நோக்கத்திற்காக, நாங்கள் அனைத்து பணிப்பாளரிடமிருந்தும் தேர்வுக்காக நியமிக்கப்படவுள்ள அல்லது வங்கியின் பணிப்பாளர்களாக நியமிக்கப்படவுள்ள அல்லது சபைக்கு பெயர் குறிப்பிடப்படவுள்ள ஆட்களிடமிருந்தும் பெறப்பட வேண்டிய வரைவுச் சத்தியக்கடதாசிக்கு மேலதிகமாக, சட்டத்தின் மற்றைய ஏற்பாடுகளின் கீழ் வங்கியின் பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்படும் இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்துவதற்கு வங்கியினை இயலச் செய்வதற்காக, அத்தகைய ஆட்களிடமிருந்து பிரகடனம் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். இந்நோக்கத் திற்காக, இணைப்பு 2 இல் உள்ளவாறான வரைவுப் பிர கடனமொன்றினைப் பயன்படுத்தலாம். பணிப்பாளராக நியமிப்பதற்கு தேர்வு செய்வதற்கு அல்லது பெயர் குறிப்படுவதற்கான ஒப்புதலை வங்கி எதிர்பார்க்கும்பொழுது ஒவ்வொரு வங்கியினதும் செயலாளர், நியமிக்கப்படவுள்ள அத்தகைய ஒவ்வொரு ஆள் தொடர்பான சத்தியக்கடதாசி மற்றும் பிரகடனத்தின் பிரதிகளை பிரிவு 42 இன் துணைப்பிரிவு (4) இல் குறித்துரைக்கப்பட்ட தகவல்களுடன் சேர்த்து வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

தற்போதைய பணிப்பாளர்களைப் பொறுத்தவரையில் 2005 ஏப்பிறல் 10 ஆம் நாளன்று பணிப்பாளர் பதவியை வகிக்கும் சபையிலுள்ள ஒவ்வொரு பணிப்பாளர் தொடர்பான பிரகடனங்களும் சத்தியக்கடதாசியும் பெறப்பட்டு பிரதிகள் மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் தொடர்பான வங்கியின் ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கு முன்னர் தொடர்ந்துமிருக்கும் பணிப்பாளர் தொடர்பான பிரகடனத்தையும் சத்தியக்கடதாசியையும் பெற்று அவற்றின் பிரதிகளை மத்திய வங்கிக்கு ஆண்டுதோறும் சமர்ப்பித்தல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

**ஒப். பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

பிரதி: திரு.உபாலி த சில்வா
செயலாளர் நாயகம் இலங்கை வங்கியாளர் சங்கம்
மாடி 8, சிலிங்கோ ஹவுஸ்
69, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01.

## வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 42(2) இன் நியதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியக்கடதாசி

.................................................................... ஆகிய இடத்தைச் சேர்ந்த .................................................................................... ஆகிய நான் ஒரு பௌத்தன்/ இந்து / முஸ்லீம் என உண்மையுடனும் நேர்மையுடனும் வலியுறுத்தி / கிறிஸ்தவர் / கத்தோலிக்கர் என சத்தியப்பிரமாணம் செய்து பின்வருமாறு தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நான் மேற்குறிப்பிட்ட பெயரையுடையவரென (உறுதிப்படுத்துவதுடன், சான்றுரைப்பதுடன்) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட ................................................................ ஆகிய உரிமம் வழங்கப்பட்ட வர்த்தக வங்கியின்/ உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் பணிப்பாளராக/ பணிப்பாராக தேர்வு செய்யப்பட்டுள்ளேன்/பணிப்பாளராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளேன்.

(ஆ) நான் பின்வரும் கல்விசார்/ தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ளேன் என்பதனை (உறுதிப்படுத்துகின்றேன்/ தெரிவித்துக் கொள்கிறேன்)

(இ) வங்கித்தொழில், நிதி, வியாபாரம் அல்லது நிருவாகம் அல்லது வேறு ஏதாவது தொடர்பான துறைகளில் கீழே காட்டப்பட்டவாறு நான் போதுமான அனுபவங்களை கொண்டுள்ளேன் என்பதனை (உறுதிப்படுத்துகின்றேன்/ தெரிவித்துக் கொள்கின்றேன்)

(ஈ) நான் ஆணைகளுடன் தொடர்பான விதத்தில் மோசடி, ஏமாற்று, நேர்மையீனம் அல்லது ஏனைய எந்த ஒரு பிழையான நடவடிக்கைகளில் எத்தவறுகைகளையும் புரிந்திருக்கின்றேன் என்பதனை ஒழுங்குமுறைப்படுத்தல் அல்லது மேற்பார்வை அதிகாரசபை, தொழில்சார் அமைப்பு, ஏதாவதொரு விசாரணை ஆணைக்குழு, நியாயாதிக்க அல்லது இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள சட்டங்களின்படி நிறுவப்பட்ட வேறு சபைகள் எதுவும் கண்டறியவில்லை என (உறுதிப்படுத்துகின்றேன்/ தெரிவித்துக் கொள்கின்றேன்)

(உ) நான் ஆணைகளுடன் தொடர்பான விதத்தில் மோசடி, ஏமாற்று, நேர்மையீனம் அல்லது ஏனைய எந்த ஒரு பிழையான நடவடிக்கைகளுடனும் தொடர்பான நடவடிக்கைகளைப் புரிந்ததாக ஒழுங்கு முறைப்படுத்தல் அல்லது மேற்பார்வை அதிகாரசபை, தொழில்சார் அமைப்பு, ஏதாவதொரு விசாரணை ஆணைக்குழு; நியாயாதிக்கசபை அல்லது இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள சட்டங்களின்படி நிறுவப்பட்டுள்ள வேறு சபைகள் எதனாலும் புலனாய்விற்கு அல்லது விசாரணைக்கு உள்படவில்லை என்று (உறுதியளிக்கின்றேன்/தெரிவித்துக் கொள்கிறேன்)

(ஊ) நிதியியல் முகாமைத்துவத்துடன் தொடர்பான குற்றங்களைப் புரிந்தமை அல்லது ஒழுக்கக்கேடுகளுடன் தொடர்பான எந்த ஒரு குற்றத்தினையும் புரிந்தமை தொடர்பாகவோ இலங்கையில் அல்லது வெளிநாடுகளிலுள்ள எந்த ஒரு நீதிமன்றங்களினாலும் நான் குற்றவாளியாகக் காணப்படவில்லை என்பதற்கு நான் (உறுதியளிக்கின்றேன்/ தெரியப்படுத்துகின்றேன்)

(எ) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ நான் விடுதலை பெறாத கடன் தீராரற்றலற்ற வராகவோ அல்லது வங்குரோத்தானவர் எனப் பிரகடனப்படுத்தவோ இல்லை என நான் (உறுதியளிக்கின்றேன்/ தெரியப்படுத்துகின்றேன்)

(ஏ) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ எந்த ஒரு நீதிமன்றத்தினதும் தீர்ப்பினையோ அல்லது கட்டளையையோ மதிக்கவோ அல்லது கடனை மீளச்செலுத்தவோ தவறவில்லை என நான் (உறுதியளிக்கின்றேன்/ தெரிவித்துக் கொள்கின்றேன்)

(ஐ) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றினால் நான் நல்ல மனநிலையைக் கொண்டிருக்கவில்லையென பிரகடனப்படுத்தப்படவில்லை என நான் (உறுதியளிக்கின்றேன்/ தெரிவித்துக் கொள்கின்றேன்)

(ஒ) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள எந்த ஒரு வங்கியிலும் அல்லது நிதியியல் நிறுவனத்திலும் அல்லது கம்பனிகளில் பணிப்பாளராக, முதன்மை நிறைவேற்று அலுவலராக அல்லது வேறு அலுவலராக செயலாற்றுவதிலிருந்து ஒழுங்குமுறைப்படுத்தல் அல்லது மேற்பார்வை அதிகாரசபையின் கட்டளைக்கிணங்க நான் அகற்றப்படவோ அல்லது இடைநிறுத்தப்படவோ இல்லை என நான் (உறுதியளிக்கின்றேன்/ தெரிவித்துக் கொள்கின்றேன்)

(ஓ) பின்வரும் எந்த ஒரு வங்கியிலும் அல்லது நிதியியல் நிறுவனத்திலும் நான் பணிப்பாளராகவோ முதன்மை நிறைவேற்று அலுவலராகவோ அல்லது அதிகாரபூர்வமான பதவியையோ வகிக்கவில்லையென நான் (உறுதியளிக்கின்றேன்/ தெரிவித்துக் கொள்கின்றேன்)

இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள

(i) உரிமம் இடைநிறுத்தப்பட்ட ஒன்றில்; அல்லது

(ii) மூடப்பட்டுவிட்ட அல்லது மூடப்பட்டுக் கொண்டிருக்கின்ற அல்லது கட்டாயமாக கலைக்கப்பட்ட நிறுவனமொன்றில்

(ஔ) 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தின் 42 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்/ உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் பணிப்பாளராக/ நியமிக்கப்பட்ட, பெயர் குறிக்கப்பட்ட அல்லது தேர்வு செய்யப்பட்டு பதவி வகிப்பதற்கு, எனது சிறந்த அறிவிற்கு எட்டிய வரையில் நான் தகுதியுடைய பொருத்தமான ஆள் என (உறுதியளிக்கின்றேன்/ தெரிவித்துக் கொள்கிறேன்)

| | |
|---|---|
| இங்கே காணப்படுகின்ற கூற்றுக்கள் உறுதிவழங்குபவர்/சான்றுரைப்பவருக்கு வாசித்துக் காட்டப்பட்டதென்றும் அவர் இவற்றின் உள்ளடக்கத்தினைப் புரிந்து கொண்டுள்ளனர் என்றும் அவற்றை உண்மையானவையென ஏற்றுக்கொண்டு சத்தியம் செய்துள்ளதுடன் அவரது கையொப்பத்தினை கொழும்பில் ........................................ இடத்தில் ........................................நான்........................................ வைத்துள்ளேன். | எனது முன்னிலையில்<br><br>சமாதான நீதவான் |

இணைப்பு 2

வங்கியின் பெயர்

**உரிமம் பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளராக முன்மொழியப்படவுள்ள/ நியமிக்கப்படவுள்ள/ தேர்வு செய்யப்படவுள்ள பெயர் குறிக்கப்படவுள்ள ஆளினால் வங்கித்தொழில் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம்**

(........................................................ இன் பொருத்தமான விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன)

1. **தனிப்பட்ட விபரங்கள்**

1.1 முழுப்பெயர்

1.2 அடையாள அட்டை எண்/ கடவுச்சீட்டு எண்

1.3 நிரந்தர முகவரி

1.4 தற்போதைய முகவரி

1.5 தொழில்

2. **வங்கித்தொழில் சட்டத்தின் 86 ஆம் பிரிவின் நியதியின்படி நெருங்கிய உறவினர்களின் பட்டியல்**

2.1 வாழ்க்கைத் துணையின் முழுப்பெயர்

அடையாள அட்டை எண்/ கடவுச்சீட்டு எண்

2.2 தங்கியிருக்கும் பிள்ளைகளின் பெயர்கள்

| முழுப்பெயர் | அடையாள அட்டை எண்/ கடவுச்சீட்டு எண் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

3. வங்கித்தொழில் சட்டத்தின் 86 ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க பணிப்பாளர்/ எதிர்கால பணிப்பாளர் கணிசமான அக்கறையைக் கொண்டிருக்கும் தொழில்முயற்சிகளின் பட்டியல்

4. அவர்/அவள் பணிப்பாளர் சபையின் உறுப்பினராகவுள்ள உரிமம் பெற்ற வங்கியின்/வங்கிகளின் பெயர்

(அத்தகைய பதவியினை வகித்த காலப்பகுதி தொடர்பான விபரங்களைத் தருக)

5. தற்பொழுது அவரால்/அவளால் அல்லது மேலே 2 இல் உள்ள அவரது நெருங்கிய உறவினர் களினாலும் மேலே 3 இல் உள்ள நிறுவனங்களில் பேணப்பட்ட கடன் வசதிகள் எதுவுமிருப்பின் அதுவும் பிணையும்

பிரகடனம்:

மேலேயுள்ள தகவல்கள் எனது சிறந்த அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவிதத்தில் உண்மையானவை எனவும் முழுமையானவையென்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். மேலே வழங்கப்பட்ட தகவல்கள் தொடர்பாக இனிமேல் எதும் மாற்றங்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் சாத்தியமானளவிற்கு விரைவாக தங்களுக்கு முழு விபரங்களையும் அறியத்தருவேன் என உறுதியளிக்கின்றேன்.

திகதி: கையொப்பம்

மேலே தரப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்பான வேறு ஏதாவது விளக்கங்கள்/தகவல்கள் ஏதுமிருப்பின் அவையும், முன்மொழியப்பட்ட/நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களின் பொருத்தமான தன்மையினை மதிப்பிடு வதற்கு பொருத்தமானதாகக் கருதப்படும் தகவல்களும்

வங்கிப் பணிப்பாளர் சபையின் குறிப்புக்கள்

திகதி: கம்பனிச் செயலாளரின் கையொப்பம்

தொடர்பு 02/17/402/0073/001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2005 ஏப்பிறல் 12

*அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினது*
*முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

*அன்புள்ள ஐயா*

**வங்கிகளின் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளை அதிகரித்தல்**

2005.04.05 ஆம் நாள் நடைபெற்ற கூட்டத்தில் தங்களுக்குத் தெரிவிக்கப்பட்டவாறு, நிதியியல் முறையின் உறுதிப்பாட்டையும் வலுவானதும் ஆற்றல் வாய்ந்ததுமான வங்கித்தொழில் முறையின் அக்கறையினையும் பேணுகின்ற அதன் பொறுப்பினது ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளையும் அவற்றின் மூலதனத்தினை ரூ.2500 மில்லியனுக்கு அதிகரித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதெனத் தீர்மானித்திருக்கிறது. இந்நோக்கத்திற்காக, காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 19(2) மற்றும் 19.(7) இன் கீழ் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட 1997.08.22 ஆம் திகதியிடப்பட்ட பணிப்புரைகளில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு மூலதனம் என்பது அடுக்கு 1 மூலதனத்தினை (மைய மூலதனம்) குறிக்கும். தற்பொழுது இத்தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருக்காத வர்த்தக வங்கிகள் தமது மூலதனத்தினை பின்வரும் விதத்தில் அதிகரிக்கலாம்.

- தற்போதுள்ள மூலதனத்தினை 2006 ஆம் ஆண்டின் இறுதியில் குறைவாக உள்ள அளவில் 50% இனால் தமது அதிகரித்துக் கொள்ளல் வேண்டும்.
- குறைவாகவுள்ள மீதி 2007 இறுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

அனைத்து வர்த்தக வங்கிகளும் அதிகரித்த மூலதனத் தேவைப்பாடுகளை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

மாண்புமிகு நிதியமைச்சரின் சம்மதத்திற்கு உட்பட்ட விதத்தில், புதிய வர்த்தக வங்கியொன்றிற்கான தேவைப்படுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.2500 மில்லியனாக உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 4(1) இன் கீழ் ஐ.அ.டொலர் 2 மில்லியனை அனுப்ப வேண்டுமென்ற தற்போதைய தேவைப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும் எனவும் தீர்மானித்திருக்கிறது.

தங்கள் வங்கியின் தற்போதைய நிலைமையினையும் அதற்கெதிரான கடந்த நிதியாண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியலைஅடிப்படையாகக் கொண்ட அதிகரிக்கப்பட்ட மூலதனத் தேவைப்பாடுகளையும் மதிப்பீடு செய்யுமாறு நீங்கள் தயைகூர்ந்து கேட்டுக்கொள்ளப்படுவதுடன் குறித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாட்டிற்கும் குறைவாக மூலதன மட்டம் காணப்படுமிடத்து மூலதனத்தினைப் பெருக்குவதற்கு கால நிர்ணயம் செய்யப்பட திட்டமொன்றுடன், 2005 யூன் 30ஆம் நாளன்று உள்ள நிலைமையினை எனக்கு அறிவிக்கவும்.

மேலும், பங்கிலாபங்களை பிரகடனப்படுத்தும்பொழுது அல்லது இலாபங்களை வெளியில் அனுப்பும்பொழுது அதிகரிக்கப்பட்ட மூலதனத் தேவைப்பாடுகளை மனதில் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இது கிடைத்தமை பற்றி அறிவிக்கவும்.

உங்கள் உண்மையுள்ள

**ஒப்பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

படி.திரு.உபாலி த சில்வா
செயலாளர் நாயகம்
இலங்கை வங்கியாளர் சங்கம் (பிரைவேட்) லிமிட்டெட்
மாடி 8 சிலிங்கோ ஹவுஸ்
கொழும்பு 01.

02/17/402/0073/001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2005 ஏப்பிறல் 12

அனைத்து உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினது
முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா

**வங்கிகளின் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளை அதிகரித்தல்**

2005.04.05 ஆம் நாள் நடைபெற்ற கூட்டத்தில் தங்களுக்குத் தெரிவிக்கப்பட்டவாறு, நிதியியல் முறையின் உறுதிப்பாட்டையும் வலுவானதும் ஆற்றல் வாய்ந்ததுமான வங்கித்தொழில் முறையின் அக்கறையினையும் பேணுகின்ற அதன் பொறுப்பினது ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளையும் அவற்றின் மூலதனத்தினை ரூ.1500 மில்லியனுக்கு அதிகரித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதெனத் தீர்மானித்திருக்கிறது. இந்நோக்கத்திற்காக, காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 19(2) மற்றும் 19.(7) இன் கீழ் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட 1977.1.28 ஆம் திகதியிடப்பட்ட பணிப்புரைகளில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு மூலதனம் என்பது அடுக்கு 1 மூலதனத்தினை (மைய மூலதனம்) குறிக்கும். தற்பொழுது இத்தேவைப்பாடுகள் பூர்த்தி செய்திருக்காத வர்த்தக வங்கிகள் தமது மூலதனத்தினை பின்வரும் விதத்தில் அதிகரிக்கலாம்.

- தற்போதுள்ள மூலதனத்தினை 2006 ஆம் ஆண்டின் இறுதியில் குறைவாக உள்ள அளவில் 50% இனால் தமது அதிகரித்துக் கொள்ளப்படல் வேண்டும்.
- குறைவாகவுள்ள மீதி 2007 இறுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

அனைத்து சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் அதிகரித்த மூலதனத் தேவைப்பாடுகளை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

புதிய சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றிற்கான தேவைப்படுத்தப்பட்ட பங்குமூலதனம் ரூ.1500 மில்லியனாக உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என தீர்மானித்திருக்கிறது.

தங்கள் வங்கியின் தற்போதைய நிலைமையினையும் அதற்கெதிரான கடந்த நிதியாண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியலைஅடிப்படையாகக் கொண்ட அதிகரிக்கப்பட்ட மூலதனத் தேவைப்பாடுகளையும் மதிப்பீடு செய்யுமாறு நீங்கள் தயைகூர்ந்து கேட்டுக்கொள்ளப்படுவதுடன் குறித்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாட்டிற்கும் குறைவாக மூலதன மட்டம் காணப்படுமிடத்து மூலதனத்தினைப் பெருக்குவதற்கு கால நிர்ணயம் செய்யப்பட திட்டமொன்றுடன், 2005 யூன் 30ஆம் நாளன்று உள்ள நிலைமையினை எனக்கு அறிவிக்கவும்.

மேலும், பங்கிலாபங்களை பிரகடனப்படுத்தும்பொழுது அதிகரிக்கப்பட்ட மூலதனத் தேவைப்பாடுகளை மனதில் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இது கிடைத்தமை பற்றி அறிவிக்கவும்.

உங்கள் உண்மையுள்ள

**ஓப்.பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

படி.திரு.உபாலி த சில்வா
செயலாளர் நாயகம்
இலங்கை வங்கியாளர் சங்கம் (பிரைவேட்) லிமிட்டெட்
மாடி 8 சிலிங்கோ ஹவுஸ்
கொழும்பு 01.

## இஸ்லாமிய தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட சாதனங்களை அறிமுகப்படுத்தல்

வங்கித்தொழில் சட்டத்திற்கு அண்மையில் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் இஸ்லாமிய தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட வங்கித்தொழில் சாதனங்களை அறிமுகப்படுத்துவதற்கு வங்கிகளை அனுமதித்திருக்கின்றன.

அனைத்து வங்கித்தொழில் தொழிற்பாடுகளையும் உறுதிப்படுத்தும் பொருட்டு, அது வழமையான வங்கித்தொழிலாக அல்லது இஸ்லாமிய வங்கித்தொழிலாக எதுவாக இருப்பினும், முன்மதியுடைய தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பின்வரும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு பிரயோகிக்கப்படும்.

1. இஸ்லாமிய வங்கித்தொழில் தொழிற்பாடுகள் உரிமம் பெற்ற வங்கிகளுக்கு பிரயோகிக்கத்தக்க ஏற்கனவேயுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு கண்டிப்பாக ஏற்ற விதத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2. தொடர்பான வங்கிகள் தமது இஸ்லாமிய வங்கித்தொழில் தொழிற்பாடுகளுக்காக தனியான கணக்கேடுகளைப் பேணுதல் வேண்டும்.

3. மரபுரீதியான வங்கித்தொழிலுடனும் இஸ்லாமிய வங்கித்தொழிலுடனும் தொடர்பான கணக்குகளுக்கிடையில் தெளிவானதொரு எல்லைக்கோட்டினை வகுத்துக்கொள்வதனை இயலச்செய்யும் விதத்தில் மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கும் நியதி ஒதுக்குக்கூற்றில் தனி நிரலொன்றின் கீழ் இஸ்லாமிய வங்கித்தொழில் மீதான தரவுகள் உள்ளடக்கப்பட வேண்டும்.

4. மரபுவழி வங்கித்தொழில் தொழிற்பாடுகளுக்கு பிரயோகிக்கத்தக்க முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் இஸ்லாமிய வங்கித்தொழில் வியாபாரத்திற்கும் சமமான முறையில் பிரயோகிக்கப்படுவதுடன் தற்போதுள்ள ஒழுங்குவிதிகளை கடுமையாகப் பின்பற்றுமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது. ஏதும் வேறுபாடுகள் அவதானிக்கப்படுமிடத்து, அத்தகைய வங்கிகள் தொடர்பான தொழிற்பாடுகளை தொடர்வதனை உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படும்.

   இது தொடர்பாக விசாரிக்கும் வங்கிகளுக்கு மத்திய வங்கி தனிப்பட்ட ரீதியாக எழுதும்.

***2005 மே 19 ஆம் நாளன்று உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகள் என்பனவற்றின் கூட்டத்தில் விநியோகிக்கப்பட்டது.***

*வங்கி மேற்பார்வைத் திணைக்களம்*
*2005 யூலை 29*

*உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை*
*நிறைவேற்று அலுவலர்களுக்கு*

*அன்புள்ள ஐயா*

**வெளிநாட்டு நாணயத்தில் மூலதனத்தினைப் பேணுவதற்கான கோரிக்கை**

வங்கிகளினது ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடு அதிகரிக்கப்பட்டமையின் காரணமாக வெளிநாட்டில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பலவும் மூலதனத்தின் ஒரு பகுதியை வெளிநாட்டு நாணயத்தில் பேணுவதற்கு தம்மை அனுமதிக்குமாறு மத்திய வங்கியினைக் கேட்டுக்கொண்டன. இக்கோரிக்கைக்கு இடமளிக்கும் விதத்தில், இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டிருக்கிறது.

1. கொண்டுவரப்பட்ட புதிய மூலதனத்தில் ஆகக்கூடியது 50 சதவீதம் கொண்ட தொகை வெளிநாட்டு நாணயத்தில் பேணப்படலாம். மீதி 50 சதவீதம் ரூபாவிற்கு மாற்றப்பட்டு வங்கியின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவில் பேணப்பட வேண்டும்.

2. உள்ளே கொண்டு வரப்படவுள்ள (மேலேயுள்ளதில் 50 சதவீதம்) புதிய மூலதனத்தில் இருபத்தைந்து சதவீதம் (25%) வட்டி உழைக்காத ஒதுக்காக மத்திய வங்கியில் பேணப்பட வேண்டும்.

3. கொண்டு வரப்படவுள்ள புதிய மூலதனத்தில் இருபத்தைந்து சதவீதம் (25%) முதலீட்டுச்சபைக் கம்பனிகளுக்கு மட்டும் கடன் வழங்குவதற்கு பயன்படுத்துவதற்காக கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் வைத்திருத்தல் வேண்டும். இத்தகைய விடயங்களுக்கு கடன்வழங்காமல் இருக்கும் ஏதும் தொகைகள் இலங்கை மத்திய வங்கியுடனான ஒதுக்குக் கணக்கில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

4. ரூபா நியதிகளில் வெளிநாட்டு நாணயத்தில் பேணப்படும் மூலதனத்தில் ஏற்படும் உயர்வு/ தேய்வு "செலாவணி சமநிலைப்படுத்தும் கணக்கு" என்று அழைக்கப்படும் தனியான கணக்கிற்கு வரவு வைக்கப்பட/ பற்று வைக்கப்பட வேண்டும். இதனை முன்மதியுடைய நோக்கங்களுக்காக, மூலதனத்தின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படக் கூடாது. மூலதனக் கணக்கின் ரூபாத்தொகை, மூலதனம் கொண்டு வரப்பட்ட நாளில் நிலவிய செலாவணி வீதத்தினைக் காட்டும் விதத்தில் தொடர்ந்துமிருத்தல் வேண்டும்.

5. தொழிற்பாட்டு இழப்புக்களை ஈடுசெய்யும் பொருட்டு வெளிநாட்டு நாணயத்திலுள்ள மூலதனம் முழுவதையும் அல்லது ஒரு பகுதியினை ரூபாவிற்கு மாற்றுமாறு வங்கியினைக் கோருவதற்கான உரிமையினை மத்திய வங்கி கொண்டிருக்கிறது.

இது கிடைத்தமை பற்றி தயவு செய்து அறிவிக்கவும்.

உங்கள் உண்மையுள்ள

**ஒப். பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

சுற்றறிக்கை எண் 02/04/002/0101/002

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2005 ஒகத்து 11

*உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

*அன்புள்ள ஐயா*

**2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க தனியொரு கடன்பாட்டாளர் வரையறைப் பணிப்புரை**

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு தனியொரு கடன்பாட்டாளர் வரையறை பற்றிய தற்போதைய 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க பணிப்புரையினைத் திருத்துகின்ற பணிப்புரை இத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றது.

தயவுசெய்து இது கிடைத்தமை பற்றி அறிவிக்கவும்.

உங்கள் உண்மையுள்ள

**ஒப். பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

## 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினாலும் 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம்

2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினாலும் 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46 1 (இ) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.

ஒப். சுனில் மெண்டிஸ்

ஆளுநர்

கொழும்பு

2005 ஓகத்து 10

## 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) பணிப்புரை

2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) பணிப்புரை பின்வருமாறு திருத்தப்படுகிறது.

1. மேற்குறிப்பிட்ட பணிப்புரையின் பந்தி 4 நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தி இடப்படுகிறது.

"4. பந்திகள் 2 மற்றும் 3 இன் நோக்கங்களுக்காக வசதிகள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் மூலதன நிதியத்தில் 30 சதவீதத்தினையா அல்லது மூலதன நிதியத்தில் 15 சதவீதத்தினையா விஞ்சுகிறது என்பதனை நிர்ணயிப்பதில், தற்போதுள்ள வசதி வரையறைகள் அல்லது அனைத்து கடன் வசதிகளினதும் வெளிநின்ற தொகை இவற்றில் எது கூடுதலானதோ அதனைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பந்தி 3 இன் நோக்கங்களுக்காக, முன்னைய நிதியாண்டின் இறுதியில் உள்ளவாறான உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் மொத்தக் கடன்வழங்கல் என்பது முன்னைய நிதியாண்டின் இறுதியிலுள்ளவாறான அனைத்து கடன் வசதிகளினதும் வெளிநின்ற தொகை என கருதப்படும்."

2. மேற்குறிப்பிட்ட பணிப்புரையின் பந்தி 6 நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தி உள்புகுத்தப்படுகிறது.

"6 (1) சட்டத்தின் பிரிவு 46(1) (இ) (i) அல்லது பிரிவு 46(i) (இ) (ii) இல் குறிப்பிடப்பட்ட வகைகளுக்குரிய வாடிக்கையாளர்களுக்கு பின்வரும் விடயங்களை பிணையாகக் கொண்டு வழங்கப்பட்ட கடன் வசதிகள், தனியொரு கடன்பாட்டாளர் வரையறைகளை கணிப்பதிலிருந்து நீக்கப்பட்டன.

(அ) காசு

(ஆ) அரச/ மத்திய வங்கிப் பிணைகள்

(இ) திறைசேரி/ மத்திய வங்கிப் பிணைகள்

(ஈ) ஆசிய அபிவிருத்தி வங்கி/ பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் உலக வங்கியினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள்

(உ) கீழேயுள்ள துணைப் பந்திகளான (3) மற்றும் (4) இல் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டவை.

(i) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கியொன்றினால் அல்லது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றினால் வழங்கப்பட்டு வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியது எனத் தீர்மானிக்கப்பட்ட உத்தரவாதம் அல்லது அதனையொத்த சாதனத்தை பிணையாகக் கொண்டு வழங்கப்பட்ட கடன் வசதிகள்; அல்லது

(ii) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் தலைமை அலுவலகத்தினால் வழங்கப்பட்ட உத்தரவாதம், நட்டோத்தரவாதம் அல்லது பொறுப்பேற்பினை பிணையாகக் கொண்டு வழங்கப்பட்ட கடன் வசதிகள்.

3. மேலே துணைப்பந்தி (உ) இன் கீழ் பட்டியலிடப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட உத்தரவாதம் அல்லது அதனையொத்த சாதனமொன்றினை பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைவாக இருக்குமிடத்து ஏற்றுக்கொள்ளலாம்.

(அ) நிறுவனமொன்று இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் தரமிடல் முகவரொன்றினால் A- மற்றும் அதற்கு மேற்பட்ட (அல்லது அதற்குச் சமமான) கொடுகடன் தரமிடலுடன் கூடிய உயர்ந்த தரமிடப்பட்ட நிறுவனமாக இருத்தல்.

(ஆ) தனியொரு கடன்பாட்டாளர் வரையறையினைக் கணிப்பீட்டிலிருந்து தவிர்க்கப்படக்கூடிய கடன் வசதியின் பெறுமதியினது சதவீதம் பின்வருமாறு இருக்கும்.

| கொடுகடன் தரமிடல் | விலக்களிக்கப்பட்ட முதல் பெறுமதியின் % |
|---|---|
| AAA இலிருந்து AA-(அல்லது சமமானது) | 80% |
| A+இலிருந்து A- (அல்லது சமமானது) | 50% |

(இ) மேற்குறிப்பிட்ட அடிப்படையில் தவிர்க்கப்பட்ட அனைத்துக் கடன் வசதிகளினதும் மொத்தம் வங்கியின் மூலதன நிதியத்தின் 100 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(ஈ) குறிப்பிட்ட வங்கியானது, உத்தரவாதத்தினை வழங்குகின்ற வங்கிக்கு கொடுக்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதம் தற்போதுள்ளது என்பதனையிட்டு மீளாய்வு செய்யப்படுவதற்கு உட்படவில்லை என்பதனையிட்டும் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டியதுடன், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் எந்தவித மாற்றத்தையும் உடனடியாக கவனிக்க வேண்டியதுடன் வழங்கப்பட்ட கடன்வசதி முன்னிருந்த கடன் மீளாய்விற்கேற்ப திருத்தம் செய்யப்படவும் வேண்டும்.

4. மேலே துணைப்பந்தி (3) இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குப் புறம்பாக, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் தலைமை அலுவலகத்தினால் வழங்கப்பட்ட பொறுப்பேற்றல் அல்லது நட்டோத்தரவாதமொன்றினை பின்வரும் நியதிகள் நிபந்தனைகளுக்குட்பட்ட விதத்தில் ஏற்றுக்கொள்ளலாம்.

(அ) மேலே பந்தி 6 (உ) (ii) இன் கீழ் வழங்கப்பட்ட கடன் வசதியொன்றிற்கான தனியொரு கடன்பாட்டாளர் வரையறையிலிருந்து தவிர்ப்பதனைப் பரிசீலிப்பதற்கு அத்தகைய கடன் வசதியினை வழங்குவதற்கு முன்னர் இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலைப் பெறவேண்டும்.

(ஆ) வாடிக்கையாளர் ஒருவர் கடனைச் செலுத்தத் தவறுமிடத்து அவரின் சார்பில் பொறுப்பேற்பினை/நட்டோத்தரவாதத்தினை வழங்கிய தலைமை அலுவலகம் உத்தரவாதமளித்த தொகையினை இலங்கையிலுள்ள உள்நாட்டு வங்கித்தொழில் திணைக்களத்திற்கு உடனடியாக அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட வங்கியின் கொழும்புக்கிளை அத்தொகையினைப் பெறும் வரையில் கிளை எந்த ஒரு இலாபத்தினையோ அல்லது தலைமையக செலவுகளையோ வெளியில் அனுப்பக்கூடாது.

3. குறிப்பிட்ட பணிப்புரைகளின் பந்தி 7 (iv) நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தி உட்படுத்தப்படுகிறது.

"(iv) பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டத்தில் நேரடியாக நிதியினைப் பயன்படுத்துவதற்காக கடன் வசதிகள் வழங்கப்படவுள்ள வாடிக்கையாளர்/ வாடிக்கையாளர்கள்.

(அ) உட்கட்டமைப்பு செயற்றிட்டம் இங்கே இணைப்பு 1 இல் விபரிக்கப்பட்டவாறான செயற்றிட்டமாக இருத்தல் வேண்டும்.

(ஆ) வாடிக்கையாளர்/ வாடிக்கையாளர்கள் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டத்தில் நேரடியாக ஈடுபடுவதற்கான ஒப்பந்தத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) அத்தகைய செயற்றிட்டமொன்றிற்கான நிதியிடலின் குறைந்தது 50 சதவீதம் வரையில் இலங்கைக்கு வெளியேயான மூலங்களினால் அல்லது கடன் வசதிகளை வழங்குகின்ற வங்கி நீங்கலாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அத்துடன்/ அல்லது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கூட்டமைப்பு ஒன்றினால் நிதியிடப்படுமிடத்து; அத்துடன்

(ஈ) அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் கடன் வசதிகளை வழங்குவதற்கு முன்னர் மேலே (அ,ஆ) மற்றும் (இ) இல் குறித்துரைக்கப்பட்ட நிலமைகளையிட்டு தான் திருப்தி கொள்வதாக இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(உ) இத்துணைப் பந்தியின் நியதிகளுக்கிணங்க இவ்வுட்கட்டமைப்பு செயற்றிட்டத்திற்கான கடன்வழங்கல் முன்னைய நிதியாண்டின் இறுதியிலுள்ளவாறான வங்கியின் மூலதன நிதியத்தில் ஐம்பது சதவீதத்தினை (50%) விஞ்சக்கூடாது".

4. இப்பணிப்புரைகள் உடனடியாக நடைமுறைக்கு வரும்.

இணைப்பு 1

## தனியொரு கடன்பாட்டாளர் வரையறை மீதான பணிப்புரையின் பந்தி 7(iv) இன் கீழ் விதி விலக்கலுக்கான தகைமையைப் பெறக்கூடிய உட்கட்டமைப்பு கடன்வழங்கலின் வரைவிலக்கணம்

கீழே குறித்துரைக்கப்பட்டவாறு உட்கட்டமைப்பு வசதிகளுக்காக வங்கிகளினால் வழங்கப்பட்டுள்ள கடன் வசதிகள் பணிப்புரையின் பிரிவு 7 (iv) இன் கீழ், தனியொரு கடன்பாட்டாளர் வரையறையிலிருந்தும் விலக்குப் பெறுவதற்கு தகைமையுடையனவாக இருக்கும். பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கம்பனிக்கு கொடுகடன் வசதி வழங்கப்படுகிறது.

- அபிவிருத்தி; அல்லது
- தொழிற்படுத்தல் மற்றும் பேணுதல்; அல்லது
- பின்வரும் துறைகளில் ஏதாவதொன்றிலுள்ள செயற்றிட்டமான ஏதாவது உட்கட்டமைப்பு வசதியினை அல்லது இதே தன்மைகளைக் கொண்ட ஏதாவதொரு உட்கட்டமைப்பு வசதியினை அபிவிருத்தி செய்தல், தொழிற்படுத்தல், தரமுயர்த்தல் மற்றும் பேணுதல் அல்லது இதே தன்மைகளைக் கொண்ட வேறு ஏதாவது உட்கட்டமைப்பு வசதி

(i) சுங்க வீதிகள் உட்பட்ட வீதி, பாலம் அல்லது புகைவண்டி அமைப்பு

(ii) நெடுஞ்சாலை செயற்றிட்டத்தின் முக்கிய பகுதியாக விளங்கும் ஏனைய நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு நெடுஞ்சாலைச் செயற்றிட்டம்

(iii) துறைமுகம், வானூர்தி, உள்நாட்டு நீர்வழி அல்லது உள்நாட்டு துறைமுகம்

(iv) நீர்வழங்கல் செயற்றிட்டம், நீர்ப்பாசனச் செயற்றிட்டம் நீர் சுத்திகரிப்பு முறை, சுகாதாரம் மற்றும் வடிகாலமைப்பு அல்லது திண்ம கழிவு முகாமைத்துவ அமைப்பு

(v) வானொலி பேஜிங், தூரஇடங்களுக்கான வலையமைப்பு, அகன்ற வழிகளைக் கொண்ட வலையமைப்பு மற்றும் இணையத்தள வசதிகள் உள்ளிட்ட அடிப்படை அல்லது செலூலர் எதனையும் கொண்ட தொலைத்தொடர்பூட்டல் பணிகள்.

(vi) கைத்தொழில் பூங்கா அல்லது சிறப்பு பொருளாதார வலயம்

(vii) வலு உருவாக்கம் அல்லது வலுஉருவாக்கமும் விநியோகமும்

(viii) புதிய மின்கடத்தலின் வலயமைப்பினை அல்லது விநியோக வழிகளை ஏற்படுத்துவதன் மூலமாக வலுவினைக் கொண்டு செல்லல் அல்லது விநியோகித்தல்.

(ix) வேளாண்மை பொருட்களைப் பதனிடுவதுடன் தொடர்பான செயற்றிட்டங்களுடன் தொடர்பான கட்டுமானம் மற்றும் வேளாண்மைக்கான உள்ளீடுகளை வழங்குதல்

(x) கல்விசார் நிறுவனங்களையும் வைத்தியசாலைகளையும் நிருமாணித்தல்

(xi) இதே தன்மைகளைக் கொண்ட வேறு ஏதாவது வசதிகள்

**சுற்றறிக்கை எண் 02/08/006/0001/002**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2005 ஓகத்து 11

*உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின்*
*முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்*

*அன்புள்ள ஐயா*

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஆண்டு உரிமக் கட்டணம்

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் ஆண்டு உரிமக் கட்டணம் தொடர்பாக நாணயச்சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் இத்துடன் இணைக்கப்பட்டிருப்பதனை தயைகூர்ந்து கவனிக்கவும். இது 2006 சனவரி 1 ஆம் நாளன்று நடைமுறைக்கு வரும்.

உங்கள் உண்மையுள்ள

**ஒப். பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

## வங்கித்தொழில் சட்டம்

வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76(ஈ)(6) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின்
நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்

**ஒப். சுனில் மெண்டிஸ்**
ஆளுநர்

கொழும்பு
2005 ஓகத்து 10

### 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தீர்மானம்

1. பிரிவு 76(ஈ) 6 இன் ஏற்பாடுகளின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி நாணயச்சபையானது 2006 சனவரி 1 ஆம் நாளிலிருந்து ஒவ்வொரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் ஆண்டு உரிமக் கட்டணமாக ஒவ்வொரு கலண்டர் ஆண்டிற்கும் ரூ.100,000 இனைச் செலுத்த வேண்டுமென தீர்மானித்திருக்கிறது.

2. ஒவ்வொரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் தொடர்பான உரிமக் கட்டணத்தினை ஒவ்வொரு ஆண்டும் சனவரி 31 ஆம் நாளன்று இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்தல் வேண்டும்.

3. ஒவ்வொரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் எதிர்கால உரிமத்திற்காக தொழிற்பாட்டாளர் முதல் கலண்டர் ஆண்டிற்காக உரிமத்தினை வழங்குவதற்கு முன்னதாக ஆண்டுக் கட்டணத்தைச் செலுத்தல் வேண்டும்.

**சுற்றறிக்கை எண் 02/04/002/0018/001**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2005 ஒகத்து 12

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினது முதன்மை
நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா

## வங்கிகளின் மூலதனத்தினை வெளிநாட்டு நாணயத்தில் பேணுவதற்கான கோரிக்கை

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக வெளிநாட்டு நாணயத்தில் பேணப்படுவதற்கு உள்ளே கொண்டு வரப்பட்ட புதிய மூலதனங்களின் ஒரு பகுதியை அனுமதிப்பது பற்றிய நாணயச்சபையின் தீர்மானத்தினை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அறிவிப்பது தொடர்பான 2005 யூலை 29 ஆம் நாளிடப்பட்ட எனது சுற்றறிக்கைக்கு மேலதிகமாக;

2. மூலதனத்தின் ஒரு பகுதியை இலங்கை மத்திய வங்கியுடனான ஒதுக்காகக் பேணுவதற்காக விருப்பத்தேர்வினை நடைமுறைப்படுத்துவதற்கு விரும்பிய வங்கிகளுக்கான தொழிற்பாட்டு நடைமுறைகள் பின்வருமாறு:

2.1 வைப்புக்கள் பின்வரும் குறித்துரைக்கப்பட்ட நாணயங்களில் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்.

- ஐ.அ.டொலர்கள்
- இசுடேர்லிங் பவுண்
- யூரோ

2.2 மத்திய வங்கியில் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்ட மூலதனத் தொகையானது நாணயத்தினைப் பொறுத்து இலங்கை மத்திய வங்கியின் நடைமுறைக் கணக்கில் பின்வருமாறு வைப்பிலிடப்பட வேண்டும்.

| நாணயம் | ஐ.அ.டொலர் | யூரோ | இசுடேர்லிங் பவுண் |
|---|---|---|---|
| வங்கிப் பெயர் | பெடர் றிசேர்வ் வங்கி நியூயோர்க் | டியூச் பண்டஸ்வங்கி பிராங்போர்ட் | எச்எஸ்பீசிபிஎல்சி இலண்டன் |
| கணக்கிலக்கம் | எஸ்ஆர்ஜஎல்ஏ021083514 | 5040040828 | 396001144 |
| சுவிப்ற் குறியீடு | எவ்ஆர்என்வையு 33 | மார்க்டீஎப் | எம்ஐடிஎல்ஜிபீ22 |

2.3 மேலேயுள்ள இலங்கை மத்திய வங்கியின் எந்த ஒரு கணக்கிற்கும் வர்த்தக வங்கிகளினால் நிதியம் மாற்றல் செய்யப்பட்டதும் உரிய வங்கியானது கீழே கையெழுத்திட்டவருக்கு (தொகை மற்றும் வைப்புக்களின் பெறுமதி என்பனவற்றைக் குறிப்பிட்டு) இலங்கை மத்திய வங்கியின் முதன்மை கணக்காளருக்கான ஒரு பிரதியுடன் அறிவித்தல் வேண்டும்.

3. வைப்புக்கள் பொதுவாக தொடர்பான வங்கிகளின் மூலதனத்துடன் இணைக்கப்பட்டிருப்பதனால் மீளப்பெறல்கள் அனுமதிக்கப்படாது. எந்த ஒரு மீளப்பெறலுக்குமான கோரிக்கைகள் அங்கீகரிப்பிற்காக வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். வங்கி

மேற்பார்வைப் பணிப்பாளரினால் அங்கீகாரமளிக்கப்படாத எந்த ஒரு மீளப்பெறலையும் இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளர் ஏற்றுக்கொள்ள மாட்டார். மேலும், இலங்கை மத்திய வங்கி அதன் ஒதுக்கு நிதியம்/ முதலீடு என்பனவற்றைப் பேணுகின்ற நிதியியல் நிலையங்களின் நேர வேறுபாடுகளைக் கருத்திற்கொண்டு, மீளப்பெறலை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கு குறைந்தது ஒரு நாள் அறிவித்தல் தேவையாக இருந்தது. ஆகக் குறைந்தது ஒரு நாள் செய்முறைப்படுத்தற் காலம் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு தேவைப்படுகிறது (எல்லாமாக இலங்கை மத்திய வங்கிக்கு இரண்டு நாள் அறிவித்தல் தேவைப்படுகிறது)

4. அறிக்கையிடுகின்ற நடைமுறை

4.1 கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் வெளிநாட்டு நாணயத்தில் வைத்திருக்கப்படும் மூலதனம், உள்ளகக் கணக்கின் கீழ் "வெளிநாட்டு நாணயத்தில் வைத்திருக்கப்படும் மூலதனம்" என்ற பெயரில் புகுத்தப்படும் மேலதிக நிரலொன்றின் மூலம் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மாதாந்தக்கூற்றில் அறிவிக்கப்படல் வேண்டும்.

4.2 இலங்கை மத்திய வங்கியில் வைத்திருக்கப்படும் ஒதுக்குக் கணக்கு "இலங்கையிலுள்ள" சொத்துக்களின் கீழ் "இலங்கை மத்திய வங்கியுடனான வைப்பு" என அறிவிக்கப்படல் வேண்டும்.

5 வெளிநாட்டு நாணயத்தில் வைத்திருக்கப்படும் மூலதனத்தின் ஒரு பகுதியினைப் பிரதிபலிக்கின்ற இலங்கை மத்திய வங்கியில் வைத்திருக்கப்படும் ஒதுக்கு கணக்கு, மூலதனத்தின் ஒரு பகுதியாக இருப்பதனால் அதனை திரவச்சொத்தின் ஒரு பகுதியாக உள்ளடக்கக்கூடாது.

6. **மூலதனத் திட்டத்தினைச் சமர்ப்பித்தல்**

அதிகரித்த மூலதனத் தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்காக அவற்றின் திட்டங்களை இன்னமும் சமர்ப்பிக்காத வங்கிகள் 2005 ஒகத்து 31 ஆம் நாளுக்கு பிந்தாமல் அவற்றைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள

**ஒப். பணிப்பாளர், வங்கிமேற்பார்வை**

02/04/003/0401/001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2005 செத்தெம்பர் 30

*உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற*
*சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின்*
*முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

*அன்புள்ள ஐயா*

## வங்கிகள் காலாண்டு நிதிக் கூற்றுக்களைப் பத்திரிகையில் வெளியிடுவதன் மூலம் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தல்

உரிமம் வழங்கப்பட்ட வர்த்தக வங்கிகளினது முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்காக 2005 யூலை 28 ஆம் நாளன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டவாறு, பத்திரிகையில் காலாண்டு நிதியியல் கூற்றுக்களை வெளியிடுவதற்கான படிவம் வங்கிப் பிரதிநிதிகளின் ஆலோசனையுடன் திருத்தியமைக்கப்பட்டு சிங்கள மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புக்களுடன் சேர்த்து இத்தால் இணைக்கப்பட்டிருக்கிறது.

2. திருத்தமானது, வங்கித்தொழில் தொழிற்பாடுகளின் வெளிப்படையான தன்மையினையும் வெளியீட்டுத் தேவைப்பாடுகளானது ஒழுங்குமுறைப்படுத்துநர்களின் அத்தகையவற்றுக்கு இணையாக இருக்க வேண்டுமென்பதனையும் நோக்கமாகக் கொண்டிருந்தது. இதன்படி, படிவங்கள் பிணையங்கள் மற்றும் செலாவணித்தரகு (பட்டியலிடப்பட்ட வங்கிகளைப் பொறுத்தவரை) மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் என்பனவற்றினை இயன்றவரை உள்ளடக்கிய விதத்தில் வரையப்பட்டிருக்கின்றன. மேலும், வங்கிகளுடன் உடன்பட்டவாறு, முக்கிய முன்மதியுடைய விகிதங்கள் உட்பட தெரிந்தெடுக்கப்பட்ட செயலாற்ற குறிகாட்டிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

3. வெளியிடப்படுகின்ற தகவல்கள் முழு வங்கியுடனும் தொடர்பானதாக, அதாவது கரைகடந்த வங்கித்தொழில் பிரிவு மற்றும் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளைப் பொறுத்தவரை வெளிநாட்டில் ஏதாவது கிளைகள் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

4. புதிய படிவம் இரு பகுதிகளைக் கொண்டிருக்கிறது. அவையாவன

- பகுதி I தொகுக்கப்பட்ட ஐந்தொகை, வருமானக்கூற்று, பங்கு மற்றும் ஒதுக்குகளில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பான கூற்று, மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட செயலாற்றக் குறிகாட்டிகள்
- பகுதி II பத்திரிகைகளில் வெளியிடுவதற்கான வங்கிக் கணக்குகளைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்கள்

5. ஐந்தொகை தகவல்கள் தொடர்பான காலாண்டின் இறுதியிலுள்ளவாறு அறிவிக்கப்படல் வேண்டும். வெளியிடப்படவுள்ள ஒப்பீட்டு எண்தொகைகள் முன்னைய நிதியாண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.1 வருமானக்கூற்று தொடர்பான அறிக்கையிடும் காலம் நிதியாண்டின் தொடர்பான காலாண்டின் இறுதியிலுள்ளவாறான ஒன்றுசேர்ந்த நிலைமையைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். ஒப்பீட்டு எண்தொகைகள் முன்னைய நிதியாண்டிலுள்ள அதே அறிக்கையிடுகின்ற காலம் தொடர்பானதாக இருத்தல் வேண்டும்.

5.2 தெரிந்தெடுக்கப்பட்ட செயலாற்ற குறிகாட்டிகளைப் பொறுத்தவரை, அறிக்கையிடுகின்ற நாளன்று உள்ளவாறான தொடர்பான விகிதம் அறிக்கையிடப்பட வேண்டிள்ள அதேவேளையில், ஒப்பீட்டு விகிதம் முன்னைய நிதியாண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. வெளியீடுகள் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்ததிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் குறைந்தது ஒரு ஆங்கில, சிங்கள மற்றும் தமிழ் செய்திப்பத்திரிகைகளில் வெளியிடப்பட வேண்டும். வங்கி அதன் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதியியல் கூற்றுக்களை நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து இரண்டு மாதங்களுக்கிடையில் வெளியிடுமாயின் இந்நிதிநிறுவனங்களின் நியதிகளின்படி நான்காவது காலாண்டிற்கான நிதியியல் கூற்றுக்களை வெளியிட வேண்டுமென்ற தேவைப்பாடு கட்டாயமானதாக இருக்காது.

7. வெளிநாட்டில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தமது தாய் வங்கியின் உலகளாவிய தொழிற்பாடுகள் தொடர்பான தகவல்களை தொகுதியாகத் அறிவிக்கின்ற நிரலில் அறிக்கையிடலாம். அத்தகைய தகவல்களை உள்நாட்டின் நாணயத்தில் அல்லது ஐ.அ.டொலரில் அறிக்கையிடலாம். வெளிநாட்டு வங்கிகளின் தொகுதிக்கணக்குகளின் மாறுபட்ட பண்புகளைக் கருத்திற்கொண்டு உடன்பாடு காணப்பட்ட படிவத்தில் அனைத்து விடயங்களையும் வெளியிடுவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு வங்கிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

8. இங்கே காணப்படும் வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகள் வங்கிகளினால் பணியாற்றப்பட வேண்டிய ஆகக் குறைந்த தேவைப்பாடுகளை குறித்துரைப்பதுடன், பொதுமக்களின் நலன் கருதி மேலதிக வெளிப்படுத்தல்களைச் செய்வதற்கும் அனைத்து வங்கிகளும் ஊக்குவிக்கப்படுகின்றன. மேலும் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட வங்கிகள், நிதியியல் தகவல்களின் வெளியீடுகள் தொடர்பாக கொழும்பு பங்குச்சந்தையினால் விதிக்கப்படும் எந்த ஒரு மேலதிக ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கி நடத்தல் வேண்டும்.

9. வங்கிகளின் நிதியியல் கூற்றுக்களை வெளியிடுவதற்கான திருத்தப்பட்ட வெளியீட்டுப் படிவம் 2005 இன் 3 ஆம் காலாண்டிலிருந்து நடைமுறைக்கு வரும்.

9.1 படிவங்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள குறியீடுகள் அறிவுறுத்தல்களிலுள்ள வரைவிலக்கணங்களுடன் முழுமையாக தொடர்புபடுகின்றனவேயன்றி வெளியீடுகளுக்கானவையல்ல.

9.2 காலாண்டு நிதியியல் கூற்றுக்களை வெளியிடுவது தொடர்பான 2003 சனவரி 30 ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கை ஒழிக்கப்படுகிறது.

இச்சுற்றறிக்கை கிடைத்தமை பற்றி தயைகூர்ந்து அறிவிக்கவும்.

உங்கள் உண்மையுள்ள

**ஒப். பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

## தொகுக்கப்பட்ட மாதிரிப்படிவம்

**வங்கியின் பெயர்** **ரூபா ஆயிரங்களில்**

| ஐந்தொகையின் சுருக்கம் | | வங்கி | | வங்கித்தொகுதி | |
|---|---|---|---|---|---|
| விடயம் | | நடைமுறைக் காலம் தினம்/மாதம்/ஆண்டு | முன்னைய காலப்பகுதி தினம்/மாதம்/ஆண்டு (கணக்காய்வு செய்யப்பட்ட) | நடைமுறைக் காலம் தினம்/மாதம்/ஆண்டு | முன்னைய காலப்பகுதி தினம்/மாதம்/ஆண்டு (கணக்காய்வு செய்யப்பட்ட) |
| | **ஐந்தொகையில் உள்ளடங்கும் சொத்துக்கள்** | | | | |
| 1.1.1.0.0 | கையிலுள்ள காசு | | | | |
| 1.1.2.0.0 | இலங்கை மத்திய வங்கியுடனான/ஏனைய மத்திய வங்கிகளுடனான நிலுவைகள் | | | | |
| 1.1.3.0.0 | வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்தான வருமதிகள் | | | | |
| 1.1.4.0.0 | **முதலீடுகள் வர்த்தகக் கணக்குகள்** | | | | |
| 1.1.4.1.0 | அரச பிணைகள் | | | | |
| 1.1.4.2.0 | ஏனைய பிணைகள் | | | | |
| 1.1.5.0.0 | **முதலீடுகள் முதிர்வு திகதி வரை வைத்திருக்கப்படும் முதலீட்டுப் பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சிக்காக செய்யப்பட்ட ஏற்பாடு கழித்து தேறியது)** | | | | |
| 1.1.5.1.0 | அரச பிணைகள் | | | | |
| 1.1.5.2.0 | ஏனைய பிணைகள் | | | | |
| 1.1.5.3.0 | கழிக்குக: வீழ்ச்சியடையும் முதலீட்டுப் பெறுமதிக்கான ஏற்பாடு | | | | |
| 1.1.6.0.0 | **உப நிறுவனம் மற்றும் துணை நிறுவனங்களிலான முதலீடுகள்** | | | | |
| 1.1.7.0.0 | **மொத்தக் கடன்களும் முற்பணங்களும்** | | | | |
| 1.1.7.1.0 | **மொத்த தொழிற்படும் கடன்களும் முற்பணங்களும்** | | | | |
| 1.1.7.1.1 | செலாவணி உண்டியல்கள் | | | | |
| 1.1.7.1.2 | மேலதிக பற்றுக்கள் | | | | |
| 1.1.7.1.3 | பெறக்கூடிய குத்தகைய வருமானங்கள் | | | | |
| 1.1.7.1.4 | ஏனைய கடன்கள் | | | | |
| 1.1.7.2.0 | **மொத்த தொழிற்படாத கடன்களும் முற்பணங்களும்** | | | | |
| 1.1.7.2.1 | செலாவணி உண்டியல்கள் | | | | |
| 1.1.7.2.2 | மேலதிகப்பற்றுக்கள் | | | | |
| 1.1.7.2.3 | பெறக்கூடிய மொத்த வருமானங்கள் | | | | |
| 1.1.7.2.4 | ஏனைய கடன்கள் | | | | |
| 1.1.7.2.5 | பெறக்கூடிய வட்டி | | | | |
| 1.1.7.3.0 | மொத்த **கடன்களும் முற்பணங்களும்** | | | | |
| | **கழிக்குக:** | | | | |
| 1.1.7.4.0 | நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி | | | | |
| 1.1.7.5.0 | குறிப்பீடு செய்யப்பட்ட கடன் இழப்பிற்கான ஏற்பாடுகள் | | | | |
| 1.1.7.6.0 | பொதுவான கடன் இழப்பிற்கான ஏற்பாடுகள் | | | | |
| 1.1.7.4.0 | **தேறிய கடன்களும் முற்பணங்களும்** | | | | |
| 1.1.8.0.0 | ஏனைய சொத்துக்கள் | | | | |
| 1.1.9.0.0 | கட்புலனாகாச் சொத்துக்கள் | | | | |
| 1.1.10.0.0 | முதலீட்டு ஆதனங்கள்1.1.7.4.0 | | | | |
| 1.1.11.0.0 | நிலையான சொத்துக்கள் (திரண்ட பெறுமானத்தேய்வு நீங்கலான நிலையான சொத்துக்கள்) | | | | |
| 1.1.10.0.0 | **ஐந்தொகையில் உள்ளடக்கும் மொத்தச் சொத்துக்கள்** | | | | |

ரூபா ஆயிரங்களில்

| வருமானக்கூற்றின் சுருக்கம் | | வங்கி | | வங்கித்தொகுதி | |
|---|---|---|---|---|---|
| விடயம் | | நடைமுறைக் காலம் தினம்/மாதம்/ஆண்டு | முன்னைய காலப்பகுதி தினம்/மாதம்/ஆண்டு (கணக்காய்வு செய்யப்பட்ட) | நடைமுறைக் காலம் தினம்/மாதம்/ஆண்டு | முன்னைய காலப்பகுதி தினம்/மாதம்/ஆண்டு (கணக்காய்வு செய்யப்பட்ட) |
| | **ஐந்தொகையில் உள்ளடக்கும் மொத்தப் பொறுப்புக்கள்** | | | | |
| 1.2.1.0.0 | **மொத்த வைப்புக்கள்** | | | | |
| 1.2.1.1.0 | கேள்வி வைப்புக்கள் | | | | |
| 1.2.1.2.0 | சேமிப்பு வைப்புக்கள் | | | | |
| 1.2.1.3.0 | தவணை வைப்புக்கள் | | | | |
| 1.2.1.4.0 | பிணைய வைப்புக்கள் | | | | |
| 1.2.1.5.0 | ஏனைய வைப்புக்கள் | | | | |
| 1.2.2.0.0 | **மொத்த கடன்பாடுகள்** | | | | |
| 1.2.2.1.0 | இலங்கை மத்திய வங்கியிடமிருந்தான கடன்பாடுகள் | | | | |
| 1.2.2.2.0 | இலங்கையின் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்தான கடன்பாடுகள் | | | | |
| 1.2.2.3.0 | வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்தான கடன்பாடுகள் | | | | |
| 1.2.2.4.0 | மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணைகள் | | | | |
| 1.2.2.5.0 | துணை தவணைக் கடன்பாடுகள் | | | | |
| 1.2.2.6.0 | ஏனைய கடன்பாடுகள் | | | | |
| 1.2.2.0.0 | பிற்போடப்பட்ட வரிவிதிப்பு | | | | |
| 1.2.4.1.0 | நடைமுறை ஆண்டிற்கான வரிவிதிப்பு | | | | |
| 1.2.5.1.0 | ஏனைய பொறுப்புக்கள் | | | | |
| 1.2.2.6.0 | **ஐந்தொகையில் உள்ளடங்கும் மொத்த பொறுப்புக்கள்** | | | | |
| 1.3.0.0.0 | **சிறுபான்மை நலன்கள்** | | | | |
| 1.4.0.0.0 | **உரிமை சாதனமும் ஒதுக்கங்களும்** | | | | |
| 1.4.1.0.0 | பங்கு மூலதனம்/ ஒதுக்கப்பட்ட மூலதனம் | | | | |
| 1.4.2.0.0 | நியதிச்சட்ட ஒதுக்கு நிதியம் | | | | |
| 1.4.3.0.0 | மொத்த ஏனைய ஒதுக்கங்கள் | | | | |
| 1.5.0.0.0 | **ஐந்தொகையில் உள்ளடங்கும் மொத்த பொறுப்புக்கள், உரிமை மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | | |
| 1.6.0.0.0 | **ஐந்தொகைக்கு வெளியிலான விடயங்களும் எதிரிடையான கணக்குகளும்** | | | | |
| 1.6.1.0.0 | அவசர நிகழ்வுகள் | | | | |
| 1.6.2.0.0 | கடப்பாடுகளும் எதிரிடையான கணக்குகளும் | | | | |
| 1.7.0.0.0 | **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | | | |
| 1.7.1.0.0 | ஊழியர்களின் எண்ணிக்கை | | | | |
| 1.7.2.0.0 | கிளைகளின் எண்ணிக்கை | | | | |

ரூபா ஆயிரங்களில்

| வருமானக்கூற்றின் சுருக்கம் | | வங்கி | | வங்கித்தொகுதி | |
|---|---|---|---|---|---|
| விடயம் | | நடைமுறைக் காலம் தினம்/மாதம்/ஆண்டு | முன்னைய காலப்பகுதி தினம்/மாதம்/ஆண்டு (கணக்காய்வு செய்யப்பட்ட) | நடைமுறைக் காலம் தினம்/மாதம்/ஆண்டு | முன்னைய காலப்பகுதி தினம்/மாதம்/ஆண்டு (கணக்காய்வுசெய்யப்பட்ட) |
| 2.1.0.0.0 | **வட்டி வருமானம்** | | | | |
| 2.1.1.0.0 | கடன்கள், முற்பணங்கள் மீதான வட்டி வருமானம் | | | | |
| 2.1.2.0.0 | ஏனைய வட்டி உழைக்கும் சொத்துக்களிலிருந்தான வட்டி வருமானம் | | | | |
| 2.2.0.0.0 | **கழிக்குக: வட்டிச்செலவு** | | | | |
| 2.2.1.0.0 | வைப்புக்கள் மீதான வட்டிச்செலவு | | | | |
| 2.2.2.0.0 | ஏனைய வட்டியை தாங்கிவரும் பொறுப்புக்கள் மீதான வட்டிச்செலவு | | | | |
| 2.3.0.0.0 | **தேறிய வட்டி வருமானம்** | | | | |
| 2.4.0.0.0 | **வட்டியல்லா வருமானம்** | | | | |
| 2.4.1.0.0 | வெளிநாட்டு செலாவணியிலிருந்தான வருமானம் | | | | |
| 2.4.2.0.0 | ஏனைய வருமானம் | | | | |
| 2.5.0.0.0 | **கழிக்குக: வட்டியல்லா செலவுகள்** | | | | |
| 2.5.1.0.0 | ஊழியர் செலவுகள் | | | | |
| 2.5.2.0.0 | ஊழியர்கள் ஓய்வின்போது பெறும் நன்மைகளுக்கான ஏற்பாடுகள் | | | | |
| 2.5.3.0.0 | பணிமனைகள், கருவிகள் மற்றும் நிறுவன ரீதியான செலவுகள் | | | | |
| 2.5.4.0.0 | முதலீட்டு பிணைகள்/ வியாபாரப் பிணைகள் மீதான நட்டங்கள் | | | | |
| 2.5.5.0.0 | கட்புலனாக சொத்துக்களின் பதிவழிப்புக்கள் | | | | |
| 2.5.6.0.0 | ஏனைய தொழிற்பாட்டு செலவுகள் | | | | |
| 2.6.0.0.0 | **கழிக்குக: அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாடும் கடன் பதிவழிப்பும்** | | | | |
| 2.6.1.0.0 | பொது ஏற்பாடுகள் | | | | |
| 2.6.2.1.0 | குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் | | | | |
| 2.6.3.2.0 | அறவீடுகள் (-) | | | | |
| 2.6.4.3.0 | கடன் பதிவழிப்பு | | | | |
| 2.7.0.0.0 | **கழிக்குக: முதலீட்டுப் பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சிக்கான ஏற்பாடுகள் (தேறியது)** | | | | |
| 2.8.0.0.0 | **சாதாரண நடவடிக்கைகளிலிருந்தான வரிக்கு முந்திய தொழிற்பாட்டு இலாபம்** | | | | |
| 2.9.0.0.0 | கழிக்குக: நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி கூட்டப்பட்ட வரி | | | | |
| 2.10.0.0.0 | **சாதாரண நடவடிக்கைகளிலிருந்தான கம்பனி வரிக்கு முந்திய தொழிற்பாட்டு இலாபம்** | | | | |
| 2.11.0.0.0 | துறைக்கம்பனிகளினதும் இணைக்கம்பனிகளினதும் இலாபப்பங்கு | | | | |
| 2.12.0.0.0 | **கம்பனி வரிக்கு முந்திய தொழிற்பாட்டு இலாபம்** | | | | |
| 2.13.0.0.0 | கழிக்குக: சாதாரண நடவடிக்கைகளிலிருந்தான இலாபத்தின் மீதான வரி | | | | |
| 2.14.0.0.0 | **காலப்பகுதிக்கான தொழிற்பாட்டு இலாபம்** | | | | |

ரூபா ஆயிரங்களில்

**உரிமை மற்றும் ஒதுக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களை காட்டும் கூற்று - வங்கி**

| திகதி/மாதம்/ஆண்டு இல் முடிவடைந்த காலப்பகுதிக்கானது | உரிமை மூலதனம் | | | | ஒதுக்கங்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விடயம் | சாதாரண வாணிக்கத் தகுதிடைய பங்குகள் | சாதாரண வாணிக்கத் தகுதியற்ற பங்குகள் | திரண்ட முன்னுரிமை பங்குகள் | ஒதுக்கப்பட்ட மூலதனம் | ஒதுக்க நிதி | பங்கு மிகை | மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் | பொது ஒதுக்கங்கள் | ஏனைய ஒதுக்கங்கள் | வருமான | மொத்தம் |
| **திகதி/மாதம்/ஆண்டு இல் உள்ளவாறான மீதி (ஆரம்ப நிலுவை)** | | | | | | | | | | | |
| பங்கு வழங்கல்/ஒதுக்கப்பட்ட மூலதனத்திற்கான அதிகரிப்பு | | | | | | | | | | | |
| மிகையுதியப் பங்கு வழங்கல் | | | | | | | | | | | |
| உரிமைப் பங்கு வழங்கல் | | | | | | | | | | | |
| ஆதன மீள்மதிப்பீட்டிலிருந்தான மிகை | | | | | | | | | | | |
| நடைமுறை காலப்பகுதிக்கான தேறிய இலாபம் | | | | | | | | | | | |
| காலப்பகுதியில் ஒதுக்கத்திற்கு மாற்றியது | | | | | | | | | | | |
| செலுத்தப்பட்ட பங்குலாபம் - ஆண்டு | | | | | | | | | | | |
| தலைமை அலுவலகத்திற்கான இலாப மாற்றல்கள் | | | | | | | | | | | |
| ஏனையவை | | | | | | | | | | | |
| **திகதி/மாதம்/ஆண்டு இல் உள்ளவாறான மீதி (இறுதி நிலுவை)** | | | | | | | | | | | |

**உரிமை மற்றும் ஒதுக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களை காட்டும் கூற்று - வங்கி**

| திகதி/மாதம்/ஆண்டு இல் முடிவடைந்த காலப்பகுதிக்கானது | உரிமை மூலதனம் | | | | ஒதுக்கங்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விடயம் | சாதாரண வாணிக்கத் தகுதிடைய பங்குகள் | சாதாரண வாணிக்கத் தகுதியற்ற பங்குகள் | திரண்ட முன்னுரிமை பங்குகள் | ஒதுக்கப்பட்ட மூலதனம் | ஒதுக்க நிதி | பங்கு மிகை | மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் | பொது ஒதுக்கங்கள் | ஏனைய ஒதுக்கங்கள் | வருமான | மொத்தம் |
| **திகதி/மாதம்/ஆண்டு இல் உள்ளவாறான மீதி (ஆரம்ப நிலுவை)** | | | | | | | | | | | |
| பங்கு வழங்கல்/ஒதுக்கப்பட்ட மூலதனத்திற்கான அதிகரிப்பு | | | | | | | | | | | |
| மிகையுதியப் பங்கு வழங்கல் | | | | | | | | | | | |
| உரிமைப் பங்கு வழங்கல் | | | | | | | | | | | |
| ஆதன மீள்மதிப்பீட்டிலிருந்தான மிகை | | | | | | | | | | | |
| நடைமுறை காலப்பகுதிக்கான தேறிய இலாபம் | | | | | | | | | | | |
| காலப்பகுதியில் ஒதுக்கத்திற்கு மாற்றியது | | | | | | | | | | | |
| செலுத்தப்பட்ட பங்குலாபம் - ஆண்டு | | | | | | | | | | | |
| தலைமை அலுவலகத்திற்கான இலாப மாற்றல்கள் | | | | | | | | | | | |
| ஏனையவை | | | | | | | | | | | |
| **திகதி/மாதம்/ஆண்டு இல் உள்ளவாறான மீதி (இறுதி நிலுவை)** | | | | | | | | | | | |

## தெரிவு செய்யப்பட்ட செயற்பாட்டு குறிகாட்டிகள்

| விடயம் | நடைமுறைக் காலம் தினம்/மாதம்/ ஆண்டு | முன்னைய காலப்பகுதி தினம்/மாதம்/ ஆண்டு (கணக்காய்வு செய்யப்பட்ட) | நடைமுறைக் காலம் தினம்/மாதம்/ ஆண்டு | முன்னைய காலப்பகுதி தினம்/மாதம்/ ஆண்டு (கணக்காய்வு செய்யப்பட்ட) |
|---|---|---|---|---|
| | வங்கி (தனிப்பட்ட அடிப்படையில்) | | வங்கித் தொகுதி | |
| 4.1.0.0.0 **ஒழுங்குபடுத்தும் மூலதன போதுமை** | | | | |
| 4.1.0.0.0 மைய மூலதனம் (அடுக்கு 1 மூலதனம்) ரூபா.மில்லியன் | | | | |
| 4.1.2.0.0 மொத்த மூலதனம், ரூபா.மில்லியன் | | | | |
| 4.1.3.0.0 மைய மூலதன போதுமை விகிதம், இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் % (ஆகக்குறைந்த மூலதன போதுமை வீதம் 5 %) | | | | |
| 4.1.4.0.0 மொத்த மூலதனப் போதுமை விகிதம், இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் % (ஆகக்குறைந்த மூலதன போதுமை வீதம் 10 %) | | | | |
| 4.2.0.0.0 **சொத்துக்களின் தரம் (கடன்சொத்துப்பட்டியல் தரம்)** | | | | |
| 4.2.1.0.0 மொத்த செயற்படா முற்பணங்கள் வீதம் (நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி நீங்கலாக) | | | | |
| 4.2.2.0.0 தேறிய செயற்படா முற்பணங்கள் வீதம் (நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி மற்றும் ஏற்பாடு என்பவற்றின் தேறியது) | | | | |
| 4.3.0.0.0 **இலாபத்தன்மை இயலுமை** | | | | |
| 4.3.1.0.0 வட்டி மிகை, % | | | | |
| 4.3.2.0.0 சொத்துக்களின் மீதான வருவாய் % (வரிக்கு முன்) | | | | |
| 4.3.3.0.0 உரிமை மீதான வருவாய் % | | | | |
| 4.4.0.0.0 **ஒழுங்குபடுத்தும் திரவத்தன்மை** | | | | |
| 4.4.1.0.0 நியதிச்சட்ட திரவச்சொத்து, ரூபா மில்லியன் | | | | |
| 4.4.2.0.0 நியதிச்சட்ட திரவச்சொத்து வீதம் (ஆகக்குறைந்த திரவச்சொத்து வீதம் 20%) | | | | |
| உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவு | | | | |
| வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவு | | | | |

**உறுதிப்படுத்தல்:**

கீழே கையொப்பமிட்டிருக்கும்....................................................................... வங்கியின் முதன்மை நிறைவேற்று அதிகாரியும் மற்றும் நிதியியல் கட்டுப்பாட்டாளர்/ இணங்குவிப்பு அலுவலர் ஆகிய நாங்கள் கூட்டாக கீழேயுள்ளனவற்றை உறுதிப்படுத்துகிறோம்.

அ) மேலே தயாரிக்கப்பட்டுள்ள கூற்று மத்தியவங்கியினால் விபரிக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுக்கு இசைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆ) கணக்காய்வு செய்யப்பட்டதென குறிப்பிடப்பட்டால் ஒழிய இக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் வங்கியின் கணக்காய்வு செய்யப்படாத கூற்றுக்களிலிருந்து பிரித்து எடுக்கப்பட்டவையாகும்.

(பெயர்)

.......................................................................................

(ஒப்பம்) முதன்மை நிறைவேற்று அதிகாரி
திகதி:தினம்/ மாதம்/ ஆண்டு

(பெயர்)

.......................................................................................

(ஒப்பம்) நிதியியல் கட்டுப்பாட்டாளர்/ இணங்குவிப்பு அலுவலர்
திகதி:தினம்/ மாதம்/ ஆண்டு

## பத்திரிகைக்கு வெளியிடுவதற்காகத் தயாரிக்கப்படும் வங்கிக் கணக்குகளுக்கான அறிவுறுத்தல்கள்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

*30.9.2005*

**விரிவான அறிவுறுத்தல்கள்**

### 1. ஐந்தொகை தொகை

ரூபாய் ஆயிரங்களில்

| தொடர் குறியீடு | தொடர் விடயம் | அறிவுறுத்தல்கள் |
|---|---|---|
| **1.1.1.0.0** | **ஐந்தொகையில் உள்ளடங்கும் சொத்துக்கள் கையிலுள்ள காசு** | பாதுகாப்பான நிலக்கீழ் அறையில், தன்னியக்க கொடுப்பனவு இயந்திரத்தில், காசாளரால் வைத்திருக்கப்படும் உள்நாட்டு வெளிநாட்டு நாணயத் தாள்கள், குற்றிகள். |
| **1.1.2.0.0** | **இலங்கை மத்திய வங்கியுடனான ஏனைய மத்திய வங்கிகளுடனான நிலுவைகள்** | ஒதுக்கத் தேவைப்பாட்டினாலும் ஏனைய கொடுக்கல் வாங்கல்களினாலும் இலங்கை மத்திய வங்கியில்/ஏனைய மத்திய வங்கிகளில் ஏற்படும் நிலுவைகள். |
| **1.1.3.0.0** | **வங்கிகள் மற்றும் ஏனைய நிதிநிறுவனங் களிடமிருந்தான வருமதிகள்** | பின்வரும் விடயங்களிலிருந்தான உப மொத்தம். |
| **1.1.3.1.0** | சேகரித்தல் செய்முறையின்போது எழும் காசு விடயங்கள் | உள்நாட்டு வெளிநாட்டு வங்கியாணை, காசோலைகள் மற்றும் ஏனைய வாடிக்கையாளர் சேவைக்காக வைத்திருக்கப்படும் பயன்படுத்தக்கூடிய முத்திரைகள், காசுக்கட்டளைகள், தபாற்கட்டளைகள் மற்றும் வங்கியால் கொள்வனவு செய்யப்பட்டு சமர்ப்பித்தலின்போது பணம் செலுத்த வேண்டிய பயணக் காசோலைகள் போன்ற காசுக்கு சமமான விடயங்கள். |
| 1.1.3.2.0 | இலத்திரனியல் அட்டைகளுடனான தேறிய காசு முற்பணங்கள் | ஏனைய வங்கிகளின் அட்டையை வைத்திருப்போர் குறித்த வங்கியின் தன்னியக்க கொடுப்பனவு இயந்திரத்தில் இருந்து மீள எடுத்த பணத்திலிருந்து குறித்த வங்கியின் அட்டையை வைத்திருப்பவர்கள் ஏனைய வங்கிகளின் தன்னியக்க கொடுப்பனவு இயந்திரங்களிலிருந்து எடுத்த பணத்தை கழிக்க வருவது. |
| 1.1.3.3.0 | கையிலுள்ள தங்ககட்டிகள் | கையிலுள்ள தங்க பிஸ்கட்டுகள். |
| 1.1.3.4.0 | **இலங்கையில் உள்ள உரிமம்பெற்ற வணிக வங்கிகளுடனான நிலுவைகள்** | இலங்கையில் உள்ள வணிக வங்கிகளில் பராமரிக்கப்படும் நடைமுறைக் கணக்குகள். |
| 1.1.3.5.0 | வெளிநாடுகளிலுள்ள வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களுடனான நிலுவைகள் (நொஸ்ரோ கணக்கு) | அந்நிய நாணய கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்காக வெளிநாட்டில் வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களில் பராமரிக்கப்படும் நொஸ்ரோ கணக்குகளில் (குறித்த வங்கியின் புத்தகங்களின்படி) உள்ள நிலுவைகள். |
| 1.1.3.6.0 | தலைமை அலுவலகம், வெளிநாட்டு கிளைகள் (நொஸ்ரோ கணக்குகள்) மற்றும் வங்கியினுடைய அந்நிய நாணய வங்கிப்பிரிவு என்பவற்றிலிருந்தான நிலுவைகள்(தேறியது) | அந்நிய நாணய கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக வெளிநாட்டு வங்கிகள் நிதிநிறுவனங்களில் பராமரிக்கப்படும் நொஸ்ரோ கணக்குகளிலிருந்தான (வங்கியின் புத்தகங்களின் படி) நிலுவைகள். |
| 1.1.3.7.0 | இலங்கையிலுள்ள வங்கிகள் நிதிநிறுவனங் களுடனான வைப்புக்கள் | இலங்கையிலுள்ள வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களுடனான ஒருநாள் மற்றும் குறுகிய கால (12 மாதங்களிற்குட்பட்ட) அடிப்படையிலான வைப்புக்கள் |
| 1.1.3.8.0 | வெளிநாட்டு வங்கிகள் நிதிநிறுவனங் களுடனான வைப்புக்கள் | வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களுடனான ஒருநாள் மற்றும் குறுகிய கால (12 மாதங்களிற்குட்பட்ட) அடிப்படையிலான வைப்புக்கள். |
| 1.1.3.9.0 | தலைமை அலுவலகம், வெளிநாட்டு நிலைமைகள் மற்றும் வங்கியினுடைய அந்நிய நாணய வங்கிப் பிரிவுகளுடனான வைப்புக்கள் | தலைமை அலுவலகம், வெளிநாட்டு கிளைகள் மற்றும் வங்கியினுடைய அந்நிய நாணய வங்கிப்பிரிவு என்பவற்றுடனான ஒருநாள் மற்றும் குறுகிய கால (12 மாதங்களிற்குட்பட்ட) அடிப்படையிலான வைப்புக்கள்) |
| 1.1.3.10.0 | நிதிநிறுவனங்களுடனான மீள்விற்பனை உடன்படிக்கையின்கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணைகள் | திறைசேரி உண்டில்கள், முறிகள், வணிகத் தாள்கள், உத்தரவாதப் பத்திரங்கள் மற்றும் தொகுதிக்கடன்கள் போன்ற கடன் கருவிகளுக்கு எதிராக மத்திய வங்கி, வணிக வங்கிகள் சிறப்புத்தன்மை வாய்ந்த வங்கிகள், முதனிலை வணிகர்கள் மற்றும் நிதிநிறுவனங்கள் ஆகியவற்றிக்கு வழங்கப்பட்ட கடன்கள் |
| 1.1.3.11.0 | ஏனையவை | மேலே கொடுக்கப்பட்ட கணக்கு தலைப்புக்களில் குறிப்பிட்டுக் காட்டப்படாத ஏனைய தொடர்புபட்ட நிலுவைகள் |

| தொடர் குறியீடு | தொடர் விடயம் | அறிவுறுத்தல்கள் |
|---|---|---|
| 1.1.4.0.0 | **முதலீடுகள் - வியாபார நோக்கிலான கணக்கு** | விடயங்கள் 1.4.0 மற்றும் 1.1.4.2.0 இன் உப மொத்தம் |
| 1.1.4.1.0 | அரச பிணைகள் | கீழ்வரும் விடயங்களின் உபமொத்தம் |
| 1.1.4.1.1 | திறைசேரி உண்டியல்கள் | திறைசேரி உண்டியல்களின் கிரயம் அல்லது சந்தைப் பெறுமதி (வியாபார நோக்கிலான தொகுதியில் காணப்படும் திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடு சந்தைப் பெறுமதியில் விலையிடப்பட்டு அப்பெறுமதியிலான ஐந்தொகையில் வெளிக்காட்டல்) |
| 1.1.4.1.2 | திறைசேரி முறிகள் | திறைசேரி முறிகளின் கிரயம் அல்லது சந்தைப் பெறுமதி (வியாபர நோக்கிலான தொகுதியில் காணப்படும் திறைசேரி முறிகள் மீதான முதலீடு சந்தைப்பெறுமதியில் விலையிடப்பட்டு அப்பெறுமதியினை ஐந்தொகையில் வெளிக்காட்டல்). |
| 1.1.4.1.3 | இலங்கை அபிவிருத்தி முறிகள் | இலங்கை அபிவிருத்தி முறிகளின் கிரயம் |
| 1.1.4.1.4 | ஏனைய அரச பிணைகள் | ஏனைய அனைத்து அரச பிணைகளினதும் கிரயம் அல்லது சந்தைப் பெறுமதி என்பவற்றுள் எது குறைவானதோ அப்பெறுமதி. |
| **1.1.4.2.0** | **ஏனைய பிணைகள்** | **விடயங்களின் உபமொத்தம். 1.1.4.2.1 - 1.1.4.2.4 இன்** |
| 1.1.4.2.1 | பங்குகள் மற்றும் நம்பிக்கை அலகுகள் - பொதுமக்களின்பார்வைக்கு பட்டியலிடப் பட்டவை. | சாதாரண மற்றும் முன்னுரிமை பங்குகள் மற்றும் நம்பிக்கை அலகுகளிலான பங்குகள் என்பவற்றின் கிரயம் அல்லது சந்தைப்பெறுமதி என்பவற்றில் எது குறைவானதோ அப்பெறுமதி. |
| 1.1.4.2.2 | பங்குகள் மற்றும் நம்பிக்கை அலகுகள்-பட்டியலிடப்படாதவை | பட்டியலிடப்படாத உரிமைப் பங்குகள் மற்றும் பட்டியலிடப்படாத நம்பிக்கை அலகுகளிலான பங்குகள் என்பவற்றின் கிரயம் அல்லது சந்தைப்பெறுமதி என்பவற்றுள் எது குறைவானதோ அப்பெறுமதி |
| 1.1.4.2.3 | கடன் பிணைகள் | கடன் கருவிகளின் கிரயம் அல்லது அவற்றிலிருந்தான அறவிடக்கூடிய முதல் என்பற்றுள் எது குறைவானதோ அப்பெறுமதி; உழைக்கப்படாத வட்டி அல்லது கழிவு என்பவற்றை கழித்து தேறிய பெறுமதியை காட்டவும். |
| 1.1.4.2.4 | ஏனையவை | ஏனைய எல்லா வைத்திருக்கப்படும் பிணைகளினதும் கிரயம் அல்லது சந்தைப்பெறுமதி என்பவற்றுள் எது குறைவானதோ அப்பெறுமதி. |
| **1.1.5.0.0** | **முதிர்வுதிகதி வரை வைத்திருக்கப்படும் நோக்கத்திலான முதலீடுகள்** | பின்வரும் விடயங்களின் உபமொத்தம். முதிர்வுத் திகதி வரை வைத்திருக்கப்படும் பிணைகள் என்பவை முதிர்வுத் திகதி வரை வைத்திருக்கும் நோக்கத்தோடு கொள்வனவு செய்யப்பட்ட பிணைகளை குறிக்கும் (1.1.5.1+1.5.2-1.1.5.3) |
| **1.1.5.1.0** | **அரச பிணைகள்** | **விடயங்களின் உபமொத்தம் 1.1.5.1.1 -1.1.5.1.4 வரையான** |
| 1.1.5.1.1 | திறைசேரி உண்டியல்கள் | திறைசேரி உண்டியல்களின் கிரயம் |
| 1.1.5.1.2 | திறைசேரி முறிகள் | திறைசேரி முறிகளின் கிரயம் |
| 1.1.5.1.3 | இலங்கை அபிவிருத்தி முறிகள் | இலங்கை அபிவிருத்தி முறிகளின் கிரயம் |
| 1.1.5.1.4 | ஏனைய அரச பிணைகள் | ஏனைய எல்லா அரச பிணைகளினதும் கிரயம் |
| **1.1.5.2.0** | **ஏனைய பிணைகள்** | **விடயங்களின் உபமொத்தம் 1.1.5.2.1 -1.1.5.2.4 வரையான** |
| 1.1.5.2.1 | பங்குகள் மற்றும் நம்பிக்கை அலகுகள் பொதுமக்களின் பார்வைக்கு பட்டியலிடப் பட்டவை. | சாதாரண மற்றும் முன்னுரிமை பங்குகள் மற்றும் நம்பிக்கை அலகுகளிலான பங்குகள் என்பவற்றின் கிரயம் |
| 1.1.5.2.2 | பங்குகள் மற்றும் நம்பிக்கை அலகுகள்-பட்டியல்படுத்தப்படாதவை | பட்டியலிடப்படாத உரிமைப் பங்குகள் மற்றும் பட்டியலிடப்படாத நம்பிக்கை அலகுகளின் பங்குகள் என்பவற்றின் கிரயம். |
| 1.1.5.2.3 | கடன் பிணைகள் | கடன் கருவிகளின் கிரயம் அல்லது அவற்றிலிருந்தான அறவிடக்கூடிய முதல் என்பவற்றுள் எது குறைவானதோ அப்பெறுமதி; உழைக்கப்படாத வட்டி அல்லது கழிவு என்பவற்றை கழித்து தேறிய பெறுமதியை காட்டவும். |
| 1.1.5.2.4 | ஏனையவை | ஏனைய எல்லா வைத்திருக்கப்படும் பிணையங்களினதும் கிரயம் |

| தொடர் குறியீடு | தொடர் விடயம் | அறிவுறுத்தல்கள் |
|---|---|---|
| **1.1.5.3.0** | **கழிக்குக :பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சிக்கான ஏற்பாடு** | **பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சிக்காக செய்யப்பட்ட ஏற்பாடு** |
| 1.1.6.0.0 | இணை நிறுவனம் மற்றும் துணை நிறுவனங்களிலான முதலீடுகள் | இணை நிறுவனம் மற்றும் துணை நிறுவனங்களிலான முதலீடுகளின் மொத்தத் தொகை |
| 1.1.7.0.0 | மொத்த கடன்களும் முற்பணங்களும் | பின்வரும் விடயங்களின் உபமொத்தம் (கடன் உழைப்பு ஒதுக்கம் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி என்பன கழிக்கப்பட்ட தேறியது) இங்கு பெறப்படும் மொத்தத் தொகை தேறிய கடன்களினதும் முற்பணங்களினதும் மொத்தத் தொகைக்கு (குறிப்பு 1) சமமாக இருத்தல் வேண்டும். |
| **1.1.7.1.0** | **மொத்த தொழிற்படும் கடன்களும் முற்பணங்களும் (திரட்டியது)** | **விடயங்களின் உபமொத்தம் 1.1.7.1.1-1.1.7.1.4 வரையான** |
| 1.1.7.1.1 | செலாவணி உண்டியல்கள் | எல்லா வகையான தொழிற்படும் செலாவணி உண்டியல்களின் மொத்தத் தொகையை காட்டுக. |
| 1.1.7.1.2 | மேலதிக பற்றுக்கள் | எல்லா தொழிற்படும் மேலதிகப் பற்றுக்களின் மொத்தத் தொகையை காட்டுக. |
| 1.1.7.1.3 | பெறக்கூடிய குத்தகை வருமானங்கள் | உழைக்கப்படாத குத்தகை வருமானம் மற்றும் மீள அறிவிடப்படக்கூடிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நீங்கலாக எல்லா வகையான தொழிற்படும் பெறக்கூடிய குத்தகை வருமானங்களின் மொத்தத் தொகையை காட்டுக. |
| 1.1.7.1.4 | ஏனைய கடன்கள் | எல்லா வகையான ஏனைய தொழிற்படும் கடன்களின் மொத்தத் தொகையை காட்டுக. (தவணைக் கடன்கள், பொதியிடல் கடன்கள், பிணையக் கடன்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள், முறிகள், வணிகத் தாள்கள், உத்தரவாத பத்திரங்கள் போன்ற கடன் கருவிகளுக்கு (மீள விற்பனை உடன்படிக்கையின்கீழ் கொள்வனவு செய்யப்பட்ட) எதிராக நிதிநிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய வாடிக்கை யாளர்களுக்கு வழங்கப்படும் கடன்கள், தொகுதிக்கடன்கள் மற்றும் ஏனைய கடன்கள். |
| **1.1.7.2.0** | **மொத்த தொழிற்படாத கடன்களும் முற்பணங்களும் (திரட்டியது).** | **பின்வரும் விடயங்களின் உபமொத்தம்** |
| 1.1.7.2.1 | செலாவணி உண்டியல்கள் | எல்லா வகையான தொழிற்படாத செலாவணி உண்டியல்களின் மொத்தத் தொகையை காட்டுக. |
| 1.1.7.2.2 | மேலதிக பற்றுக்கள் | எல்லா தொழிற்படாத மேலதிகப்பற்றுக்களின் மொத்த தொகையை காட்டுக. |
| 1.1.7.2.3 | பெறக்கூடிய குத்தகை வருமானங்கள் | உழைக்கப்படாத குத்தகை வருமானம் மற்றும் மீள அறவிடக்கூடிய பெறுமதி சேர்க்கப்பட்ட நீங்கலாக எல்லா வகையான தொழிற்படாத பெறக்கூடிய குத்தகை வருமானங்களின் மொத்தத் தொகையை காட்டுக. |
| 1.1.7.2.4 | ஏனைய கடன்கள் | எல்லா வகையான ஏனைய தொழிற்படாத கடன்களின் மொத்தத் தொகையை காட்டுக. (தவணைக் கடன்கள், பொதியிடல் கடன்கள், பிணையக் கடன்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள், முறிகள் வணிகத்தாள்கள், உத்தரவாத பத்திரங்கள் போன்ற கடன் கருவிகளுக்கு (மீள் விற்பனை உடன்படிக்கையின்கீழ் கொள்வனவு செய்யப்பட்ட) எதிராக நிதிநிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கடன்கள், தொகுதிக்கடன்கள் மற்றும் ஏனைய கடன்கள். |
| 1.1.7.2.5 | வட்டி வருமதிகள் | பொருத்தமான கடன்/ முற்பணக் கணக்குகளில் வரவு வைக்கப்படாத பெறப்பட வேண்டிய சேகரிக்கப்படாத வட்டி. |
| **1.1.7.3.0** | **திரட்டிய மொத்த கடன்களும் முற்பணங்களும்** | **மொத்த தொழிற்படும் மற்றும் தொழிற்படாத கடன்கள்/ முற்பணங்களின் நிலுவைகளின் கூட்டுத்தொகையை குறிப்பிடுக.** |
| 1.1.7.4.0 | நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி | இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டலின்படி நிறுத்தி வைக்கப்பட்ட வட்டியானது கடன் மற்றும் முற்பணங்களின் முதலினுள் அல்லது வருமதி வட்டியினுள் உள்ளடக்கப்பட்டிருந்தால் அவ்வாறான நிறுத்தி வைக்கப்பட்ட வட்டியை காட்டுக. |

| தொடர் குறியீடு | தொடர் விடயம் | அறிவுறுத்தல்கள் |
|---|---|---|
| 1.1.7.5.0 | குறித்த கடன் இழப்புக்களுக்கான ஏற்பாடுகள் | இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களின்படி குறிப்பிட்டு இனம் காணப்பட்ட கடன் இழப்புக்களுக்கான வரிக்கு முந்திய இலாபத்திலிருந்து செய்யப்பட்ட ஏற்பாட்டினை காட்டுக. |
| 1.1.7.6.0 | பொதுவான கடன் இழப்புக்களுக்கான ஏற்பாடுகள் | பொதுவான கடன் இழப்புக்களுக்காக வரிக்கு முந்திய இலாபத்திலிருந்து செய்யப்பட்ட ஏற்பாட்டினை காட்டுக. |
| **1.1.7.7.0** | **மொத்தத் தேறிய கடன்களும் முற்பணங்களும்** | **திரட்டிய கடன் மற்றும் முற்பணங்களிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி மற்றும் எல்லா கடன் இழப்பு ஏற்பாடுகளையும் கழித்த பின்னரான தேறிய கடன் மற்றும் முற்பண நிலையினை காட்டுக.** |
| 1.1.8.0.0 | ஏனைய சொத்துக்கள் | விடயங்களின் உபமொத்தம். 1.1.8.1.0-1.1.8.7.0 வரையான |
| 1.1.8.1.0 | முற்பணங்களும் பயன்பாட்டுக்கான வழங்கலும் | தவணைக் கட்டண வைப்புக்கள், பொதுவான சேவைகளை பயன்படுத்துவதற்காக செய்யப்பட்ட வைப்புக்கள், எதிர்கால செலவுகளிற்காக கொடுக்கப்பட்ட முற்பணங்கள் மற்றும் நுகரக்கூடிய சரக்குகள், குறைவேலைகள் போன்றவற்றிற்காக கொடுக்கப்பட்ட முற்பணங்கள்/ வைப்புக்கள். |
| 1.1.8.2.0 | தொங்கல் கணக்கு | ஏதும் இனம் காணப்படாத கணக்கு மீதிகளிலான வேறுபாடுகள் மற்றும் இணங்காத கணக்குகளின் மீதிகள். |
| 1.1.8.3.0 | வைப்புக்கள் பிணைகள் மீதான திரட்டிய வட்டி வருமதிகள் | வட்டி உழைக்கும் வைப்புக்கள் மற்றும் பிணைகளில் இருந்து சேகரிக்கப்படாத திரட்டிய வட்டியை காட்டுக. |
| 1.1.8.4.0 | வருமதி கணக்குகள் | வாடிக்கையாளர் சார்பாக செய்யப்பட்ட செலவுகள் மீதான மீள்நிரம்பலிலான தாமதம் கடன் தாக்கத்தோடு தொடர்பற்றது) வாடகை வருமதி, கட்டணங்கள், புரள்வு வரி, தேசிய பாதுகாப்பு வரி, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, கடன்பாடுனர் சார்பாக ஏற்படும் ஏதேனும் செலவுகள் இலாப நட்ட கணக்கில் செலவாக காட்டப்படாதவிடத்து அவை கடன்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| 1.1.8.5.0 | முற்பண கம்பனி வரி | செலுத்தப்பட வேண்டிய வரியில் இருந்து இன்னும் கழிக்கப்படாத செலுத்தப்பட்ட வரி முற்பணம் |
| 1.1.8.6.0 | கிளைகளுக்கிடையிலான/தலைமை அலுவலகத்திலிருந்தான நிலுவைகள் வருமதிகள் (உள்நாட்டு) | தலைமை அலுவலகம், கிளைகள் மற்றும் அந்நிய நாணய வங்கிப்பிரிவு என்பவற்றுடன் வியாபார நடவடிக்கைகளுக்காக நடைமுறைப்படுத்தப்படும் கணக்குகளின் நிகர மீதி (அல்லது ஒன்று சேர்க்கப்பட்ட மீதி) |
| 1.1.8.7.0 | ஏனையவை | மேலே கொடுக்கப்பட்டுள்ள கணக்கு தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்படாத ஏனைய சொத்துக் கணக்குகளின் மீதிகள். |
| **1.1.9.0.0** | **தொட்டுணர முடியாத சொத்துக்கள்** | நன்மதிப்பு, வியாபாரக்குறி, பண்ட அபிவிருத்தி கிரயம் மற்றும் தொட்டுனர முடியாத சொத்துக்களின் பெறுமதியைக் காட்டுதல் |
| 1.1.10.0.0 | **முதலீட்டு சொத்துக்கள்** | பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சிக்கான ஏற்பாட்டினை கழித்து ஆனால் கைவிடப்பட்ட சொத்துக்கள் உள்ளடக்காமல் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏதாவது சேர்க்கைகள் மற்றும் இழப்புக்கள்/ விற்பனைகள் இருப்பின் அவற்றினை செம்மையாக்கிய பின்னரான முதலீட்டு ஆதனத்தின் மொத்தத் தொகையை கட்டுக. |
| 1.1.11.0.0 | ஆதனம், பொறியும் உபகரணமும் (தேறியது) | பெறுமானத்தேய்வு கழித்த பின்னரான நிலையான சொத்துக்களின் உபமொத்தம் |
| 1.1.11.1.0 | காணி கட்டிடம் | காணி மற்றும் கட்டிடங்களும் அதனுடனான முன்னேற்றங்களும் அல்லது வங்கி தொழிற்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் பொருத்துக்களுக்கு வருமான கிரயம் |
| 1.1.11.2.0 | அசையும் சொத்துக்கள் | உபகரணங்கள், வாகனங்கள், அலுவலக இயந்திரங்கள் பெறுமான தேய்விற்குட்படும் மென்பொருள்கள் போன்ற அசையும் சொத்துக்களின் கிரயம். |
| 1.1.11.3.0 | பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு | காணி, கட்டிடம், முன்னேற்றங்கள் மற்றும் அசையும் சொத்துக்கள் என்பன வற்றிருந்து பெறுமான தேய்வாக ஒதுக்கப்பட்ட மொத்த தொகை. |
| **1.1.10.0.0** | **மொத்த ஐந்தொகையில் உள்ளடங்கும் சொத்துக்கள்** | எல்லா ஐந்தொகையில் உள்ளடங்கும் சொத்துக்களினதும் மொத்தம். |

| தொடர் குறியீடு | தொடர் விடயம் | அறிவுறுத்தல்கள் |
|---|---|---|
| | **ஐந்தொகையில் உள்ளடங்கும் பொறுப்புக்கள் உரிமை மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | |
| **1.2.1.0.0** | **மொத்த வைப்புக்கள்** | விடயங்களின் மொத்தம் 1.2.1.1.0-1.2.1.5.0 வரையான |
| 1.2.1.1.0 | கேள்வி வைப்புக்கள் | எல்லா வகையான கேள்வி வைப்புக்களினதும் செலவு மீதிகள் (வரவு மீதிகள் கழிக்கப்படாத திரட்டிய தொகை) |
| 1.2.1.2.0 | சேமிப்பு வைப்புக்கள் | எல்லா வகையான சேமிப்பு வைப்புக்களினதும் மொத்தத்தை காட்டுக. |
| 1.2.1.3.0 | கால வைப்புக்கள் | தவணை வைப்புக்கள், சேமிப்பு சான்றிதழ்கள் குறுகிய கால முன்னறிவித்தலுடன் மீளப்பெறக்கூடிய அழைப்பு வைப்புக்கள், வைப்புச் சான்றிதழ்கள் (1-7 நாள்கள்) |
| 1.2.1.4.0 | பிணைய வைப்புக் கணக்குகள் | வங்கி வாடிக்கையாளர்களால் ஐந்தொகைக்கு வெளியான கடன் வசதிகளை பெறுவதற்கும் அல்லது இன்னும் வாடிக்கையாளர்களுக்கு விடுவிக்கப்படாத கடன்களுக்கும் பிணையாக காசு முற்பணங்கள். |
| 1.2.1.5.0 | ஏனைய வைப்புக்கள் | மேலே கொடுக்கப்பட்ட கணக்கு தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டவை தவிர்ந்த ஏனைய வைப்புக் கணக்கு மீதிகள் |
| **1.2.2.0.0** | **மொத்தக் கடன்பாடுகள்** | விடயங்களின் உபமொத்தம் 1.2.2.1.0-1.2.2.6.0 வரையான |
| 1.2.2.1.0 | இலங்கை மத்திய வங்கியிடமிருந்தான கடன்பாடுகள் | இலங்கை மத்திய வங்கியிடமிருந்தான எல்லா கடன்பாடுகளினதும் அல்லது செலுத்த வேண்டிய மொத்தத்தை காட்டுக (மீள்கொள்வனவு உடன்படிக்கையின் விற்பனை செய்யப்பட்ட பிணைகள் மீதான கடன்பாடுகள் தவிர்ந்த) |
| 1.2.2.2.0 | இலங்கையிலுள்ள வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிலிருந்தான கடன்பாடுகள் | இலங்கையிலுள்ள வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களிலிருந்தன எல்லா வகையான கடன்பாடுகளும் (மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணைகள் மீதான கடன்பாடுகள் தவிர்ந்த) |
| 1.2.2.3.0 | வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களிடமிருந்தான கடன் பாடுகள் | வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களிடமிருந்தான எல்லா வகையான கடன்பாடுகளும். |
| 1.2.2.4.0 | மீள்கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணைகள் | முதிர்வுத் திகதிக்கு முன்னராக கொடுத்துத் தீர்க்கப்படும் எல்லா உடன்படிக்கையினுடனான வங்கியின் திறைசேரி உண்டியல்கள், முறிகள் மற்றும் ஏனைய பிணைகள் மூலமான கடன்பாடுகள் |
| 1.2.2.5.0 | உப தவணைக் கடன்கள் | மூலதனப்போதுமை நோக்கத்திற்காக கருத்தில் எடுப்பதற்கு தகுதியானதாக இலங்கை மத்திய வங்கியினால் அனுமதியளிக்கப்பட்ட தவணைக் கடன்கள் மற்றும் ஏனைய உப தவணைக்கடன்கள் |
| 1.2.2.6.0 | ஏனைய கடன்பாடுகள் | மேலே குறிப்பிடப்படாத ஏனைய வகை கடன்பாடுகள் |
| **1.2.3.0.0** | **பிற்போடப்பட்ட வரி** | கால வேறுபாட்டின் காரணமாக ஏற்படும் பிற்போடப்பட்ட வரி |
| 1.2.4.0.0 | **நடைமுறை காலப்பகுதிக்கான வரி** | **வரி செலுத்தத்தக்க மொத்ததொகை** |
| **1.2.5.0.0** | **ஏனைய பொறுப்புக்கள்** | விடயங்களின் உப மொத்தம் 1.2.5.10-1.2.5.7.0 வரையான |
| 1.2.5.1.0 | முன்னதாக அறவிடு செய்யப்பட்ட கட்டணங்கள் | எதிர்காலப்பகுதிக்கு உரியதான ஆனால் முன்னதாக பெறப்பட்ட ஏதாவது வருமானங்கள் |
| 1.2.5.2.0 | செலுத்த வேண்டிய வரி | செலுத்த வேண்டிய மொத்த வரியின் பெறுமதி |
| 1.2.5.2.0 | வைப்புக்கள் மீதான திரட்டிய வட்டிச் சென்மதி | இலங்கை ரூபாவினால் குறித்து வைக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் வைப்புக்களின் மீது இன்னும் செலவு வைக்கப்படாத திரட்டிய வட்டி. |
| 1.2.5.3.0 | கடன்பாடுகள் மீதான திரட்டிய வட்டிச் சென்மதி | இலங்கை ரூபாவினால் குறித்து வைக்கப்பட்ட கடன்பாடுகளின் மீது இன்னும் செலுத்தப்பட்ட வேண்டப்படாத திரட்டிய வட்டி |
| 1.2.5.4.0 | ஏனைய திரட்டிய செலவுகளும் சென்மதி கணக்குகளும் | பொதுச்சேவைகளை பயன்படுத்துவதற்கு ஏற்படும் செலவுகளுக்கான ஏற்பாடுகள், தண்டப்பணம், வாடிக்கையாளர் கணக்குகள்/ கொடுக்கல் வாங்கல்கள் மீதான வரிகள், பாதுகாப்பு பெட்டகங்களிலான வைப்புக்களின் மேலதிக அடகு முற்பணம், வாடகை முற்பண வைப்புக்கள், ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி பங்களிப்புக்களின் சென்மதிகள். |

| தொடர் குறியீடு | தொடர் விடயம் | அறிவுறுத்தல்கள் |
|---|---|---|
| 1.2.5.6.0 | தொங்கற் கணக்குகள் | ஏதும் இனம் காணப்படாத கணக்கு மீதிகளிலான வேறுபாடுகள், இணங்காத கணக்குளின் மீதிகள் மற்றும் தொடர்புபட்ட வாடிக்கையாளரின் கணக்குகளில் வரவு வைக்கப்படாத வசூலிற்காக அனுப்பி வைக்கப்பட்ட காசோலைகள் |
| 1.2.5.6.0 | உள்ளகக்கிளை/ தலைமை அலுவலகம் கிளைகளின் நிலுவை வரவேண்டியது உள்ளூர் | கோரல் பற்றுச்சீட்டுக்கள் அறிவிப்புக்கள் மற்றும் கிளைகள் தலைமை அலுவலகத்துடனான ஏனைய கொடுக்கல்வாங்கல்கள் போன்ற தலைமை அலுவலகங்களுடன் பேணப்படும் காசோலை போன்ற பல கணக்குகளின் தேறிய மீதி |
| 1.2.5.7.0 | ஏனையவை | மேலே குறிப்பிடப்படாத ஏதேனும் பொறுப்புக்கள். |
| **1.2.6.0.0** | **ஐந்தொகையில் உள்ளடக்கப்படும் பொறுப்புக்களின் மொத்தம்** | **மொத்த வைப்புக்கள், மொத்த கடன்பாடுகள், மொத்த ஏனைய பொறுப்புக்கள் மற்றும் பிற்போடப்பட்ட வரி என்பவற்றின் உபமொத்தம்** |
| **1.3.0.0.0** | **சிறுபான்மை நலன்** | |
| 1.4.0.0.0 | **மூலதனமும் ஒதுக்கங்களும்** | **விடயங்களின் உப மொத்தம் 1.4.1.0-1.4.3.0.0 வரை** |
| 1.4.1.0.0 | பங்கு மூலதனம்/ ஒப்படைக்கப்பட்ட மூலதனம் | வாக்களிக்க தகுதியானதும் வாக்களிக்க தகுதியற்றதுமான சாதாரண பங்குகள் மற்றும் வழங்கப்பட்ட முழுவதும் அல்லது பகுதியளவில் செலுத்தப்பட்ட முன்னுரிமைப்பங்குகள் மற்றும் தன்மை வலுவாக்கத்தினால் முன்னுரிமைப் பங்குகளாக செலுத்தப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட முடியாமைக்கு (வங்கியாளர்கள் பங்கு மற்றும் ஒதுக்குப்பண மாற்றங்கள் கொள்கை கூற்றுக்களில் குறிப்பிட்டவாறு மொத்த நியதி ஒதுக்கு நிதியத்துடன் உடன்படுவதாக இருத்தல் வேண்டும். |
| 1.4.2.0.0 | நியதிச்சட்ட ஒதுக்கீடு நிதிகள் | வங்கிச் சட்டத்தின் பிரிவு 20 இன் பிரகாரம் உருவாக்கப்பட்ட நியதிச்சட்ட ஒதுக்கு நிதிகள் (தொகைகள், உரிமையாண்மை மாற்றுக்கூற்றில் குறிப்பிடப்பட்ட மொத்த உரிமை மூலதன தொகைகளுடன் சமப்பட வேண்டும். |
| 1.4.3.0.0 | ஏனைய மொத்த ஒதுக்குகள் | நியதிச்சட்ட ஒதுக்கு விதிகள் தவிர்ந்த ஏனைய ஒதுக்குகளின் பெறுமதி (இத்தொகைகள், உரிமையாண்மை மாற்றக் கூற்றில் குறிப்பிடப்பட்ட மொத்த ஏனைய ஒதுக்க தொகைகளுடன் சமப்பட வேண்டும். |
| **1.5.0.0.0** | **மொத்த ஐந்தொகையில் உள்ளடக்கப்பட்ட பொறுப்புக்களுடன் உரிமை மூலதனமும் ஒதுக்கங்களும்** | 1.2.5.0.0, 1.3.0.0.0, 1.4.0.0.0 வரிகளின் மொத்தம் |
| **1.6.0.0.0** | **ஐந்தொகையில் உள்வாங்கப்படாதவை** | நிச்சயமற்ற பொறுப்புக்கள் அர்ப்பணிப்பு மற்றும் எதிர்பதிவு கணக்குகள் |
| **1.6.1.0.0** | **நிச்சயமற்ற பொறுப்புக்கள்** | உப மொத்தம் 1.4.1.1.0-1.6.1.0 வரையான |
| 1.6.1.1.0 | கடன் பத்திரம் | வங்கியால் திறக்கப்பட்ட கடன் பத்திரங்களின் பாவனையில் உள்ள காலாவதியாகாத மீதி. |
| 1.6.1.2.0 | உத்தரவாதம், முறிகள் | வேலை உத்தரவாதம், நிதி உத்தரவாதம், செயற்படும் முறிகள் போன்ற வங்கிகளால் வழங்கப்பட்ட காலாவதியாகாத பிணைகளும் முறிகளும். |
| 1.6.1.3.0 | கப்பற் பிணை | கடன் பத்திரம் மற்றும் கடன் பத்திரம் அல்லா பத்திரங்களுக்காக வழங்கப்பட்ட கப்பற் பிணை |
| 1.6.1.4.0 | ஒப்புக் கொள்ளல்கள் | பிற்போடப்பட்ட திகதி ஒன்றில் முதிர்ச்சியடையும் கட்டளைப் பத்திரங்களுக்கு எதிராக வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் இறக்குமதி ஆவணங்கள் |
| 1.6.1.5.0 | பங்குகள் மற்றும் ஆவணங்களுக்கு கீழ் கையொப்பமிடல் | பங்குகள், வணிகப் பத்திரங்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் பொதுமக்களால் வாங்கப்படாதவிடத்து வங்கிகள் கீழ் கையொப்பமிடுதலை குறிக்கும். |
| 1.6.1.6.0 | ஆவணப்படுத்தல் மற்றும் பிணை அளிக்கப்பட்ட ஆவணங்கள்/ புறக்குறிப்படுதல் | வங்கியால் உத்தரவாதமளிக்கப்பட்ட/புறக்குறிப்பிடப்பட்ட அல்லது பிணை வைக்கப்பட்ட சொத்துக்களுக்கு எதிராக வழங்கப்பட்ட கடன், முற்பணங்களின் மொத்தம் |
| 1.6.1.7.0 | முற்கூட்டிய ஒப்பந்தம் | கொள்வனவு, விற்பனை ஒப்பந்தங்கள் உள்ளடங்கலாக மேற்கொள்ளப்படும் அந்நிய செலாவணி முன்கூட்டிய ஒப்பந்தம் |
| 1.6.1.8.0 | உடன் ஒப்பந்தங்கள் | கொள்வனவு, விற்பனை ஒப்பந்தங்கள் உள்ளடங்கலாக மேற்கொள்ளப்படும் அந்நிய செலாவணி தீர்ப்பனவுத்திகதி ஒப்பந்தம் |

| தொடர் குறியீடு | தொடர் விடயம் | அறிவுறுத்தல்கள் |
|---|---|---|
| 1.6.1.9.0 | வழிவந்த ஒப்பந்தங்கள் | அந்நிய செலாவணி மற்றும் உரிமையாண்மை சம்பந்தப்பட்ட ஆவணங்கள், வட்டி வீதங்களின் தெரிவு என்பன உள்ளடங்கலாக அனைத்து வழிவந்த ஒப்பந்தங்களின் பெறுமதி |
| 1.6.1.10.0 | ஏனையவை | ஐந்தொகையில் உள்வாங்கப்படாத ஏனைய நிச்சயமற்ற பொறுப்புக்கள் |
| **1.6.2.0.0** | **அர்ப்பணிப்புகள் மற்றும் எதிர்பதிவு கணக்குகள்** | உபமொத்தம் 1.6.2.1. மற்றும் 1.6.2.0 ஆகியவற்றின் |
| 1.6.2.1.0 | அர்ப்பணிப்பு | வங்கியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பற்று மேற்கொள்ளப்படாத கடன் எல்லைகள் மீதான அர்ப்பணிப்பு மற்றும் ஏனைய ஐந்தொகையில் உள்வாங்கப்படாத அர்ப்பணிப்புகள் |
| 1.6.2.1.0 | எதிர்பதிவு கணக்குகள் | கோர்புகளுக்காக அனுப்பப்பட்ட ஆவணங்கள்/ காசோலைகள், கையிருப்பில் உள்ள பயணிகள் காசோலை மற்றும் ஏனைய ஐந்தொகையில் உள்வாங்கப்படாத எதிர்பதிவு கணக்குகள் உள்ளடங்கலாக அனைத்து எதிர்ப்பதிவு கணக்குகள் |
| 1.7.0.0.0 | விஞ்ஞாபனக் குறிப்புகள் | |
| 1.7.1.0.0 | ஊழியர்களின் எண்ணிக்கை | ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை (நிரந்தர, பகுதிநேர) |
| 1.7.2.0.0 | கிளைகளின் எண்ணிக்கை | வங்கியால் நடைமுறைப்படுத்தப்படும் கிளைகளின் மொத்த எண்ணிக்கை |
| **1. வருமானக்கூற்று– தொகை ஆயிரம் ரூபாய்களில்** | | |
| **2.1.0.0.0** | **வட்டி வருமானங்கள்** | 2.1.1.0.0–2.1.2.0.0 வரையான சொத்துக்களின் உபமொத்தம் |
| 2.1.1.0.0 | கடனும் முற்பணங்களும் | பல்வேறுபட்ட கடன் வசதிகளுக்காக வாடிக்கையாளரிடமிருந்து பெற்ற வட்டி வருமானம் அல்லது அட்டுறு வட்டி வருமானம் |
| 2.1.2.0.0 | ஏனைய வட்டி உழைக்கும் சொத்துக்களிலிருந்து பெறப்பட்ட வட்டி வருமானம் | கடன் தவிர்ந்த ஏனைய வட்டி சம்பந்தப்பட்ட சொத்துக்களிலிருந்து பெற்ற வட்டி வருமானம் அல்லது அட்டுறு வட்டி வருமானம் |
| **2.2.0.0.0** | **வட்டிச் செலவுகள்** | பொறுப்புக்களின் உபமொத்தம் 2.2.1.0 மற்றும் 2.2.2.0.0 வரையான |
| 2.2.1.0.0 | வைப்புக்கள் | வைப்புக்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் அல்லது அட்டுறு கொடுப்பனவுகள் |
| 2.2.2.0.0 | ஏனைய வட்டிக் கொடுப்பனவு சொத்துக்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் | வைப்புக்கள் தவிர்ந்த ஏனைய வட்டிக் கொடுப்பனவு சொத்துக்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் அல்லது அட்டுறு கொடுப்பனவுகள் |
| **2.3.0.0.0** | **நிகர வட்டி வருமானம்** | வட்டி வருமானம், வட்டி கொடுப்பனவுகளின் நிகரப் பெறுமானம் (2.1.0.0.0 மற்றும் வட்டிச் செலவு (2.2.0.0.0) |
| **2.4.0.0.0** | **வட்டி தவிர்ந்த ஏனைய வருமானங்கள்** | 2.4.1.0.0 மற்றும் 2.4.2.0.0 ஆகியவற்றின் உபமொத்தம் |
| **2.4.1.1.0** | **அந்நியச் செலாவணி வருமானம்** | கீழ் 2.4..1.6.0–2.4.1.4.0 காணப்படும் வருமான வகைகளின் உபமொத்தம் |
| 2.4.1.1.0 | அந்நியச் செலாவணி மாற்றீடுகளின் மூலம் பெறப்பட்ட நிகர இலாபம்/ (நட்டம்) | SWAPS, FRA, முன்கூட்டிய ஒப்பந்தம் போன்றவற்றில் பிரயோகித்த வட்டி வீதம் அல்ல அந்நிய செலாவணி வீதம் என்பனவற்றின் மூலம் பெறப்பட்ட நிகர இலாபம்/ (நட்டம்) |
| 2.4.1.2.0 | அந்நியச் செலாவணி மாற்றீடுகளின் மூலம் பெறப்பட்ட தரகு அல்லது கட்டணம் | அந்நிய செலாவணி மாற்றீடுகளுக்காக பெறப்பட்ட தரகு வருமானம் அல்லது கட்டணம் |
| 2.4.1.3.0 | அந்நியச் செலாவணி மீளமதிப்பு மூலம் பெறப்பட்ட நிகர இலாபம்/(நட்டம்) | அந்நிய செலாவணியில் பதியப்பட்ட சொத்துக்கள் பொறுப்புக்களின் மீள்மதிப்பினூடாக பெறப்பட்ட செலாவணி இலாபம்/ நட்டம். |
| 2.4.1.4.0 | ஏனையவை | மேல்கூறப்படாத அந்நியச் செலாவணி வருமானங்கள் |
| 2.4.2.0.0 | ஏனைய வருமானங்கள் | 2.4.2.1.0 - 2.4.2.9.0 ஆகியவற்றின் உப மொத்தம் |
| 2.4.2.1.0 | முதலீடுகள் மீதான பங்கு இலாப வருமானம் | பங்கு மூலதன முதலீடுகளின் மூலம் பெறப்பட்ட அல்லது பெறவேண்டிய பங்கு இலாப வருமானம் |
| 2.4.2.2.0 | காப்பு ஆவணங்கள் மீதான முதலீட்டு/ வியாபார இலாபம் | வியாபார/ முதலீட்டு காப்பு ஆவணங்களை கொள்விலையிலும் கூடுதலாக விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானம். |
| 2.4.2.3.0 | திறைசேரி உண்டியல் மீதான மூலதன இலாபம் | கழிவு விலையில் திறைசேரி உண்டியல் கொள்வனவு செய்வதன் மூலம் கிடைக்கப்பெறும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருமானம் |

| தொடர் குறியீடு | தொடர் விடயம் | அறிவுறுத்தல்கள் |
|---|---|---|
| 2.4.2.4.0 | ரூபாய் மாற்றீடுகளின்மூலம் பெறப்பட்ட நிகர வருமானம் / நட்டம் | நிலையான சொத்து விற்பனை மூலம் பெறப்பட்ட இலாபம் |
| 2.4.2.5.0 | ஐந்தொகையில் உள்ளடங்காத கடன் | கடன் பத்திரம், உத்தரவாதப் பத்திரம், கப்பல் உத்தரவாதம், ஏற்றுமதி கடன் பத்திர ஆலோசனைகள் மற்றும் ஏனைய ஐந்தொகையில் உள்வாங்கப்படாத கடன் வசதிகள் என்பவற்றை வழங்குவதன் மூலம் பெற்ற அல்ல பெறவேண்டிய தரகு. |
| 2.4.2.6.0 | வசதிகளுக்கான தரகு ஏனைய தரகுகளும் கட்டணங்களும் | மூன்றாம் தரப்பினர் சார்பாக, வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய சேவைகளுக்காகவும், பல்வேறுபட்ட வசதிகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கியதற்காகவும் அறவிடப்பட்ட தரகு வருமானம் |
| 2.4.2.7.0 | சேவைகள் மீதான அறவீடு | வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் மீதான அளவீடு மூலம் உழைத்த வருமானம் |
| 2.4.2.8.0 | நிலையான ஆதனங்கள் விற்பனை மூலம் பெறப்பட்ட இலாபம் | நிலையான ஆதனங்களை விற்பனை செய்வதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட இலாபம் |
| 2.4.2.9.0 | ஏனையவை | மேற்கூறப்பட்டவற்றில் உள்ளடங்காத ஏனைய வருமானங்கள் |
| 2.5.0.0.0 | வட்டி தவிர்ந்த செலவினங்கள் | உப மொத்தம் 2.3.1.0.0-2.3.6.0.0 வரையான |
| 2.5.1.0.0 | ஆளணி கிரயம் | பின்வரும் செலவுகளை உள்ளக்கும் சம்பளம், மீள்கொடுப்பனவுகள், ஊ.சே.நி/ ஊ.ந.நி. பங்களிப்பு, (பயிற்சி நெறி செலவுகள் தவிர்த்து) |
| 2.5.2.0.0 | ஊழியர் இளைப்பாற்று கொடுப்பனவு ஒதுக்கம் | ஊழியர் இளைப்பாறும்போது கொடுக்கவேண்டிய கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கம் |
| 2.5.3.0.0 | கட்டிடங்கள், உபகரணங்கள் மற்றும் நிர்வாக செலவினங்கள் | அனைத்து வகையான நிலைய நிர்வாக, உபகரணங்கள் மீதான நிர்வாக செலவுகள் |
| 2.5.4.0.0 | காப்பு ஆவணங்கள் மீதான முதலீட்டு/ வியாபார நட்டம் | வியாபார/முதலீட்டு ஆவணங்களை கொள்விலையிலும் குறைந்த விலையில் விற்பனை செய்வதன் மூலம் ஏற்பட்ட நட்டம் |
| 2.5.5.0 | விற்பனை சொத்துக்களை பகிர்ந்தளித்தல் | பகிர்ந்தளிக்கப்பட்ட விற்பனை சொத்துக்களின் மொத்தம் பெறுமதியை காட்டுக (நன்மதிப்பு/ மறை நன்மதிப்பு) |
| 2.5.6.0.0 | ஏனைய நடைமுறைச் செலவுகள் | வேறு நடைமுறைச் செலவுகள் |
| **2.6.0.0.0** | **ஐயக்கடன் மற்றும் அறவிடமுடியாக் கடன் ஏற்பாட்டு ஒதுக்கங்களும் கடன் விலக்கழிப்புக்களும்** | உப மொத்தம் 2.6.1.0.0-2.2.4.0.0 வரையான |
| 2.6.1.0.0 | பொது ஒதுக்கம் | கடன்களின் செயற்பாடு தரங்களை கருத்திற்கொள்ளாது, எதிர்கால கடன் இழப்புக்களை நிவர்த்தி செய்வதற்காக இலாபத்திலிருந்து மேற்கொள்ளப்படும் ஒதுக்கங்கள் |
| 2.6.2.0.0 | சிறப்பு ஒதுக்கம் | கடன்களின் செயற்பாட்டு தரங்களை கருத்திற்கொள்ளாது, எதிர்கால கடன் இழப்புக்களை மாத்திரம் நிவர்த்தி செய்வதற்காக இலாபத்திலிருந்து மேற்கொள்ளப்படும் ஒதுக்கங்கள். |
| 2.6.3.0.0 | (-) மீள்பெறுகைகள் | ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட அல்லது விலைக்கழிக்கப்பட்ட கடன்களிலிருந்து பெற்ற மீள்பெறுகைகள் |
| 2.6.4.0.0 | கடன் விலக்கழிப்பு | அறிக்கை காலப்பகுதிக்குள் கடன் கட்டமைப்பிலிருந்து விலக்கழிக்கப்பட்ட அனைத்து கடன்களின் மொத்தம் |
| **2.7.0.0.0** | **முதலீடுகளின் மதிப்பிறக்கத்தை ஈடு செய்வதற்கான ஒதுக்கங்கள் (நிகரப் பெறுமதி)** | முதலீடுகளின் எதிர்கால சந்தைப் பெறுமதி மதிப்பிறக்கத்தை ஈடுசெய்வதற்கான ஒதுக்கம் |
| **2.8.0.0.0** | **சாதாரண நடவடிக்கைகளினூடாக பெறப்பட்ட, வரிக்கு முன்னதான நடைமுறை இலாபம்** | நிகர வட்டி வருமானம் (2.3.0.0.0) - வட்டி தவிர்ந்த செலவுகள் (2.5.0.0.0) - கடன் இழப்பு ஒதுக்கங்கள் (2.6.0.0) - முதலீடுகளின் மதிப்பிறக்கம் மீதான ஒதுக்குகள் (நிகர பெறுமதி) (2.7.0.0.0) ஆகியவற்றின் உப மொத்தம் |
| **2.9.0.0.0** | **நிதிச் சேவைகள் மீதான பெறுமதி கூட்டப்பட்ட வரி** | இலாபம் மற்றும் ஏனையவற்றின் மீதான பெறுமதி கூட்டப்பட்ட வரி |
| **2.10.0.0.0** | **வரிக்கு முன்னர் சாதாரண நடவடிக்கை களின் மீதான செயற்பாட்டு** | வரிக்கு முன்னர் சாதாரண நடவடிக்கைகளின் மீதான செயற்பாட்டு இலாபம் (2.8.0.0.0) - நிதியியல் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி (2.9.0.0.0) |

| தொடர் குறியீடு | தொடர் விடயம் | அறிவுறுத்தல்கள் |
|---|---|---|
| **2.11.0.0.0** | **துணை/ சார்புக் கம்பனிகளின் இலாபப்பங்கு** | துணை/ சார்புக் கம்பனிகளின் மொத்த இலாபப்பங்கு |
| **2.12.0.0.0** | **கம்பனி வரிக்கு முன்னரான செயற்பாட்டு** | விடயம் 2.10.0.0.0 மற்றும் 2.11.0.0.0 இனது உபமொத்தம் |
| **2.13.0.0.0** | **சாதாரண நடவடிக்கையின் இலாபம் மீதான வரி** | வரி விதிக்கத்தக்க இலாபங்கள் மீதான செலுத்த வேண்டிய வரிகள் |
| **2.14.0.0.0** | **காலப்பகுதிக்கான தொழிற்பாட்டு இலாபம்** | கம்பனி வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் (2.12.0.0.0) - சாதாரண நடவடிக்கை இலாபங்கள் மீதான வரி (2.13.0.0.0) |
| **3. பங்கு மற்றும் ஒதுக்கங்களிலான மாற்றங்களின் அறிக்கை - தொகை ஆயிரம் ரூபாய்களில்** | | |
| **3.1.0.0.0** | **ஆரம்ப மீதி** | கடந்த நிதி ஆண்டின் இறுதிமீதி |
| 3.2.2.0.0 | பங்குகளின் வழங்கல்/ ஒதுக்கு மூலதனத்தின் அதிகரிப்பு | வழங்கப்பட்ட வாக்குரிமை உள்ள மற்றும் வாக்குரிமை அற்ற சாதாரண பங்குகள் முன்னுரிமைப் பங்குகள் மற்றும் முழுமையாக/ பகுதியாகச் செலுத்தப்பட்ட/ பகுதியாக செலுத்தப்பட்ட அல்லது குறித்த காலப்பகுதியில் தலைமைக் காரியாலயத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கு மூலதனத்தின் அதிகரிப்பு. |
| 3.2.3.0.0 | வழங்கல் | காலப்பகுதிக்கான உபகார வழங்கல் |
| 3.2.4.0.0 | உரிமை வழங்கல் | காலப்பகுதிக்கான உரிமை வழங்கல் |
| 3.2.5.0.0 | சொத்துக்களின் மீள்மதிப்பீடுகள் மீதான மிகை | குறித்த காலப்பகுதியில், நிலையான சொத்துக்களின் மீது கிரயத்திலும் மேலதிகமான மீள்பெறுமான அங்கீகரிப்பு. |
| 3.2.6.0.0 | காலப்பகுதிக்கான தேறிய இலாபம்/ நட்டம் | அறிக்கையிடும் காலப்பகுதிக்கான இலாபம் அல்லது நட்டம் |
| 3.2.7.0.0 | குறித்த காலப்பகுதியில் ஒதுக்கங்களுக்கான மாற்றங்கள் | குறித்த காலப்பகுதியில் தொடர்புடைய ஒதுக்கு கணக்குகளுக்கு மேற்கொள்ளப்பட்ட நியதிச்சட்ட மற்றும் ஏனைய மாற்றங்கள் |
| 3.2.8.0.0 | ஆண்டிற்காக செலுத்தப்பட்ட பங்குலாபம் | பங்குதாரர்களுக்கிடையிலான வரிக்கு பின்னரான விடயங்களின் பகிர்ந்தளிப்பு |
| 3.2.9.0.0 | தலைமை அலுவல ஏனையவை | உரிமையாண்மை மற்றும் ஒதுக்கங்களின் நேரடியாக தாக்கம் செலுத்துகின்ற ஏனைய விடயங்களின் வெளிப்படுத்துதல். வெவ்வேறாக குறிப்பிடுக. |
| 3.1.0.0.0 | இறுதி மீதி | அறிக்கையிடும் காலப்பகுதிக்கான இறுதி மீதி. |
| **4. தெரிவு செய்யப்பட்ட செயற்றிறன் குறிகாட்டிகள்** | | |
| **4.1.0.0.0** | **ஒழுங்கமைக்கப்பட்ட மூலதனப் போதுமை** | |
| 4.1.1.0.0 | மைய மூலதனம் (அடுக்கு -1) | மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகளுக்கிணங்க கணிக்கப்பட்ட மைய மூலதனத்தின் கூட்டு மொத்தத்தை குறிப்பிடுக (வங்கி மாத்திரம் என்ற அடிப்படையிலும் தொகைகளை குறிப்பிடுக) |
| 4.1.2.0.0 | மொத்த மூலதனத் தளம் | மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகளுக்கிணங்க கணிக்கப்பட்ட மொத்த மூலதனத் தாக்கத்தின் கூட்டு மொத்தத்தை குறிப்பிடுக.<br>(வங்கி மாத்திரம் என்ற அடிப்படையிலும் மற்றும் குழு அடிப்படையில் தொகைகளைக் குறிப்பிடுக) |
| 4.1.3.0.0 | மைய மூலதன விகிதம் (படி-1) % | அடுக்கு மூலதனம்<br>இடர்நேர் நிறையளிக்கப்பட்ட சொத்துக்கள் 100*<br>மூலதனப்போதுமை வழிகாட்டலுக்கிணங்க கணிக்கப்பட்டது.<br>(வங்கி மாத்திரம் என்ற அடிப்படையிலும் மற்றும் குழு அடிப்படையில் தொகைகளைக் குறிப்பிடுக ) |
| 4.1.4.0.0 | மொத்த மூலதனப் போதுமை விகிதம் | அடுக்கு மூலதனம்<br>இடர்நேர் நிறையளிக்கப்பட்ட சொத்துக்கள் 100*<br>மூலதனப் போதுமை வழிகாட்டலுக்கிணங்க கணிக்கப்பட்டது<br>(தனி மற்றும் குழு அடிப்படையில் தொகைகளைக் குறிப்பிடுக வங்கி மாத்திரம் என்ற அடிப்படையிலும்) |
| 4.2.0.0.0 | **சொத்துக்களின் தரம் (கடன் சொத்துப் பட்டியலின் தரம்)** | |

| தொடர் குறியீடு | தொடர் விடயம் | அறிவுறுத்தல்கள் |
|---|---|---|
| 4.2.1.0.0 | தொழிற்படா மொத்த முற்பண விகிதம் % | (மொத்த தொழிற்படா கடன்கள் மற்றும் முற்பணங்கள்-மொத்த நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி)<br>(மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள்-மொத்த நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி) (வங்கி மட்டும்) |
| 4.3.2.0.0 | தேறிய தொழிற்படா முற்பணங்களின் விகிதம் % | மொத்த தொழிற்படா கடன்கள் மற்றும் முற்பணங்கள்-மொத்த நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி- மொத்த ஏற்பாடுகள்<br>(மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள்-மொத்த நிறுத்தி வைக்கப்பட்ட வட்டி) (வங்கி மட்டும்) |
| **4.3.0.0.0** | **இலாபத் தன்மை** | |
| 4.3.1.0.0 | வட்டி எல்லை% | தேறிய வட்டி வருமானம் (ஆண்டு பெறுமானமிடப்பட்டது)<br>மொத்த சொத்துக்களின் சராசரி பெறுமதி 100<br>தேறிய வட்டி வருமானம்=வட்டி வருமானம் - வட்டிச் செலவினம் (ஆண்டு பெறுமானமிடப்பட்டது)<br>மொத்த சொத்துக்களின் சராசரிப் பெறுமதி அறிக்கையிடும் திகதிக்கான மாதாந்தரச் சராசரி<br>(வங்கி மட்டும்) |
| 4.3.2.0.0 | சொத்துக்கள் மீதான இலாபம் (வரிக்கு முன்னர்) | வரிக்குப் பின்னர் இலாபம் (ஆண்டுப் பெறுமானமிடப்பட்டது)<br>மொத்த சொத்துக்களின் சராசரிப் பெறுமதி 100<br>சாதாரண நடவடிக்கை மீதான வரிக்குப்பின் தேறிய செயற்பாட்டு இலாபம் (ஆண்டு பெறுமானமிடப்பட்டது)<br>மொத்தச் சொத்துக்களின் சராசரிப் பெறுமதி அறிக்கையிடும் திகதிக்கான மாதாந்தச் சராசரி. |
| 4.3.3.0.0 | பங்கின் மீதான இலாபம் | வரிக்குப் பின்னர் இலாபம் (ஆண்டுப் பெறுமானமிடப்பட்டது)<br>மூலதன நிதியத்தின் சராசரிப் பெறுமதி 100<br>சாதாரண நடவடிக்கை மீதான வரிக்குப் பின் தேறிய இலாபம்<br>மூலதன நிதியத்தின் சராசரிப் பெறுமதி அறிக்கையிடும் திகதி மீதான மாதாந்தச் சராசரி. |
| **4.4.0.0.0** | **ஒழுங்கமைக்கப்பட்ட திரவத்தன்மை** | |
| 4.4.1.0.0 | நியதிச்சட்ட ரீதியான திரவச் சொத்துக்கள் | நியதிச்சட்ட ரீதியான நிதிச் சொத்துத் தேவைக்கமைய கணிப்பிடப்பட்ட சராசரி திரவச் சொத்துக்களின் திரட்டிய தொகையை குறிப்பிடுக.<br>(உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்காக நியதிச்சட்ட ரீதியான தேவைக்கமைய கணிக்கப்பட்ட தொகைகளை உள்நாட்டு வங்கியியல் அலகு மற்றும் வெளிநாட்டு நாணய வங்கியியல் அலகு அடிப்படையில் குறிப்பிடுக) |
| 4.4.2.0.0 | நியதிச் சட்ட ரீதியான திரவச்சொத்து விகிதம் % | உத்தரவாதமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்காக:-<br>சராசரி திரவச்சொத்துக்கள்<br>பொறுப்புக்களின் தளம்<br>நியதி சட்டரீதியான சேவைக்கமைய கணிக்கப்பட்ட தொகைகளை உள்நாட்டு வங்கியியல் அலகு மற்றும் வெளிநாட்டு நாணய வங்கியின் அலகு அடிப்படையில் குறிப்பிடுக.<br>உத்தரவாதமளிக்கப்பட்ட சிறப்பியல்பு வங்கிகளுக்காக<br>சராசரி திரவச்சொத்துக்கள்<br>மொத்த வைப்புக்கள் 100<br>நியதிச் சட்ட ரீதியான திரவச்சொத்து தேவைகளுக்கமைவானது |

*வங்கி மேற்பார்வைத் திணைக்களம்*
*2005 ஒத்தோபர் 10*

*அனைத்து உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்*

*(தேசிய சேமிப்பு வங்கி தவிர)*

*அன்புள்ள ஐயா*

**தனியொரு கடன்பாட்டாளர் வரையறை தொடர்பான திருத்தப்பட்ட பணிப்புரை**

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களினது 2005 யூலை 28 ஆம் நாளன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, தனியொரு கடன்பாட்டாளர் வரையறை மீதான 2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பணிப்புரையானது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இது தொடர்பாக வழங்கப்பட்ட புதிய பணிப்புரையுடன் இசையும் விதத்தில் திருத்தப்பட்டிருக்கிறது.

வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 76(ஜே)(1) இன் கீழ் விடுக்கப்பட்ட திருத்தப்பட்ட 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பணிப்புரை இணைக்கப்பட்டுள்ளமையைத் தயவுசெய்து கவனிக்கவும்.

இது கிடைத்தமை பற்றி தயைகூர்ந்து அறியத்தரவும்.

## 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினாலும் 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம்

*2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினாலும் 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76(ஜே) 1 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை*

**ஒப்பம் சுனில் மென்டிஸ்**

ஆளுநர்

கொழும்பு

*2005 ஒத்தோபர் 10*

## 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) பணிப்புரை

1. *2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) பணிப்புரை பின்வருமாறு திருத்தப்படுகிறது.*

2. சொல்லப்பட்ட பணிப்புரையின் 2 ஆம் பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தி இடப்படுகிறது.

வங்கித்தொழில் சட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு பங்கு மூலதனத்தினைக் கொண்டுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்று, முன்னைய அதன் நிதியாண்டின் இறுதியில் காணப்பட்டவாறு அத்தகைய வங்கியின் மூலதன நிதியத்தில் முப்பது சதவீதத்தினை (30%) விஞ்சுகின்ற அளவில் கடன் வசதிகளை வழங்கக்கூடாது.

2.1 தனிக்கம்பனி, அரச கூட்டுத்தாபனம், நிறுவனம் ஆட்களைக் கொண்ட சங்கம் அல்லது தனிப்பட்டோர் ஆகிய எந்த ஒன்றிற்கும்

2.2 கூட்டு மொத்தத்தில்

2.2.2 கம்பனியொன்று அத்துடன் பின்வருவனவற்றில் ஒன்று அல்லது கூடுதலானவை

2.2.2.1 அதன் துணைக் கம்பனிகள்

2.2.2.2 அதன் உடமைக் கம்பனிகள்

2.2.2.3 அதன் இணைக்கம்பனிகள்

2.2.2.4 அதன் உடமைக் கம்பனிகளின் துணைக்கம்பனி அல்லது

2.2.2.5 அத்தகைய கம்பனி அல்லது அதன் துணைக்கம்பனி, அல்லது அதன் உடமைக் கம்பனி அல்லது அதன் உடமைக் கம்பனியின் துணைக் கம்பனி கணிசமான கணக்கைக் கொண்டிருக்கும் கம்பனி ஒன்று

3. சொல்லப்பட்ட பணிப்புரைகளில் 4 ஆவது பந்தி நீக்கப்பட்டு பின்வரும் பந்தி உட்புகுத்தப்படுகிறது.

"4. பந்திகள் 2 மற்றும் 3 இன் நோக்கங்களுக்காக, கடன் வசதிகள், மூலதன நிதியத்தில் 30 சதவீதத்தையோ அல்லது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றின் மூலதன நிதியத்தில 15% இனையா விஞ்சுகின்றது என்பதனை நிர்ணயிப்பதில் தற்போதுள்ள வசதிகளின் வரையறை அல்லது அனைத்து கடன் வசதிகளினதும் வெளிநிற்கும் தொகை அதில் எது கூடுதலானதோ அதனைக் கணக்கில் கொள்ள வேண்டும்.

பந்தி 3 இன் நோக்கங்களுக்காக, முன்னைய நிதியியல் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றின் மொத்தக்கடன் வசதி என்பது முன்னைய நிதியியல் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான அனைத்து கடன் வசதிகளினதும் வெளிநின்ற தொகை எனக் கருதப்படும்."

4. மேற்குறிப்பிட்ட பணிப்புரையின் பந்தி 5 நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விடயம் உட்புகுத்தப்படுகிறது.

5.(1) பந்தி 2.1 அல்லது பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட வகைகளுக்குரிய வாடிக்கையாளர்களுக்கு பின்வரும் விடயங்களைப் பிணையாகக் கொண்டு வழங்கப்பட்ட கடன் வசதிகள் தனியொரு கடன்பாட்டாளர் வரையறைகளைக் கணிப்பதிலிருந்தும் நீக்கப்பட்டன.

(அ) காசு

(ஆ) அரச/ மத்திய வங்கிப் பிணையங்கள்

(இ) திறைசேரி/ மத்திய வங்கி உத்தரவாதங்கள்

(ஈ) ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் உலக வங்கியினால் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள்

(உ) கீழேயுள்ள துணைப்பந்தி 2 இல் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைக்குட்பட்டு, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கியொன்றினால் அல்லது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் அல்லது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றினால் வழங்கப்பட்டு வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் ஏற்றுக்கொள்ளக் கூடியது எனத் தீர்மானிக்கப்பட்ட உத்தரவாதம் அல்லது அதனையொத்த சாதனத்தை பிணையாகக் கொண்டு வழங்கப்பட்ட கடன் வசதிகள்

5(2) மேலேயுள்ள துணைப்பந்தி (உ) இன் கீழ் பட்டியலிடப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட உத்தரவாதம் அல்லது அதனையொத்த சாதனமொன்றினை பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஏற்றுக்கொள்ளலாம்.

(உ) இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் தரமிடல் முகவரொன்றினால் A- அல்லது அதற்கு மேற்பட்ட (அல்லது அதற்குச் சமமான) கொடுகடன் தரமிடலுடன் கூடிய உயர்ந்த தரமிடப்பட்ட நிறுவனமாக இருத்தல்

(ஊ) தனியொரு கடன்பாட்டாளர் வரையறையிலிருந்தும் நீக்கப்படக்கூடிய கடன்வசதியின் பெறுமதியினது சதவீதம் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| கொடுகடன் தரமிடல் | விலக்களிக்கப்பட்ட முதல் பெறுமதியின் % |
|---|---|
| AAA இலிருந்து AA - (அல்லது அதற்குச் சமமானது) | 80% |
| A+ இலிருந்து A- (அல்லது சமமானது) | 50% |

(எ) மேற்குறிப்பிட்டவற்றின் அடிப்படையில் நீக்கப்பட்ட அனைத்துக் கடன்வசதிகளினதும் மொத்தம் வங்கியின் மூலதன நிதியத்தில் 100 சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

(ஏ) குறிப்பிட்ட வங்கியானது உத்தரவாதத்தினை வழங்குகின்ற வங்கிக்கு கொடுக்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதம் தற்போதுள்ளது என்பதனையிட்டும் மீளாய்வு செய்யப்படுவதற்கு உட்படவில்லை என்பதனையிட்டும் திருத்தப்பட்டுக் கொள்ள வேண்டியதுடன், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் எவ்வித மாற்றத்தையும் உடனடியாகக் கவனிக்குமிடத்து வழங்கப்பட்ட கடன்வசதி முன்னரிருந்த கடன் மீளாய்விற்கேற்ப திருத்தம் செய்யப்படவும் வேண்டும்.

5. மேற்குறிப்பிடப்பட்ட பணிப்புரையின் பந்தி 6.4 நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தி உட்புகுத்தப்படுகிறது.

"iv. உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டத்தில் நேரடியில் பயன்படுத்துவதற்காக வாடிக்ககையாளருக்கு/ வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ள கடன்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

5.1 உட்கட்டமைப்பு செயற்றிட்டம் இங்கே இணைப்பு 1 இல் விபரிக்கப்பட்டவாறான செயற்றிட்டமாக இருத்தல் வேண்டும்.

5.2 வாடிக்கையாளர்/ வாடிக்கையாளர்கள் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டத்தில் நேரடியாக ஈடுபடுவதற்கான ஒப்பந்தத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

5.3 அத்தகைய செயற்றிட்டமொன்றிற்கான நிதியிடலில் குறைந்தது 50 சதவீதம் வரையில் இலங்கைக்கு வெளியேயான மூலங்களினால் அல்லது கடன்வசதியை வழங்குகின்ற வங்கி நீங்கலாக உரிமம் பெற்ற வங்கிகள் அத்துடன்/ அல்லது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வர்த்தக வங்கிகளின் கூட்டமைப்பு ஒன்றினால் நிதியிடப்பட வேண்டும்; அத்துடன்

5.4 அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் கடன்வசதிகளை வழங்குவதற்கு முன்னர் மேலே (அ)(ஆ) மற்றும் (இ) இல் குறித்துரைக்கப்பட்ட நிலைமைகளையிட்டு தாம் திருப்தி கொள்வதாக இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வைப் பணிப்பாளருக்கு உறுதிப்படுத்தல் வேண்டும்.

5.4 இத்துணைப் பந்தியின் நியதிகளுக்கிணங்க" இவ்வுட்கட்டமைப்பு செயற்றிட்டத்திற்கான கடன்வழங்கல் முன்னைய நிதியாண்டின் இறுதியிலுள்ளவாறான வங்கியின் மூலதன நிதியத்தில் ஐம்பது சதவீதத்தினை (50%) விஞ்சக்கூடாது."

6. இப்பணிப்புரைகள் உடனடியாக நடைமுறைக்கு வரும்.

இணைப்பு 1

## தனியொரு கடன்பாட்டாளர் வரையறை மீதான பணிப்புரையின் பந்தி 6.4 இன் கீழ் விதிவிலக்கிற்கான தகைமையைப் பெறக்கூடிய உட்கட்டமைப்பு கடன்வழங்கலின் வரைவிலக்கணம்

கீழே குறித்துரைக்கப்பட்டவாறு உட்கட்டமைப்பு வசதிகளுக்காக வங்கிகளினால் வழங்கப்பட்டுள்ள கடன் வசதிகள் பணிப்புரையின் பிரிவு 7 (iv) இன் கீழ் தனியொரு கடன்பாட்டாளர் வரையறையிலிருந்தும் விலக்குப் பெறுவதற்கு தகைமையுடையனவாக இருக்கும். பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கம்பனிக்கு கொடுகடன் வசதி வழங்கப்படுகிறது.

- அபிவிருத்தி; அல்லது
- தொழிற்படுத்தல் மற்றும் பேணுதல்; அல்லது
- பின்வரும் துறைகளில் ஏதாவதொன்றிலுள்ள செயற்றிட்டமான ஏதாவது உட்கட்டமைப்பு வசதியினை அல்லது இதே தன்மைகளைக் கொண்ட ஏதாவதொரு உட்கட்டமைப்பு வசதியினை அபிவிருத்தி செய்தல். தொழிற்படுத்தல், தரமுயர்த்தல் மற்றும் பேணுதல்.

(i) சுங்க வீதிகள் உட்பட்ட வீதி, பாலம் அல்லது புகைவண்டி அமைப்பு

(ii) நெடுஞ்சாலை செயற்றிட்டத்தின் முக்கிய பகுதியாக விளங்கும் ஏனைய நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு நெடுஞ்சாலைச் செயற்றிட்டம்

(iii) துறைமுகம், வானூர்தி உள்நாட்டு நீர்வழி அல்லது உள்ளூர் துறைமுகம்

(iv) நீர்வழங்கல் செயற்றிட்டம், நீர்ப்பாசனச் செயற்றிட்டம் நீர் சுத்திகரிப்பு முறை, சுகாதாரம் மற்றும் வடிகாலமைப்பு அல்லது திண்ம கழிவு முகாமைத்துவ அமைப்பு

(v) வானொலி பேஜிங். தூரஇடங்களுக்கான வலையமைப்பு, அகன்ற வழிகளைக் கொண்ட வலையமைப்பு மற்றும் இணையத்தள வசதிகள் உள்ளிட்ட அடிப்படை அல்லது செலூலர் எதனையும் கொண்ட தொலைத் தொடர்பூட்டல் பணிகள்.

(vi) கைத்தொழில் பூங்கா அல்லது சிறப்பு பொருளாதார வலயம்

(vii) வலு உருவாக்கம் அல்லது வலுஉருவாக்கமும் விநியோகமும்

(viii) புதிய மின்கடத்தலின் வலயமைப்பினை அல்லது விநியோக வழிகளை ஏற்படுத்துவதன் மூலமாக வலுவினைக் கொண்டு செல்லல். அல்லது விநியோகித்தல்

(ix) வேளாண்மை பொருட்களைப் பதனிடுவதுடன் தொடர்பான செயற்றிட்டங்களுடன் தொடர்பான கட்டுமானம் மற்றும் வேளாண்மைக்கான உள்ளீடுகளை வழங்குதல்

(x) கல்விசார் நிறுவனங்களையும் வைத்தியசாலைகளையும் நிருமாணித்தல்

(xi) இதே தன்மைகளைக் கொண்ட வேறு ஏதாவது வசதிகள்

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2005 ஒத்தோபர் 27

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற
சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் முதன்மை நிறைவேற்று
அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா

## தனியொரு கடன்பாட்டாளர் வரையறை

2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க தனியொரு கடன்பாட்டாளர் வரையறைக்கான பணிப்புரை (உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கானவை) மற்றும் 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க தனியொரு கடன்பாட்டாளர் வரையறைக்கான பணிப்புரை (உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கானவை ) என்பன உத்தரவாதத்தினை வழங்கிய வங்கிகளினது கொடுகடன் தரமிடலை அடிப்படையாகக் கொண்டு உயர்தர தரமிடலைக் கொண்ட வங்கிகள் அல்லது இலங்கையில் தொழிற்படுகின்ற வெளிநாட்டு வங்கிகளின் தலைமை அலுவலகத்திலிருந்தான உத்தரவாதங்களுக்கெதிராக தனியொரு கடன்பாட்டாளர் எல்லையை விஞ்சுவதற்கு வங்கிகள் அனுமதிக்கப்பட்டன.

மத்திய வங்கியில் 2005 ஒத்தோபர் 20 ஆம் நாளன்று நடத்தப்பட்ட முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, வங்கி உத்தரவாதம்/ பொறுப்பேற்பு மீதான வரையறையை நடைமுறைப் படுத்துவதனை, வங்கிகளின் பிரதிநிதிகள் தாம் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகள் பற்றி தெரிவித்ததனைத் தொடர்ந்து 2007.01.01 வரை பிற்போடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி, 2007.01.01 வரை வங்கி உத்தரவாதம் அல்லது தலைமை அலுவலகத்திலிருந்தான உத்தர வாதம்/ பொறுப்பேற்பு நட்டோத்தரவாதம் என்பனவற்றிற்கு எதிராக அத்தகைய உத்தரவாதங்களின் முழுப்பெறுமதி வரைக்கும் தனியொரு கடன்பாட்டாளர் வரையறையை விஞ்சுவதற்கு உடனடியாக வங்கிகள் அனுமதிக்கப்பட்டன.

உங்கள் உண்மையுள்ள

ஒப். **பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்

2005 ஏப்பிறல் 28

சுற்றறிக்கை எண் 35/01/005/0006/09

*உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்*

## லங்காசெட்டிலுள்ள பத்திரங்களற்ற அரச பிணையங்களுக்கெதிராக ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதி ஏற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

மேற்குறிப்பிட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை அறிவிக்கின்ற 2004 சனவரி 27 ஆம் திகதியிடப்பட்ட எண் 35/01/005/0006/05 கொண்ட எனது சுற்றறிக்கை தொடர்பானது.

வியாபார நாளின் போது மூன்று குறித்துரைக்கப்பட்ட நேரங்களில், ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதிகள் தொடர்பான மேலதிக எடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் சொல்லப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் ஏற்பாடு கொண்டிருந்தபோதும் கூட, பங்கேற்கும் நிறுவனங்களின் கோரிக்கைகளின் பேரில், பங்கேற்கும் நிறுவனங்களின் **எந்த ஒரு அவசர ஒரு நாளுக்குள்ளேயான திரவத்தேவைப்பாடுகளையும்** ஈடுசெய்வதற்காக குறித்துரைக்கப்பட்ட நேரங்களுக்கிடையிலும் கூட ஒவ்வொரு விடயமாக ஆராயப்பட்டு, ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதி வழங்கப்படும் என்பதனை பங்கேற்கும் நிறுவனங்களுக்கு இத்தால் அறியத்தருகிறோம்.

இதன்படி, முன்சொல்லப்பட்ட சுற்றறிக்கையின் கிளைவாசகம் 8 பின்வரும் பந்தியினை ஏற்கனவேயுள்ள கிளைவாசகம் 8 இனை உடனடுத்து உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.-

எனினும் இது அல்லது கிளைவாசகம் 10 எதனையாவது உள்ளடக்கியிருப்பினும் கூட மத்திய வங்கி அதன் தற்றுணிவிற்கு உட்பட்ட விதத்தில், பங்கேற்கும் நிறுவனங்களின் கோரிக்கைகளின்படி, பங்கேற்கும் நிறுவனங்களின் ஏதாவது அவசர ஒரு நாளுக்குள்ளேயான திரவத் தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்காக அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நேரங்களுக்கிடையிலும் கூட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளின் மேலதிக எடுப்பனவுகளுக்கு அனுமதியளிக்கக்கூடும்.

பணிப்பாளர்
உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்

தொடர்பு 06/04/01/2005

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
த.பெ.எண்.883
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 1
14.02.2005

***அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்குமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்***

*அன்புள்ள ஐயா,*

## அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

வெளிநாட்டு அரசாங்கங்கள் உட்பட வெளிநாட்டு ஆட்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து இலங்கையில் தொழிற்படுகின்ற அரசல்லா நிறுவனங்களினால் பெறப்படும் அனைத்து பணஅனுப்பல்களும் 15.02.2005 இலிருந்து பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு "சுனாமிக்குப் பின்னைய உள்வரும் பணவனுப்பல் கணக்கு" என்ற பெயரிலான சிறப்புக் கணக்கினூடாகவே வரவேண்டும் என அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. கணக்கானது இலங்கை ரூபாவில் மட்டுமே பேணப்பட வேண்டும்.
2. கணக்குகளைத் திறக்கும்போது அரசசார்பற்ற நிறுவனங்களின் நம்பகத் தன்மை பற்றியும் அரசல்லா நிறுவனங்களின் கணக்கிற்கான கையொப்பதாரர்களின் நம்பகத் தன்மை பற்றியும் உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள் வழிகாட்டல்கள் என்ற நியதிகளுக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் போதியளவு கூர்ந்த கவனத்தைச் செலுத்த வேண்டும்.
3. கணக்கிற்கான வரவுகள் வெளிநாட்டு ஆட்கள், நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்கள் போன்றவற்றிலிருந்து மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயங்களில் பெறப்பட்ட உள்வரும் பணஅனுப்பல்களிலிருந்து தேறல் செய்யப்பட்ட இலங்கை ரூபாப் பெறுகைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட் வேண்டியிருந்ததுடன் கணக்கிற்கு ஒன்றுசேர்ந்த வட்டியும் வழங்கப்பட வேண்டும்.
4. எந்த ஒரு உள்ளூர் பகிர்ந்தளிப்பு நோக்கத்திற்குமான பற்றுக்கள் கட்டுப்பாடெதுவுமின்றி அனுமதிக்கப்பட வேண்டும்.
5. அரசுசார்பற்ற நிறுவனமொன்று அதன் தொழிற்பாடுகளது அமைவிடம் மற்றும் செயற்றிட்ட தேவைப்பாடுகளைப் பொறுத்து வேறுபட்ட வங்கிகளிலும் வங்கியொன்றின் வேறுபட்ட கிளைகளிலும் ஒன்றிற்கு மேற்பட்ட கணக்குகளை வைத்திருப்பதற்கு விரும்புமாயின் ஒன்றிற்கு மேற்பட்ட கணக்குகளைத் திறப்பதற்கும் அதனைப் பேணுவதற்கும் எவ்வித கட்டுப்பாடும் இருக்கக்கூடாது.
6. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் திறக்கப்பட்ட அத்தகைய அனைத்து கணக்குகள் தொடர்பாக அக்கணக்கிற்கு செய்யப்பட்ட பற்றுக்கள் மற்றும் வரவுகளைக் காட்டும் மாதாந்த கூற்றுக்களை அடுத்துவரும் மாதத்தின் 7 ஆம் நாளுக்கு முன்னதாக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத் திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

படி. ஆ.செ
து.ஆ(இடபிள்யூ), து.ஆ(ஜே)
உ.ஆ(டி)
உ.ஆ(கே)
உ.ஆ(இடபிள்யூ)
உ.து.(எப்)
உ.ஆ(ஜே)
உ.ஆ(சி)
வ.மே.ப
ப.தொ.தி.ப.

தொடர்பு 06/04/02/2005

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
த.பெ.எண்.883
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 1
2005 ஏப்பிறல் 08

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

*அன்புள்ள ஐயா,*

**மறைமுக ஏற்றுமதியாளர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்**

ஏற்றுமதியாளர்களுக்கான மேலதிக ஊக்குவிப்புப்பொன்றாக மறைமுக ஏற்றுமதியாளர்கள் தமது வழங்கல்களுக்காக, வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு செய்யக்கூடிய நிலைமையிலுள்ள தமது நேரடி ஏற்றுமதியாளர்களிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு அனுமதிக்கும் விதத்தில் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குள்பட்டு "மறைமுக ஏற்றுமதியாளர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்" என்ற பெயரில் வெளிநாட்டு நாணயக் கணக்குத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு மத்திய வங்கி தீர்மானித்தது.

(i) மறைமுக ஏற்றுமதியாளர்களைப் பொறுத்தவரையில் மறைமுக ஏற்றுமதியாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவில் மட்டுமே திறக்கப்பட்டு பேணப்பட வேண்டும்.

(ii) மறைமுக ஏற்றுமதியாளர்களினால் வழங்கப்பட்ட உற்பத்திகளுக்காக நேரடி ஏற்றுமதியாளர்களிடமிருந்து மறைமுக ஏற்றுமதியாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்காக பெறப்படுகின்ற வெளிநாட்டு நாணய வசதிகளை மறைமுக ஏற்றுமதியாளர்களின் உற்பத்திகள் உள்நாட்டு பெறுமதி கூட்டலில் குறைந்தது 35% இனைக் கொண்டிருத்தல் மட்டுமே கிடைக்கச் செய்தல் வேண்டும். நேரடி ஏற்றுமதியாளர்களுக்கு அவர் வழங்கிய உற்பத்திகளின் பெறுமதியில் 35% அல்லது அதற்கும் கூடுதலானவை உள்நாட்டு பெறுமதி கூட்டப்பட்டவை என்பதனை உறுதிப்படுத்தி இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் அல்லது இலங்கை முதலீட்டுச் சபையினால் மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட சான்றிதழை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். முதலீட்டுச் சபையல்லா தொழில் முயற்சிகளைப் பொறுத்தவரை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினாலும் முதலீட்டுச்சபைத் தொழில்முயற்சிகளைப் பொறுத்தவரை முதலீட்டுச்சபையினாலும் உற்பத்திகளின் பெறுமதி கூட்டப்பட்ட கூற்றுகளைக் கவனமாக ஆராய்ந்த பின்னர் அத்தகைய சான்றிதழ்கள் வழங்கப்படும்.

(iii) மறைமுக ஏற்றுமதியாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கான பற்றுக்கள் மறைமுக ஏற்றுமதி யாளர்களினால் அவரது இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீட்டுத் தேவைப்பாடுகளைச் செய்யப்படும் வெளிநாட்டு செலாவணிக் கொடுப்பனவிற்கும் இலங்கை ரூபாவிற்கு நேரடியாக மாற்றப்படுவதற்கும் மட்டுமே மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

(iv) நாணயத்தாள்கள் மற்றும் பயணிகள் காசோலை போன்ற வெளிநாட்டு நாணயங்களை மறைமுக ஏற்றுமதியாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கெதிராக வழங்கக்கூடாது.

(v) ஒவ்வொரு மாதத்தின் முடிவிலும் ஒவ்வொரு மறைமுக ஏற்றுமதியாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலுமுள்ள முன்கொண்டு செல்லப்படும் மீதி ஐ.அ.டொலர் 5,000 இனை விஞ்சக்கூடாததுடன் மாத இறுதியில் ஐ.அ.டொலர் 5,000 இற்கு மேலாக கணக்கில் வைத்திருக்கப்படும் மிகையாகவுள்ள அனைத்துப் பணமும் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட வேண்டும். இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கணக்குத் திறக்கப்படும் வேளையில் மறைமுக ஏற்றுமதியாளரிடமிருந்து எழுத்து மூலமாக சம்மதத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(vi) மறைமுக ஏற்றுமதியாளர்கள் தமது வியாபாரத்தினை முடிவுறுத்துமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் மறைமுக ஏற்றுமதியாளர் என்ற தனது வியாபாரத்தினை நிறுத்திக் கொண்டதிலிருந்து 60 நாட்களுக்கிடையில் கணக்கிலுள்ள மீதி முழுவதனையும் இலங்கை ரூபாவிற்கு மாற்றிக் கொள்வதன் மூலம் அவருக்கு வழங்கப்பட்டிருந்த வசதிகளை புறக்கீடு செய்து கொள்ளல் வேண்டும். ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் முதலீட்டுச் சபையும் குறைந்தது வருடத்திற்கொரு முறையாவது அவர்களது உற்பத்தியின் பெறுமதி கூட்டப்பட்ட கூறு தொடர்பான மறைமுக ஏற்றுமதியாளர்களின் தகைமை பற்றி மீளாய்வு செய்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(vii) அனைத்து மறைமுக ஏற்றுமதியாளர் கணக்குகளுக்குமான மொத்த பற்று மற்றும் வரவுகளை எடுத்துக்காட்டுகின்ற காலாண்டுக் கூற்றுக்களை "டி" கிளைக்கு முகவரியிட்டு செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு அடுத்த காலாண்டின் 15 ஆம் நாள் முடிவடைவதற்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும்.

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நோக்கத்திற்காக, மறைமுக ஏற்றுமதியாளர்கள் என்பது தயாரிக்கின்ற/செய்முறைப்படுத்துகின்ற/துணை ஒப்பந்தம் செய்கின்ற/அல்லது முடிவுப்பொருள் வடிவில் உற்பத்திகளை வழங்குகின்ற ஆள் அல்லது தொழில் முயற்சி என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

ஆளுநர்

துணை ஆளுநர்

உதவி ஆளுநர்

பணிப்பாளர்.நாயகம்

பணிப்பாளர் நாயகம்/மு.சபை

பணிப்பாளர் வ.மே.தி

பணிப்பாளர் .ப.தொ.தி

அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்

தொடர்பு 06/04/03/2005

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
த.பெ.எண்.883
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 1
2005 மே 09

***அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கிக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்***

*அன்புள்ள ஐயா,*

**சுனாமிக்குப் பின்னைய உள் பண அனுப்பல் கணக்கு**

உங்கள் கவனம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 2005.02.14 ஆம் நாளிடப்பட்ட 06/04/01/2005 எண் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின்பால் ஈர்க்கப்படுகின்றது. அரசல்லா நிறுவனங்களுக்கு கணக்குகளைத் திறக்கும் வேளையிலும் கணக்கினூடாக தொடர்ந்தும் கொடுக்கல்வாங்கல்களை அனுமதிக்கின்ற வேளையிலும் அரசல்லா நிறுவனங்களின் நம்பகத் தன்மையினை அடையாளங் காண்பதற்கு போதுமான கவனத்தினைச் செலுத்துகின்ற நடவடிக்கையின் போது பின்வரும் ஆவணச்சான்றுகளில் தங்கியிருக்குமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(i) 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தன்னிச்சையான சமூகப்பணி அமைப்புக்கள் (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்) சட்டத்தின் படி "அரசல்லா நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தினால்" வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ்

(ii) மேற்குறிப்பிட்ட விடயம் இல்லாதவிடத்து, அரசல்லா நிறுவனங்களை பதிவு செய்வதற்காக நிதியமைச்சின் "அரசல்லா துறைக்கான நிலையத்தினால்" வழங்கப்பட்ட விதந்துரைப்பு.

மேற்குறிப்பிட்ட சான்றிதழ்களைச் சமர்ப்பிக்காது உங்களுடன் வங்கிக் கணக்குகளைப் பேணிவரும் அரசல்லா நிறுவனங்களின் பெயர்களையும் முகவரிகளையும் 2005 மே 28 ஆம் நாளுக்கு முன்னர் எனக்கு அனுப்பி வைக்குமாறு நீங்கள் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

ஆளுநர்
து.ஆ
உ.ஆ
வ.மே.ப
பொ.ஆ.ப
ப.தொ.ப

தொடர்பு 06/05/04/2005

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
த.பெ.எண்.883
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 1
2005. 06. 24

*அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குமான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

*அன்புள்ள ஐயா,*

**சிறப்பு இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளின் திருத்தங்கள்**

1998 ஏப்பிறல் 8 ஆம் நாளிடப்பட்ட எண் 1028/ 6 கொண்ட அரச வர்த்தமானியில் (அதிவிசேடம்) வெளியிடப்பட்ட ஒழுங்குவிதி 2(1)(ஈ) இல் இறக்குமதிகளுக்காக குறித்துரைக்கப்பட்ட முற்பணங்களது கொடுப்பனவு வரையறை மாண்புமிகு வர்த்தக, வாணிப மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்டு ஒழுங்குவிதியின் நியதிகளின்படி இப்பொழுது ஐ.அ.டொலர் 10,000 இற்கு உயர்த்தப்பட்டுள்ளது என்பதனையும் இது 2005 மே 20 ஆம் நாளிடப்பட்ட எண் 1393/21* இடப்பட்ட அரச வர்த்தமானியில் (அதிவிசேட) வெளியிடப்பட்டிருப்பது பற்றியும் உங்களுக்கு அறியத்தருகின்றோம்.

உங்கள் உண்மையுள்ள

**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

படி.

ஆளுநர்

துணை ஆளுநர்

ப/பொ.து

ப.வ.மே.

ப.வ.தொ.தி

* அரச வர்த்தமானி அறிவித்தல் மாண்புமிகு வர்த்தக, வானிலை, நுகர்வோர் அலுவலர்கள் அமைச்சினால் வெளியிடப்பட்டது.

தொடர்பு 06/ 08 / 06/ 2005

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு 1
2005 செத்தெம்பர் 23

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

## பன்னாட்டு இலத்திரனியல் கொடுகடன் பற்று, வரவு அல்லது வேறு ஏதாவது நிதிய மாற்றல் அட்டைகளுக்கெதிரான வெளிநாட்டுச் செலாவணி எடுப்பனவுகளின் மீதான கண்காணிப்புத் திட்டம்

உலகலாவிய விதத்தில் சென்றடையத்தக்க இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளின் பயன்பாடு விரைவாக விரிவடைந்தமையுடன் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவுகளைச் செய்கின்ற அத்தகைய அட்டைகளை துஷ்பிரயோகம் செய்கின்ற நிகழ்வுகள் அண்மைய கடந்த காலங்களில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்துள்ளமை பற்றி எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. ஆகவே எதிர்காலத்தில் அத்தகைய துஷ்பிரயோகங்களை தடுக்கும்பொருட்டு 1999.12.17 ஆம் நாளிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/09/99/(டி) மற்றும் 2000/02/03 ஆம் நாளிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/02/2000(டி) என்பனவற்றின் கீழ் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களினது நியதிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட தற்போதைய கண்காணிப்புத் திட்டத்தினை வலுப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, இணைப்பு 1 இல் உள்ள அறிவித்தல் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் மீது வெளிநாட்டுச் செலாவணியில் செய்யப்படும் கொடுப்பனவுகள் குறிப்பிட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டே அனுமதிக்கப்பட வேண்டும் என்பது பற்றி 2005 செத்தெம்பர் 19 ஆம் நாளிடப்பட்ட இல.1411/5 இனைப் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கிறது.

1.1 இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளை வழங்கும்பொழுது வாடிக்கையாளர்கள் அறிந்து கொள்வதற்காக குறிப்பிட்ட அறிவித்தலை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அவர்களுக்கு கிடைக்கச் செய்வது மிக முக்கியமானதுடன் குறிப்பிட்ட அறிவித்தலை வாடிக்கையாளர் படித்து தெளிவாக புரிந்து கொண்டமை பற்றி வாடிக்கையாளரிடமிருந்து இணைப்பு II இல் உள்ள உத்தரவாத மொன்றினையும் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் இவ்வுத்தரவாதம் நீங்கள் கொடுகடன் அட்டையை வைத்திருப்பவருடன் செய்கின்ற உடன்படிக்கையிலும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

1.2 ஏற்கனவே இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையை வைத்திருப்பவர்களைப் பொறுத்த வரை, முன்சொல்லப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் வழங்கப்பட்ட பொதுவான ஒப்புதலுக்கான தேவைப்பாடுகளை ஏற்கனவே அட்டைகளை வைத்திருப்பவர்களுக்கு அறிவிப்பதற்கு சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டமையினை உறுதிப்படுத்துவதற்கான ஒழுங்குகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.3 இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளைப் பயன்படுத்தி அங்கீகாரமளிக்கப்படாத வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டது என்று சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்குமாயின், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை கிடைக்கத்தக்கதாகவுள்ள வெளிநாட்டுச் செலாவணியினை இடைநிறுத்தும் உரிமையையும் இவ்விடயத்தினை செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்கின்ற உரிமையினையும் கொண்டிருக்கின்றார்கள் என்ற நிபந்தனைகளை வாடிக்கையாளர்களின் உத்தரவாதத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அட்டையை வைத்திருப்போர் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையினைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் கொடுக்கல்வாங்கல் மீதான தகவல்களைப் பெறும் உரிமையையும் கொண்டிருக்கிறார்கள்.

2. இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் இலங்கையில் வதிவோருக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

2.1 எனினும், இலத்திரனயல் நிதிய மாற்றல் அட்டைகளை உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளின் கணக்குகளிலும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலுள்ள கரைகடந்த கணக்குகளிலும் உள்ள வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோரின் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் வைத்திருப்பவர்களுக்கு அவர்களது வதிவிட தகைமையைக் கருத்திற்கொள்ளாது இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் தொடர்பாக ஏற்படும் செலவு முன்சொல்லப்பட்ட கணக்கில் மாத்திரமே பற்று வைக்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அட்டைகள் வழங்கப்படும். அத்தகைய கணக்குகளின் வரவிலுள்ள வெளிநாட்டு நாணய நிதி பற்றுக்களை, மேற்கொள்ள போதுமானதாக இல்லாதவிடத்து எனது ஒப்புதல் இல்லாமல் அட்டை வைத்திருப்பவரின் ரூபாக் கணக்கில் பற்றுக்கள் எதுவும் மேற்கொள்ளக்கூடாது. இத்தேவைப்பாட்டினை அனைத்து இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை உடமையாளர்களுக்கும் அறியச் செய்தல் வேண்டும்.

2.2 இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் வழங்கல், இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளைப் பயன்படுத்தி வதியாதோர் வெளிநாட்டு நாணய, வதியும் வெளிநாட்டு நாணய, வதியும் இலங்கையரல்லாதோரின் நாணய கணக்குகள் மற்றும் கரைகடந்த கணக்கிலுள்ள வரவுக்கணக்கிலுள்ள நிதிகளிலிருந்து எடுப்பனவு செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியினை தீர்ப்பனவு செய்வதற்கு வழங்கப்பட்டிருந்தாலொழிய இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளின் வழங்கல், அட்டைகளை வைத்திருப்போர் ஒன்றில் இலங்கையை விட்டு குடியகல்கின்ற அல்லது வேலைவாய்ப்பிற்காக அல்லது நிரந்தரமாக வெளிநாட்டில் வதிவதற்காக இலங்கையை விட்டுச்செல்லுமிடத்து அவருக்கு/ அவளுக்கு வழங்கப்பட்ட அட்டையை அங்கீகரிக்கப்பட்ட வணிகரிடம் கையளித்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டிருத்தல் வேண்டும்.

3. அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளை வைத்திருப்பவர்களினால் பயன்படுத்தப்படும் கணக்குகளை கடுமையாகக் கண்காணிக்க வேண்டியதுடன் அங்கீகரிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்களை தடுப்பதற்காக போதியளவு கவனத்தையும் செலுத்துதல் வேண்டும். எந்த ஒரு அங்கீகரிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்களுக்காகவும் அட்டையை வைத்திருக்கும் எந்த ஒரு ஆளும் வெளிநாட்டுச் செலாவணியில் செலவினத்தை ஏற்படுத்துகின்றனர் என்று ஐயப்படுவதற்கு நியாயமான காரணங்கள் காணப்படுகின்றவிடத்து அவரின்/ அவளின் இலத்தினியல் நிதிய மாற்றல் அட்டையின் மீதான வெளிநாட்டுச் செலாவணி கொடுப்பனவுகளை இடைநிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டியதுடன் இவ்விடயத்தினை செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கும் அறிவித்தல் வேண்டும்.

4. **செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு காலத்திற்குக் காலம் கூற்றுக்களை வழங்குதல்**

4.1 கொடுகடன் அட்டை வைத்திருப்பவர் வெளிநாட்டுச் செலாவணியில் உறப்பட்ட செலவினை தனித்தனியாக அடையாளம் காணக்கூடியவர்களாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இருத்தல் வேண்டும்.

4.2 எந்த ஒரு மாதத்திலும் ஐ.அ.டொலர் 5,000 இனை அல்லது அதற்குச் சமமான வேறு எந்த ஒரு நாணயத்தினையும் விஞ்சுகின்ற விதத்தில் வெளிநாட்டு நாணயத்திலான காசு எடுப்பனவுகள் அமைகின்றமை, தனியொரு கொடுக்கல்வாங்கல்களின் போது ஐ.அ.டொலர் 3,000 இனை விஞ்சுகின்ற செலவினத்தினை ஏற்படுத்துகின்றவர்கள் உட்பட, வெளிநாட்டு நாணயத்தில் செலவினத்தினை ஏற்படுத்தியிருக்கின்ற அட்டை உடமையாளர்கள் மீதான தகவல்களை உள்ளடக்கிய மாதாந்த விபரமான அறிக்கையினை **இணைப்பு III இல் உள்ள படிவத்தில் புலனாய்வாளர், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், இலங்கை மத்திய**

**வங்கி, கொழும்பு 1 என்ற முகவரிக்கு அடுத்த மாதத்தின் 7 ஆம் நாளுக்கு பிந்தாமல் அனுப்பி வைத்தல் வேண்டும். அதற்கு முன்னர் இத்தகவல்களை eftc@cbsl.lk என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.**

4.3 மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக முன்னர் வழங்கப்பட்ட 1999.12.17 ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/09/99(டி) மற்றும் 2000.02.03 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/02/2000 (டி) கொண்ட தொழிற்பாட்டு அறிவித்தல்கள் இரத்துச் செய்யப்படுகின்றன.

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

துணை ஆளுநர்
உதவி ஆளுநர்
ஆலோசனையாளர், ஆ.செ

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேஷமானது**
**1411/5 ஆம் இலக்கம் - 2005ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19ஆந் திகதி திங்கட்கிழமை**
**(அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**
**பகுதி 1 :தொகுதி (1) - பொது**
**இலங்கை மத்திய வங்கி அறிவித்தல்கள்**

**(இ.ச.வா.வின் 423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**
**7 ஆம் பிரிவினதும் 8 ஆம் பிரிவினதும் நியதிகளின்படி அனுமதி**

1. இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதியும் ஆளொருவர் அவரது இலத்திரனியல் நிதிக் கைமாற்றல் அட்டையில் (இ.நி.கை.அ) (இ.ச.வா.வின் 423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7 ஆம் 8 ஆம் பிரிவுகளின் நோக்கத்திற்காக இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு அந்நிய செலாவணியில் கொடுப்பனவுகள் செய்வதற்குப் பின்வரும் நியதி நிபந்தனைகளுக்கமைய இத்தால் அனுமதியளிக்கப்படுகின்றது.

2. (அ) இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு அல்லது அமைப்பொன்றுக்கு இ.நி.கை.அ.வொன்றில் கொடுப்பனவொன்று பின்வரும் நோக்கங்களுக்காக மாத்திரமே செய்யப்படலாம்.

(i) பிரயாணம், தங்குமிடவசதி, மருத்துவம், வாழ்க்கை மற்றும் கல்விச் செலவுகள் உட்பட தனிப்பட்ட தனமையினவான சேவைகளுக்கு அட்டை வைத்திருப்பவர் ஒருவரால் வெளிநாட்டில் செய்யப்படவுள்ள கொடுப்பனவு;

(ii) தனிப்பட்ட பாவனைக்காக வெளிநாட்டில் பண்டங்களின் கொள்வனவுக்கான கொடுப்பனவு

(iii) வேறேதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அனுப்புப் பொருள் ஒன்றிற்கு 3000 அமெரிக்க டொலர் (செ.கா.கே) வரையறையொன்றிற்கமைய தனிப்பட்ட பாவனைக்குப் பண்டங்கள் இலங்கைக்குள் இறக்குமதி செய்வதற்கான கொடுப்பனவு;

(iv) தொழில்சார் குழு அல்லது கல்விசார் நிறுவனமொன்றுக்குச் செலுத்தப்படற்பாலதான தனிப்பட்ட இயல்பொன்றிதான பதிவுக் கட்டணங்கள் பரீட்சைக் கட்டணங்கள் அத்துடன் ஆண்டு ஒப்பப் பணங்கள் என்பவற்றின் கொடுப்பனவு;

(v) தனிப்பட்ட இயல்பினதான பிரயாணத்திற்கும் சுகாதாரக் காப்புறுதிக்குமான காப்புறுதிக் கட்டுப்பணம் தொடர்பில் மாத்திரம் செய்யப்படவுள்ள கொடுப்பனவு.

(ஆ) பந்தி 2(அ) என்பதன் கருத்தெல்லைக்கு வெளியிலான ஏதேனும் கொடுக்கல்வாங்கலுக்கு இ.ந.கை.அ.மீது வெளிநாட்டு நாணயத்திலான ஏதேனும் கொடுப்பனவு வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றில் (வ.அ.வெ.நா.க) வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றின் (வ.வெ.நா.க) வதிவுள்ள நாட்டினத்த வரல்லாதவரின் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றின் (வ.நா.அ.வெ.நா.க) அல்லது உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் கரைகடந்த வங்கித்தொழில் கூறொன்றின் கரைகடந்த கணக்கொன்றின் வரவிலிருக்கும் நிதியங்களிலிருந்து செய்யப்படும் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலொன்று தொடர்பிலாயிருந் தாலன்றி அத்தகைய கொடுப்பனவுக்கு செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான முன் அனுமதி தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

3. இந்த வர்த்தமானி அறிவித்தலின் நோக்கத்திற்கு சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி "இலத்திரனியல் நிதிக் கையமாற்றல் அட்டை" (இ.நி.கை.அ) என்பது வரவில் பற்றில் அல்லது வேறு ஏதேனும் வடிவத்தில் உள்ள பெறுமதியை கைமாற்றுவதனைப் பாவனையாளருக்கு இயலச்செய்யும் ஓர் அட்டை அல்லது உபாயப் படிவம் என்று பொருள்படும் என்பதுடன் கடன் அட்டைகளையும் தேக்கிய பெறுமதி அட்டைகளையும் உள்ளடக்கும். அத்துடன் "தனிப்பட்ட பாவனை" என்பது அட்டை வைத்திருப்பவரினதும் அவரது வாழ்க்கைத் துணையினதும் பிள்ளைகளினதும் பெற்றோரினதும் பாவனைக்கானது என்பதுடன் ஏதேனும் வர்த்தக நோக்கத் திற்கான பாவனையை உள்ளடக்கமாட்டாது.

எச்.ஏ.ஜீ.ஹெட்டியாராச்சி.
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

இணைப்பு II

(இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைக்கான விண்ணப்பம் அல்லது அட்டையை வைத்திருப்போர் வங்கியுடன் செய்துகொள்ளும் உடன்படிக்கையில் உள்ளடக்கப்படுவதற்கு)

**இலங்கை மத்திய வங்கி**
**இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளுக்காக விண்ணப்பதாரர்களினால்**
**செய்யப்பட வேண்டிய பிரகடனம்**

செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு,

(வரவு/ பற்று அல்லது வேறு ஏதாவது இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைக்கெதிராக வெளிநாட்டுச் செலாவணியினைப் பெறுவதற்காக விண்ணப்பதாரியினால்/களினால் நிரப்பப்பட வேண்டியது)

........................................................................ ஆகிய நான்/ நாங்கள் (பிரதான அட்டை வைத்திருப்பவர்/ துணை அட்டை வைத்திருப்பவர்) இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால்/எங்களால் மேலே தரப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் பிரகடனம் செய்கின்றேன்/செய்கின்றோம்.

நான்/ நாங்கள் **2005 செத்தெம்பர் 19 ஆம் நாளின் எண் 1411/ 5 கொண்ட** அதிவிசேட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் உள்ள செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை நான்/நாங்கள் அறிவோம் என இத்தால் உறுதிப்படுத்துகின்றோம். இதற்கு உட்பட்டு வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்த முடிவதுடன் நான்/நாங்கள் இந்நிபந்தனைகளைப் பின்பற்றுவதற்கும் பொறுப்பேற்கிறோம்.

நான்/ நாங்கள் எனக்கு/ எங்களுக்கு வழங்கப்பட்ட அட்டையைப் பயன்படுத்தி என்னால்/ எங்களால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான எந்த ஒரு மேலதிக தகவல்களையும் ........................................................................ வங்கியினால் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் நோக்கத்திற்காகக் கேட்கப்படும் பொழுது வழங்குவதற்கு உடன்படுகின்றேன்/ உடன்படுகின்றோம்.

நான்/ நாங்கள் இலங்கையை விட்டுப் புலம் பெயரும்போது அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகச் செல்லும் பொழுது ........................................................ வங்கியிடம் கொடுகடன் அட்டையை/ அட்டைகளை கையாளிப்பதற்கு நான்/ நாங்கள் பொறுப்பேற்கிறோம் என்பதற்கு நான்/ நாங்கள் உறுதியளிக்கின்றேன்/ உறுதியளிக்கின்றோம்.

எனக்கு/எங்களுக்கு வழங்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையினைப் பயன்படுத்தி அங்கீகரிக்கப்படாத வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டதாகச் சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்குமாயின் / அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகள் மீது கிடைக்கத்தக்கதாகவுள்ள வெளிநாட்டுச் செலாவணியினை இடைநிறுத்துமாறு கேட்டுக்கொள்வார் என்பதனை நாம்/ நாங்கள் அறிவோம்.

................................................ ........................................................................

நாள். மாதம். ஆண்டு பிரதான அட்டை வைத்திருப்பவர் கையொப்பம்

........................................................................

துணை அட்டை வைத்திருப்பவர் கையொப்பம்

நான், அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் என்ற ரீதியில் விண்ணப்பதாரியினால் விண்ணப்பதாரர்களினால் வழங்கப்பட்ட தொடர்பான ஆவணங்களுடன் சேர்த்து தகவல்களை கவனமாகப் பரீட்சித்துள்ளதுடன் இத்தகவல்கள் மற்றும் ஆவணங்களின் உண்மைத் தன்மை பற்றியும் திருப்திப்பட்டுள்ளேன். வெளிநாட்டுச் செலாவணி தொடர்பாக அவரின்/ அவளின் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையின் மீதும் அட்டையை வைத்திருப்போர் மேற்கொள்ளும் கொடுக்கல்வாங்கல்களின் மீதும் போதுமான கவனத்தினை மேற்கொள்வேன் என்றும், உத்தரவாதமளித்தமைக்கு மாறாக, இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையினைப் பயன்படுத்தி அங்கீகரிக்கப்படாத வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டதாகச் சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருக்குமாயின் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டையின் மீது கிடைக்கத்தக்கதாகவுள்ள வெளிநாட்டுச் செலாவணியினை நிறுத்துவதற்கும் இவ்விடயத்தினை செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் கவனத்திற்கொண்டு வருவதற்கும் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

........................................................................ ........................................................................

நாள் மாதம் ஆண்டு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

இணைப்பு III

செலாவணிக் கட்டுப்பாட்டாளர் (கவனிப்பு : புலனாய்வுப் பிரிவு)

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

கொழும்பு 1

## இலங்கை மத்திய வங்கி

***1953 ஆம் ஆண்டின் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு (3) இன் நியதிகளுக்கிணங்க 2005.09.23 ஆம் நாளிடப்பட்ட தொடர்பு எண் 06/08/06/2005 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பந்தி 4.2 இற்கு இணங்கிக் கொள்ளும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணியில் ஐ.அ.டொலர் 5000 இனை விஞ்சிய ஒன்று சேர்த்த செலவினத்தை கொண்டுள்ளவர்களின் கணக்குகள் தொடர்பாவும் .............................................. ஆண்டின் ............................... மாத காலப்பகுதியில் தனியொரு கொடுக்கல் வாங்கல்களின் போது ஐ.அ.டொலர் 3000 இற்கு மேற்பட்ட தொகையைக் கொண்ட செலவினம் உறப்பட்டமை தொடர்பானவர்களது கணக்குகள் பற்றியமாதாந்த அறிக்கையானது வழங்கப்படுகிறது.***

பகுதி அ. மாதமொன்றிற்கு ஐ.அ.டொலர் 5000 இற்கு மேலாகவும் கொடுக்கல் வாங்கலொன்றின் ஐ.அ.டொலர் 3000 கூடுதலாகவும் வெளிநாட்டுச் செலாவணியினைப் பயன்படுத்திய அட்டையை வைத்திருப்பவர்களது விபரங்கள

| அட்டை வைத்திருப்பவரின் பெயரும் முகவரியும் (பெரிய எழுத்தில்) | அடையாள அட்டை இலக்கம் | அட்டை இலக்கம் | வணிகர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட தொகை | வணிகரின் பெயரும் வணிக வகையின் குறியீடு | கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற நாடு | கொடுப்பனவு இணையத் தளமூடாக மேற் கொள்ளப் பட்டதா |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

*வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்*

*வங்கியின்/ அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் முத்திரை*

*திகதி.................................*

*மா/ நா/ ஆ*

*........................... ஆண்டின் ................. மாதத்தில் வெளிநாட்டு நாணயத்தில் இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை வைத்திருப்போரினால் உறப்பட்ட மொத்த செலவினம்*

| மாதத்தில் வழங்கப்பட்ட அட்டைகளின் மொத்த எண்ணிக்கை | அட்டைகளின் வகை | அனைத்து இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டை வைத்திருப்போரினாலும் ஐ.அ.டொலரில் கூறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி செலவினத்தின் மொத்தப்பெறுமதி |
|---|---|---|
| | | |

*வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்*

*அதிகாரமளிக்கப்பட்ட வங்கியின் வணிகர்களின் முத்திரை*

*திகதி.........................*

*மா.நா.ஆ*

பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்
21 திசெம்பர் 2005

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கும்

**நிதியியல் பெறுதி உற்பத்திகள் மீதான பணிப்புரைகள்**

எமது 2005 ஒகத்து 12ஆம் நாளிடப்பட்ட கடிதத்திற்கு மேலதிகமாக நிதியியல் பெறுதி சாதனங்கள் மீதான பணிப்புரைகள் இணைக்கப்பட்டுள்ளன. இங்கே இணைக்கப்பட்டுள்ளவை மேலே குறிப்பிடப்பட்டுவற்றின் திருத்தப்பட்ட பதிப்பாகும். இது 2006 சனவரி 1ஆம் நாளன்று நடைமுறைக்குவரும்.

தயவுசெய்து இது கிடைத்தமைபற்றி அறியத்தரவும்

நன்றி

உங்கள் உண்மையுள்ள

**திருமதி பி. லியனகே**

பணிப்பாளர் - பன்னாட்டுத் தொழிற்பாடு

2005 திசெம்பர் 21

தொடர்பு 33/01/002/0086/002

*அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கும்*

## நிதியியல் பெறுதிச் சாதனங்கள் மீதான பணிப்புரை (திருத்தப்பட்டது)

இச்சுற்றறிக்கையானது நிதியியல் வழிவந்த சாதனங்கள் மீதான பணிப்புரைகள் பற்றிய எமது 2005 ஒகத்து 12 ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கையினைத் திருத்துவதுடன் அதனை அகற்றுகிறது. திருத்தப்பட்ட பணிப்புரைகள் 2006 சனவரி 1 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளதுடன் அதிகாரமளிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வணிகர்களாக தொழிற்படுவதற்கு நியமிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலுள்ள (இலங்கை ரூபாவுடன் தொடர்புபடாதவை) வழிவந்த கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பான அனைத்து விடயங்களும் நடைமுறையிலிருக்கும். இப்பணிப்புரைகள் இங்கே இணைக்கப்பட்டுள்ள பணிப்புரைக்கான விளக்கக் குறிப்புக்களுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டும்.

1. அனுமதிக்கப்பட்ட சாதனங்கள்

இப்பணிப்புரையின் கீழ் அனுமதிக்கப்பட்ட வழிவந்த கொடுக்கல்வாங்கல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது.

1.1 வட்டிவீத ஒன்றுக்கொன்று பரிமாற்றம்

1.2 வட்டிவீத விருப்பார்வம்

1.3 முன்னோக்கியவீத உடன்படிக்கை

1.4 குறுக்கு நாணய ஒன்றுக்கொன்று பரிமாற்றம்

1.5 நாணயம்/ பண்டவிருப்பார்வம்

2. மேற்குறிப்பிட்ட சாதனங்கள் தற்போதுள்ள தன்மைகளின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக மாத்திரம் பயன்படுத்தப்படக்கூடியனவாகவும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களைப் பொறுத்தவரை தற்போதைய செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின்[1] நியதிகளிலும் அனுமதிக்கப்பட்டன.

3. அனுமதிக்கப்பட்டுள்ள பெறுதிச் சாதனங்களின் நோக்கம்

அனுமதிக்கப்பட்டுள்ள பெறுதிச் சாதனங்கள், அவற்றின் சொந்த சொத்துக்களின் அல்லது பொறுப்புக்களிலிருந்து தோன்றும் இடர்நேர்வுகளிலிருந்து பாதுகாப்பதற்கும் அல்லது அதன் இடர்நேர்வு தோற்றப்பாட்டினை எச்சரிப்பதற்கான நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டுமேயொழிய ஊக நோக்கங்களுக்காகவல்ல. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மாத்திரமே திறந்த வெளிப்படுத்துகைகளைப் பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டதுடன் அத்தகைய வெளிப்படுத்துகைகள் மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்துகையின் வரையறைகளுக்குள்பட்டதாக இருத்தல் வேண்டும். இப்பணிப்புரையின் 4.1 இன் கீழ் தகைமைபெற்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் பெறுதிச் சாதனங்கள் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட விரும்புகின்றவர்களும் இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்கு பெறுதிச் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கான தமது அக்கறையினை அறிவித்தல் வேண்டும். இக்கொடுக்கல்வாங்கல்கள் மத்திய வங்கியின் மேற்பார்வைக்கும் நுண்ணாய்விற்கும் உட்பட்டதாக இருக்கும்.

4. தகைமை வாய்ந்ததும் அனுமதிக்கத்தக்கதுமான நடவடிக்கை

4.1 மூலதனப் போதுமை விகிதத்தினை 11% இற்கும் கூடுதலாகக் கொண்டுள்ள வர்த்தக வங்கிகள் பெறுதிச் சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படும்.

4.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வ.வீ.ஏ பரிமாற்றம்/வ/வீ.விருப்பார்வம்/ மு.பீ.உடன்படிக்கை/ கு.நா.ஓ.பரிமாற்றம்/நா.ப.விருப்பார்வம் ஒவ்வொன்றும் அனுமதிக்கப்பட்ட குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்கள் அல்லது மூலதன/ நடைமுறை வெளிப்படுத்தல் தொடர்பாக மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது என்பதனை உறுதிப்படுத்த வேண்டும்

4.3 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ஒவ்வொரு விருப்பார்வத்தையும் நாணயப் பரிமாற்றமானது வர்த்தகத்திலுள்ள பொருள்கள் மற்றும் பணிகள் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவுகள் மற்றும் பெறுகைகள் போன்ற குறிப்பிட்ட நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் முதலீடு மற்றும் வெளிநாட்டு நாணயக் கடன்கள்[2] போன்ற அனுமதிக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்கள்[3] என்பன தொடர்பாக மாத்திரமே மேற்கொள்ளப்படுகிறது.

4.4 வர்த்தகத்திலுள்ள பொருட்கள் மற்றும் பணிகள் அல்லது உண்மையான ஐந்தொகை வெளிப்படுத்தல்கள் என்பன தொடர்பான குறிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களிலிருந்து தோன்றும் அவர்களது வெளிப்படுத்துகைகளைப் பாதுகாப்பதற்காக இறக்குமதியாளர்கள் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

4.5 எந்த ஒரு சூழ்நிலையிலும் வ.வீ.ஏ.பரிமாற்றம்/வ/வீ.விருப்பார்வம்/ மு.பீ.உடன்படிக்கை/ கு.நா.ஓ.பரிமாற்றம்/நா.ப.விருப்பார்வம் ஒவ்வொன்றும் மற்றும் சிசிஓ என்பன வெளிநாட்டில் வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்பட்ட எந்தஒரு வெளிநாட்டு நாணய வைப்புக்கள்

1. 1994.03.18 ஆம் நாளிடப்பட்ட செலாணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் ஈசி/டி/ஜிஎல்/1994/2 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை.

2. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், வெளிநாட்டு நாணயத்திலான கடன் வழங்கலை நேரடி ஏற்றுமதியாளர்கள, மறைமுக ஏற்றுமதியாளர்கள் முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட தொழில் முயற்சிகள், செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்ட தொழில் முயற்சிகள் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் ஒப்புதல் பெற்ற மற்றைய ஏதும் தரப்பினருக்கும் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

3. வெளிநாட்டு நாணய வைப்புக்கள் ஏற்றுமதியாளர்கள், முதலீட்டுச்சபைக் கம்பனிகள், செலாவணிகட்டுப்பாட்டுச்சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டவர்கள் மற்றும் செலாவணிக்கட்டுப்பாட்டாளரின் ஒப்புதலைப் பெற்ற தரப்பினர் ஆகியோரிற்கு அனுமதிக்கப்பட்டன.

தொடர்பாகவும் வெளிநாட்டிலுள்ள வங்கி அல்லது வெளிநாட்டு தொடர்பு வங்கி என்பனவற்றினூடாக இலங்கையிலுள்ள அதன் வாடிக்கையாளர்களை தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படமாட்டா.

4.6 அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டுக் நாணயக் கடன்களைப் பொறுத்தவரை, வ.வீ.ஏ.பரிமாற்றம்/வ.வீ.விருப்பார்வம்/ மு.பீ.உடன்படிக்கை/கு.நா.ஓ.பரிமாற்றம்/ நா.ப.விருப்பார்வம் ஒவ்வொன்றும் கோட்பாட்டு ரீதியான முதல் தொகை, வெளிநாட்டு நாணயக்கடன்களின் வெளிநின்ற தொகையினை அல்லது அனுமதிக்கப்பட்ட ஆளின்/ நிறுவனத்தில் வெளிநாட்டு நாணய வைப்புக்களின் மீதியை விஞ்சக்கூடாது.

4.7 வர்த்தகப்படுத்தல் ஏடுகள் மற்றும் ஐந்தொகை வெளிப்படுத்தல் என்பனவற்றின் பாதுகாப்பு நோக்கங்களுக்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் சாதனங்களைப் பயன்படுத்த முடியும்.

4.8 பாதுகாப்பிற்கான நாணயம் வாடிக்கையாளர்களின் தேர்விற்கு விடப்பட்டுள்ளது.

4.9 நாணய/பண்டவிருப்பார்வம் மற்றும் குறுக்கு நாணய ஒன்றுக்கொன்று பரிமாற்றத்தின் கோட்பாட்டு ரீதியான முதல் தொகை வெளிநின்ற வெளிநாட்டு நாணயக் கடப்பாடுகளை விஞ்சக்கூடாது.

4.10 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் விருப்பத்திற்குரிய ஒப்பந்தங்களை முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்களுக்கு சாதாரணமாக தகைமை பெறுவதுடன் உண்மையான ஐந்தொகையின் வெளிப்படுத்தல்களிலிருந்து எழும் அத்தகைய இடர்நேர்வுகளின் பாதுகாப்பிற்குமான கொடுக்கல்வாங்கல் தொடர்பாக மட்டுமே வழங்க வேண்டும்.

4.11 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அவர்களது வெளிநாட்டு தொடர்பு வங்கி அல்லது வேறு ஏதாவது உள்நாட்டு வங்கியுடனான அவர்களது இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளை பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

4.12 தொடர்பான வங்கிகளின் முகாமைத்துவத்தினால் குறித்துரைக்கப்பட்டதும் மத்திய வங்கியினால் ஒப்புதளிக்கப்பட்டதுமான வரையறைக்குள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கட்டுப்பாடற்ற நிலைமைகளைக் கொண்டிருக்க அனுமதிக்கப்பட்டனர்.

4.13 தொடர்புபட்ட தரப்பினர் பரஸ்பர உடன்படிக்கையின் மீது ஏதாவதொரு அடித்தள அளவுக் குறியீட்டினைப் பயன்படுத்துவதற்கு கட்டுப்பாடுகள் எதுவுமிருக்கவில்லை.

4.14 முன்னோக்கிய ஒப்பந்தங்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்தல் இரத்துச்செய்தல் மற்றும் மீண்டும் பதிவு செய்தல் என்பனவற்றிற்கு பொருந்தத்தக்க அனைத்து நிபந்தனைகளும் விருப்பார்வ ஒப்பந்தங்களுக்கும் பொருந்தத்தக்கதாக இருக்கும்.

5. **தகைமையுடைய வெளிநாட்டு நாணயங்கள்**

அனுமதிக்கப்பட்ட பெறுமதிச் சாதனங்களுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் பின்வரும் நாணயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

**ஐ.அ.டொலர், இசுடேர்லிங்பவுண், யூரே, யப்பானிய யென், கனடியன் டொலர், அவுத்திரேலிய டொலர் மற்றும் சுவிஸ் பிராங்.**

6. **காலம்**

பெறுதிச் சாதனங்களின் முதிர்ச்சிக் காலம் பத்து (10) ஆண்டுகளே அல்லது குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்கள் செல்லுபடியாகும் காலத்தின் எஞ்சிய காலப்பகுதி இதில் எது குறை வானதோ அதனை விஞ்சக்கூடாது.

7. **இடர்நேர்வு முகாமைத்துவம்**

அதிகாரம் பெற்ற வணிகர்கள் கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பனவற்றைத் தணிப்பதற்கு போதுமான வழிமுறைகள் எடுக்கப்பட்டதனை உறுதிப்படுத்துமாறும் வழிவந்த கொடுக்கல்வாங்கல்களை அனுமதிக்கின்ற ஆகக்குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளின் ஏற்பாடுகளின் இணங்கிக்கொள்வதுமாறும் கேட்டுக்கொள்ளப்படவேண்டும்.

8. அறிக்கையிடல்

8.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ஒரு மாத காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை சாதன வகை, தொகை, வீதங்கள், முதிர்ச்சிகள், நாணயம், இணைக்கினைத் தரப்பினரின் விபரங்கள் மற்றும் குறிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்/ வெளிப்படுத்துகை போன்றவற்றை எடுத்துக்காட்டுகின்ற விதத்தில் மாதாந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியின் பன்னாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்கு வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8.2 வங்கிகள் ஆய்விற்குரிய நிதியாண்டுப் பகுதியில் தாம் மேற்கொண்ட பெறுமதிச் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக குறைந்தது இலங்கை கணக்கீட்டு நியமங்கள் அல்லது பன்னாட்டு நிதியியல் அறிக்கையிடல் நியமங்களின் தேவைப்பாடுகளுக்கேற்ற விதத்தில் கணக்காய்வு செய்யப்பட்ட தமது ஆண்டுக் கணக்குகளைப் போதுமான விதத்தில் வெளிப்படுத்தல் வேண்டும்.

9. **கணக்கீட்டு நடவடிக்கைளும் மதிப்பீடும்**

ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களும் சந்தை பெறுமதி அடையாளமும் நாளாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

10. **ஆவணப்படுத்தல்**

வங்கியானது இணைக்கினைத் தரப்பினருடனான பன்னாட்டு ஒன்றுக்கொன்று பரிமாற்ற வணிகர் சங்க உடன்படிக்கையின் பயனை இரண்டு தரப்பினரதும் நன்மை கருதி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

11. **பல்வகைத் தேவைப்பாடுகள்**

11.1 பெறுதிச் சாதனங்களைப் உற்பத்திகளைப் பயன்படுத்துவதில் ஆர்வமுடைய வாடிக்கையாளர்களிடமிருந்து அவர்கள் தெளிவாக விளங்கிக் கொண்டுள்ள சாதனங்களின் தன்மை மற்றும் அவற்றுடன் இயல்பாகவே பிணைந்துள்ள இடர்நேர்வுகள் பற்றி அவர்களிடமிருந்து உத்தரவாதமொன்றினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

11.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தகவல்கள், சாதனங்களால் நிர்ணயிக்கப்பட்ட அடித்தள அளவுக் குறியீடாக கொள்ளப்பட்ட வட்டி வீதங்களைக் கொண்ட உற்பத்திகள் திடீர் விலைகள் வட்டம் ஏதுமிருப்பின் அவை மற்றும் அவர்களது வாடிக்கையாளர்களுடன் தொடர்புபட்டுள்ள இடர்நேர்வுகள் என்பனவற்றுக்குக் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய நிபந்தனைகள் மற்றும் கிளைவாசகங்கள் தொடர்பான போதுமான தகவல்களை வழங்க வேண்டியதுடன் உயர்ந்த மட்ட வெளிப்படையான தன்மையினையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**திருமதி.பி. லியனகே**
பன்னாட்டு தொழிற்பாடுகள் பணிப்பாளர்

**எச்.ஏ.ஜி. எட்டியாராச்சி**
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

## நிதியியல் பெறுமதிச் சாதனங்கள் மீதான பணிப்புரைகளின் சில பிரிவுகள் மீதான விளக்கக் குறிப்புக்கள்

நிதியியல் பெறுதிச் கொடுக்கல்வாங்கல்கள் மீதான பணிப்புரைகளின் ஒரு பகுதியாகவுள்ள பணிப்புரைகளுடன் இவ்விளக்கக் குறிப்பானதுசேர்ந்து வாசிக்கப்பட வேண்டும்.

1. **நிதியியல் பெறுதிகள்**

பெறுதி ஒப்பந்தம் தொடர்பான கருத்து என்பது நிதியியல் ஒப்பந்தம் ஒன்றில் அதன் பெறுமதி ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான குறிக்கப்பட்ட சொத்துக்கள் அல்லது குறிகாட்டிகள் என்பனவற்றின் மூலம் நிர்ணயிக்கப்படுவதாகும். இப்பணிப்புரைகளின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள பெறுதி கொடுக்கல்வாங்கல்களாக வட்டிவீத ஒன்றுக்கொன்று பரிமாற்றம், வட்டிவீத விருப்பார்வம், முன்னோக்கியவீத உடன்படிக்கைகள், குறுக்கு நாணய ஒன்றுக்கொன்று பரிமாற்றம், தங்கம் மற்றும் ஏனைய அரிய/ கைத்தொழில் உலோக விருப்பார்வம் போன்ற நாணய/ பண்ட விருப்பார்வம் என்பன காணப்படுகின்றன.

2. **அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்**

இப்பணிப்புரைகள் வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளையும் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளையும் உள்ளடக்கும். செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகத் தொழிற்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மாத்திரமே இவ்விளக்கக் குறிப்பின் பிரிவு 4(இ) இல் குறித்துரைக்கப்பட்டுள்ள பெறுதிச் சந்தை உருவாக்குநர் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர்.

3. **அனுமதிக்கப்பட்ட சாதனங்கள்**

(அ) ***வட்டிவீத ஒன்றுக்கொன்று பரிமாற்றம்*** என்பது குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியொன்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில் குறித்துரைக்கப்பட்ட பெயரளவு முதல் தொகையினை அடிப்படையாகக் கொண்ட வட்டிக் கொடுப்பனவுப் பிரிவுகளை பரிமாற்றிக் கொள்வதற்கான இரு தரப்பினருக்கு மிடையிலானதொரு உடன்படிக்கையாகும். காசுக் கொடுப்பனவுகள் நிலையான/மிதக்க விடப்படுகின்ற அல்லது மிதக்கவிடப்படுகின்ற /நிலையானவற்றினை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் இவை ஒருதரப்பினரிடமிருந்து இன்னொரு தரப்பினருக்கு மாற்றப்படுகின்றன. எந்த முறையிலும் முதல் தொகையில் பரிமாற்றமில்லை.

(ஆ) ***முன்னோக்கியவீத உடன்படிக்கை*** என்பது இரு தரப்பினருக்குமிடையிலான வட்டிவீத ஒப்பந்தமொன்றாகும். இது வட்டிவீத சந்தையில் நுழைவதற்கான தகுதியினை வழங்குகிறது. தரப்பினர்கள் கோட்பாட்டு ரீதியான முதல் தொகைக்கான வீதங்களில் ஒப்பந்தங்களை செய்கிறார்கள். தீர்ப்பனவுத் திகதியன்று கொடுக்கல்வாங்கல்கள், ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட அடித்தள அளவுக் குறியீடு அல்லது தொடர்பான வீதத்திற்கெதிராக கிளை மட்டத்தில் தீர்ப்பனவு செய்யப்படுகிறது.

(இ) **குறுக்கு நாணய ஒன்றுக்கொன்று பரிமாற்றங்கள்** குறுக்கு நாணய ஒன்றுக்கொன்று பரிமாற்றம் என்பது குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்குள் இரு வேறுபட்ட நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகளை மாற்றிக் கொள்வதற்காக இரு தரப்பினரிடையே மேற்கொள்ளப்பட்டதொரு ஒப்பந்தமாகும். ஒரு வட்டிக் கொடுப்பனவு மாதிரியாக ஐ.அ.டொலர் லண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதம் போன்று மிதக்கவிடும் வீதத்தினைப் பயன்படுத்தி கணிக்கப்பட்டது. மற்றைய வட்டிக் கொடுப்பனவுகள் வேறுபட்ட நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட நிலையான வீதத்தினை அல்லது இன்னொரு மிதக்கவிடப்பட்ட வீத சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. தனியொரு நாணய பரிமாற்றம் போலன்றி, குறுக்கு நாணய

பரிமாற்றமொன்று சில வேளைகளில் (எல்லா நாளுமல்ல) முதல் தொகை பரிமாற்றத்துடனும் தொடர்புபட்டதாக இருக்கும். ஆரம்ப முதல் தொகை பரிமாற்றமானது முதிர்ச்சியுள்ள மீள்பரிமாற்றத்துடன் பரிமாற்றத்தின் தொடக்கத்திலேயே நிகழ்கிறது. முதல் தொகையானது ஆரம்ப உடன் செலாவணி வீதங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

(ஈ) **நாணய விருப்பார்வம்** என்பது முன்னோக்கிய குறித்துரைக்கப்பட்ட திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ உள்ள குறித்துரைக்கப்பட்ட விலையில் இன்னொருவருக்காக ஒரு தொகை நாணயத்தினை பரிமாற்றுவதற்கு (வாங்கல்/விற்றல்) வாங்குனருக்கு ஆனால் கடப்பாட்டினை யன்றி உரிமையை வழங்குவதாகும். இவ்வுரிமத்திற்காக வாங்குநர் வட்டங்களைச் செலுத்துகின்றார். வாங்குவதற்கான உரிமம் அழைப்பிற்கான விருப்பார்வம் என அறியப்படுகின்ற வேளையில் விற்பதற்கான விருப்பம் விருப்பினை தெரிவிப்பது என அறியப்படுகின்றது. அத்தகைய உரிமையானது குறித்துரைக்கப்பட்ட முதிர்ச்சி நாளொன்றில் மட்டுமே மேற்கொள்ளப்பட முடியும். விருப்ப ஆர்வமானது ஐரோப்பிய விருப்பார்வம் என குறிப்பிடப்படுகிறது. அத்தகைய விருப்ப ஆர்வம் அதன் முதிர்ச்சிக்கு முன்னரான எந்த ஒரு நாளிலும் மேற்கொள்ளப்பட முடியுமாயின் இவ்விருப்பம் அமெரிக்க விருப்பார்வம் என அழைக்கப்படும்.

(உ) **வட்டிவீத விருப்பார்வம்** என்பது பொறுப்பேற்றல் பெற்றதாகவன்றி வட்டிவீதமொன்றாக இருப்பதாகும். வட்டிவீத அழைப்பு விருப்பு என்பது நிர்ணயிக்கப்பட்ட அல்லது தெரிந்த வட்டிக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு உடமையாளர்களுக்கு உரிமையை வழங்குகின்ற வேளையில் வட்டிவீத விருப்புரிமை என்பது வைத்திருப்பவருக்கு வேறுபட்ட அல்லது தெரியாத வட்டிக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கான மற்றும் நிர்ணயிக்கப்பட்டஅல்லது தெரிந்த வட்டிக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குமான உரிமைகளை வழங்குகின்றது. உதாரணமாக உச்ச வட்டி வீதமொன்றில் உடன்படிக்கையின் செல்லுபடிக் காலத்தில் தொடர்ச்சியான திகதிகளின் மீதான குறித்துரைக்கப்பட்ட வீதத்தினை பொறுப்பேற்கப்பட்ட குறுங்கால வீதங்கள் விஞ்சும் தொகையினை விற்பனையாளர் வாங்குனருக்கு இழப்பீடு வழங்குவதற்கு இணங்குகின்றார். குறைந்த வட்டி வீதமொன்றில், ஒப்பந்த காலப்பகுதியில் குறித்துரைக்கப்பட்ட வீதத்திற்கும் கீழே வீதம் வீழ்ச்சியடையும்போது விற்பனையாளர் வாங்குநருக்கு இழப்பீடு வழங்க இணங்குகின்றார். இணைப்பு என்பது கீழ்மட்ட நீண்ட (குறுகிய) உச்சவீதங்களினதும் குறுகிய (நீண்ட) வீதங்களினதும் இணைப்பொன்றாக இருந்ததுடன் வேறுபட்ட வீதக் கொடுப்பனவுகளில் திடீரென வேறுபட்டவீத கொடுப்பனவுகள் ஏற்படும்வேளையில் வட்டி வீதமொன்றில் வட்டி வீதங்கள் மாற்றமுறுகின்றன.

(ஊ) பண்ட விருப்பார்வம் நாணய விருப்பத்தினை ஒத்ததாக இருப்பதுடன் தங்கம், செம்பு மற்றும் எண்ணெய் என்பன சாத்தியமான பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களுக்கான பண்டங்களாக அடையாளம் காணப்படுகின்றன.

4. **கொடுக்கல்வாங்கல் வகைகள்**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மூன்று முக்கிய வடிவங்களில் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றார்கள்

(ஆ) வங்கிகளின் இடர்நேர்வு தோற்றத்தன்மைகளை மாற்றுவதற்கான அவற்றிற்குச் சொந்தமான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை பாதுகாக்கின்ற நோக்கத்திற்காகச் செய்யப்படும். கொடுக்கல்வாங்கல்கள் இவை **முடிவுப் பயன்படுத்துநர்** வணிகம் என அறியப்படுகின்றது.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால், அதன் வாடிக்கையாளர்களுடன் விரிவாக்கத்தினை ஏற்படுத்துகின்ற நோக்குடன், கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இக்கொடுக்கல்வாங்கல்களில் வர்த்தக வங்கிகள் அவற்றின் சொந்த ஏடுகளின் மீதும் எந்த ஒரு சந்தை இடர்நேர்வுகளிலும் ஈடுபடாததுடன் ஒன்றுக்கொன்று துணையான அடிப்படையில் அதே நாள்களுக்குரிய கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்குகிறது. இத்தகைய வணிகர் கொடுக்கல்வாங்கல்கள் சந்தையல்லா வணிகத்தினை செய்பவர் என அழைக்கப்படும்.

(இ) வாடிக்கையாளர்களுடனான பெறுதிக் வர்த்தகப்படுத்தல் பணிகளில் தொடர்புபட்டுள்ள கொடுக்கல்வாங்கல்களும் ஏனைய வாடிக்கையாளர்/ நிறுவனங்களுக்கு விலைகளைக் குறிப்பீடு செய்யுமாறு நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்படும் வேளையில் வங்கியின் சொந்த ஏடுகளும் சந்தை இடர்ப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்படுகிறது. அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் பெறுதிச் சாதன வணிகத்தினை சந்தையினை மேற்கொள்பவர் என அறியப்படும்.

5. தகைமைகளும் அனுமதிக்கத்தக்க நடவடிக்கையும்

(அ) மூலதனப் போதுமை விகிதத்தினை 11% இற்கும் கூடுதலாகக் கொண்டுள்ள வர்த்தக வங்கிகள் மட்டுமே பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட அனுமதிக்கப்பட்டுள்ளன. இம்மூலதனப்போதுமை விகிதம் பெறுதிச் சாதன நிலைமையினை உள்ளடக்கியுள்ளதுடன் மூலதனப்போதுமை விகிதத்தினை நிர்ணயிப்பதில் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனம் தொடர்பாக வங்கி மேற்பார்வைப் பணிபாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புக்கள் பின்பற்றப்பட வேண்டும்.

(ஆ) இப்பணிப்புரைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் அனுமதிக்கப்பட்ட பொறுப்பேற்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களிலிருந்து அல்லது உண்மையான ஐந்தொகை வெளிப்படுத்துகைகளிலிருந்து எழுகின்ற இடர்நேர்வு அல்லது வெளிப்படுத்தல்கள் தொடர்பாக மட்டுமே மேற்கொள்ளப்பட்டவை என்பதனை அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(இ) எந்த ஒரு சூழ்நிலையின் கீழும், இப்பணிப்புரைகளின்கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள வழிவந்த கொடுக்கல்வாங்கல்கள் எந்த ஒரு வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகை அல்லது நாணய வைப்புக்கள்/ இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் என்பனவற்றிலிருந்து எழும் இடர்நேர்வுகள் தொடர்பாக வெளிநாட்டிலுள்ள வங்கியொன்றினுடாகவோ அல்லது வெளிநாட்டுத் தொடர்பு வங்கியொன்றினூடாகவோ இலங்கையிலுள்ள அதன் வாடிக்கையாளர்களுக்கு அனுமதிக்கப்படக் கூடாது.

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாகவும் உண்மையான ஐந்தொகை வெளிப்படுத்துகையிலிருந்து தோன்றுகின்ற அத்தகைய இடர்நேர்வுகள் தொடர்பாக மட்டுமே விருப்பார்வ ஒப்பந்தங்களை வழங்க வேண்டும். இது பெறுமதிமிக்க உலோகங்களுடன் தொடர்பான முன்னோக்கிய ஒப்பந்தங்களையும் உள்ளடக்கும்.

(உ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அவர்களது வெளிநாட்டு தொடர்பு வங்கிகள் அல்லது எந்த ஒரு மற்றைய உள்நாட்டு வங்கியுடனுமான தமது இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(ஊ) சந்தையை அபிவிருத்தி செய்வது அதற்கு திரவத்தன்மையினை அதிகரிக்கும் பொருட்டு, தொடர்பான வங்கிகளின் முகாமைத்துவத்தினால் குறித்துரைக்கப்பட்டு மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட வரையறை நிலைமைகளை அதிகரிக்க அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

(எ) ஆரம்ப கட்டத்தில் வெளிநாட்டு செலாவணியில் குறித்துரைக்கப்பட்ட (இலங்கை ரூபாவுடன் தொடர்புபடாத) பெறுதிச் சாதனங்கள் மட்டுமே வர்த்தகப்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டன.

(அ) நாணய விருப்பார்வத்திற்கு பொருந்தத்தக்கவை

(i) அனைத்து சந்தையல்லா வணிகத்தினை மேற்கொள்பவர்களினதும் பெறுதிச் சந்தை வணிகத்தினை செய்பவர்களினதும் கொடுக்கல்வாங்கல்களை, ஒன்றுக்கொன்று துணையான அடிப்படையில் எந்த ஒரு திறந்த வெளிப்படுத்துகைகளையும் மேற்கொள்வது வங்கிக்கு அதிகரித்த சந்தை இடர்ப்பாடுகளைத் தோற்றுவிக்குமென்பதனால் அவர்களை அவற்றிற்கு அனுமதிக்காது அதே நாளன்று உள்ளடக்கும் தேவை காணப்படுகிறது. எனினும், பெறுதிச் சந்தை வணிகத்தைப் பொறுத்தவரை, அதன் வெளிநாட்டுச் செலாவணி நிலைமையை உள்ளடக்கும் பொருட்டு வெளிநாட்டு நாணய விருப்பார்வத்தில் வர்த்தகம் செய்ய அனுமதிக்கப்படலாம்.

(ii) அத்தகைய வெளிநாட்டு நாணய விருப்பார்வத்தினை, தேறிய வெளிநாட்டு செலாவணி வெளிப்படுத்துகை தொடர்பான அறிக்கையிடலில் தேறிய டெல்டா நிறையேற்றப்பட்ட அடிப்படையில் உள்ளடக்கப்பட வேண்டிய தேவை காணப்படுவதுடன், வங்கிக்காக குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறைக்குள்ளேயும் இருத்தல் வேண்டும்.

(iii) பெறுதிச் சந்தை மேற்கொள்பவர்கள் அத்தகைய அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் ஒன்றுக்கொன்று துணையான என்ற அடிப்படையில் உள்ளடக்குதல் வேண்டும். கொடுக்கல்வாங்கல்கள் இலங்கைக்கு வெளியேயுள்ள வங்கியொன்றினால் பன்னாட்டு ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட விருப்பார்வ செலாவணியொன்றில் அல்லது இலங்கையிலுள்ள இன்னொரு பெறுதிச் சந்தையை மேற்கொள்பவரினால் பொறுப்பேற்றுக் கொள்ளப்படலாம்.

(iv) செலவினைச் சிக்கனப்படுத்தி இடர்நேர்வினை குறைக்கின்றதொரு அமைப்பாக அல்லது பொதியொன்றாக அமைந்த ஒப்பந்தங்களாக வழங்கப்பட்ட/ வடிவமைக்கப்பட்ட விருப்பார்வ உடன்படிக்கைகள் வாடிக்கையாளர்களுக்கு வட்டங்களின் எந்த ஒரு தேறிய உட்பாய்ச்சல்களையோ அல்லது எந்த ஒரு வகையிலேனும் இடர்நேர்வுகளில் அதிகரிப்பினையோ விளைவிக்காது. வாடிக்கையாளரின் பாதுகாப்பு இனிமேல் தேவையில்லை என கருதுமிடத்து அத்தகைய பாதுகாப்புக்களை முடித்துவிடலாம் அல்லது மீண்டும் விற்றுவிடலாம்.

(v) வெளிநாட்டுச் செலாவணியில் விலைக்கோரல்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஏற்படுகின்ற வெளிப்படுத்துகைகள் அல்லது உண்மையான ஐந்தொகை வெளிப்படுத்துகையின் போது தோன்றும் அத்தகைய இடர்நேர்வுகள் போன்ற சந்தர்ப்பங்கள் நீங்கலான விருப்பார்வ ஒப்பந்தங்களை எதிர்பாரா பாதுகாப்பிற்கு அல்லது விடுவிக்கப்பட்ட வெளிப்படுத்துகைகளுக்கு பயன்படுத்த முடியாது.

(ஆ) அனைத்து பெறுதிச் சாதனங்களையும் பணிப்புரைகளின் கீழ் உள்ளடக்குவதற்காக

(i) பெயரளவிலான முதல் தொகையும் பாதுகாப்பின் முதிர்ச்சித் தன்மையும் வெளிநிற்கும் தொகையினை அத்துடன்/ அல்லது குறிக்கப்பட்ட சொத்துக்கள்/ பொறுப்புக்களின் காலாவதியாகாத முதிர்ச்சியினை விஞ்சக்கூடாது.

(ii) பெறுதிச் சந்தை வணிகத்தில் வெளிப்படுத்தல்கள் பதியப்பட்டுள்ளதா இல்லையா என்பதனைக் கவனத்தில் கொள்ளாது அத்தகைய வழிவந்த சந்தை வணிகத்தினை மேற்கொள்பவருவடனும் வாடிக்கையாளர் ஒருவர் பாதுகாப்பினை மேற்கொள்ளலாம்.

(iii) வழிவந்த சந்தை வணிகத்தினை மேற்கொள்வோர் வர்த்தகப்படுத்தல் பதிவேடுகளையும் ஐந்தொகை வெளிப்படுத்தல்களையும் பாதுகாக்கின்ற நோக்கத்திற்காக இச்சாதனங்களைப் பயன்படுத்தலாம்.

(iv) மாற்றப்படக்கூடிய அனைத்துக் கொடுப்பனவுகளும் தேறிய விகிதத்தில் தீர்க்கப்படலாம். அதாவது அத்தகைய தேறிய தீர்ப்பனவுகள் இரு தரப்பினருக்குமிடையிலான மூலஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து கொடுப்பனவு செய்யத்தக்கதும் பெறத்தக்க தொகைக்குமிடையிலான வேறுபாடு மாத்திரம் பரிமாற்றிக் கொள்ளப்படும்.

(v) கடன்தீராற்றல் இல்லாமல் போகும் சமயத்தில், இணைக்கினையாளர் கோரல் கடன் தீராற்றல் அற்றவர் மற்றும் கடன்பெறுநர் ஆகிய இருவருக்குமிடையிலான பரஸ்பர கொடுக்கல்வாங்கல்களின் தேறலுக்காக இணைக்கிணையாளரின் கோரல் வழங்கப்படுமாயின், ஒரு தரப்பினரால் கொடுபடத்தக்க தொகை மற்றைய தரப்பினரால் கொடுபடத்தக்க தொகைக்கெதிராக எதிரீடு செய்யப்பட முடியுமென்பதுடன் தேறிய மீதி கொடுக்கப்பட முடியும் அல்லது பெறப்பட முடியும்.

(vi) சந்தையல்லா வணிகத்தினை மேற்கொள்பவர்களும் பெறுதிச் சாதன சந்தை வணிகத்தினை மேற்கொள்பவர்களும் வாடிக்கையாளரிடமிருந்து அவர்களது பாதுகாப்புக்களின் மொத்தப்பெறுமதி, பாதுகாப்புச் செய்யப்பட்டிருக்கின்ற இடர்நேர்வுகளின் பெறுமதியினை விஞ்சக்கூடாது என்ற உத்தரவாதமொன்றினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(vii) நாளாந்த அடிப்படையில் சொத்துப்பட்டியலை சந்தைப் பெறுமதிப்படி மதிப்பிடுவதற்கு அவசியமான முறைகளை வங்கிகள் நடைமுறைக்கிட வேண்டும். வங்கிகள், குறிப்பிட்ட வங்கியிடையான அடிக்கடி மாறும் மதிப்பீடுகளின் நாளாந்த உருவாக்கத்தினை வெளியிடுவதற்கான SLFA உள்ளடக்க பூஜ்ஜியம், முன்னோக்கிய மற்றும் ஒன்றுக்கொன்று பரிமாற்ற வீதங்கள், போன்ற பொதுவான கைத்தொழில் விடயங்களை ஒன்று சேர்ப்பதன் மீது வங்கிகள் உடன்படலாம். இது சந்தைப் பங்கேற்பாளர்கள் அவர்களது சொத்துப்பட்டியலுக்கு சந்தைப்படியான மதிப்பிடலைப் பயன்படுத்த முடியும்.

(viii) பெறுதிக் கொடுக்கல்வாங்கல்கள் எதனையும் பொறுப்பேற்பதற்கு முன்னர் வங்கிகள் தமது அலுவலர்களுக்கு போதுமான பயிற்சியினை வழங்கி அவசியமான இடர்நேர்வு முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் செய்முறை முகாமை போன்ற இடங்களில் அவர்களைப் பணிக்கிட வேண்டும்.

2005 ஏப்பிறல் 21

34/07/029/0001/001

சுற்றறிக்கை எண் ஆர்ரிஜிஎஸ்/03/2005

*லங்கா செட்டில் முறையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

**லங்காசெட்டில் முதன்மை தலத்திலுள்ள நேரடி சிஏஎஸ்/சிஎஸ்எஸ்/ வெப்தள கணனி சேமிப்பு பிரயோகங்கள்/ தரவுத் தளங்கள் என்பனவற்றைத் தரமுயர்த்துதல்**

நேரடி சிஏஎஸ்/வெப்தள கணனி சேமிப்பு பிரயோகங்கள்/ தரவுத்தளங்கள் என புதிய பதிப்பு வடிவங்கள் லங்கா செட்டில் முதன்மைத் தலத்தில் 2005 ஏப்பிறல் 30 ஆம் நாள் சனிக்கிழமை நிறுவப்படவுள்ளமை பற்றியும் நேரடி சிஏஎஸ்/சிஎஸ்எல் முறைகளுடன் புதிய பதிப்பு படிவங்களை பரீட்சிக்கின்ற வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்காக 2005 மே 2 ஆம் நாளன்று லங்கா செட்டில் நேரடி முறை திறக்கப்படவுள்ளமை பற்றியும் தங்களுக்கு அறிவித்துக் கொள்கிறோம். லங்கா செட்டில் முறை மேற்குறிப்பிட்ட திகதியில் எந்த ஒரு செல்லுபடியாகும் கொடுக்கல் வாங்கல்களுக்காகவும் திறக்கப்பட மாட்டாது என்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தினால் குறித்துரைக்கப்பட்ட பரீட்சார்த்த கொடுக்கல்வாங்கல்களுக்கு மட்டுமே திறந்திருக்கும். 2005 ஏப்பிறல் 29 ஆம் நாளன்று வியாபாரம் முடிவடைகையில் சிஏஎஸ் மற்றும் சிஎஸ்எல் தரவுத் தளங்களில் எஞ்சியிருக்கின்ற ஏதாவது முன்னோக்கிய திகதியிடப்பட்ட தீர்ப்பனவு அறிவுறுத்தல்கள் லங்கா செட்டில் முறையிலிருந்து தீர்ப்பனவு செய்யப்படுவதுடன் 2005 மே 2 ஆம் நாளினை பெறுமதித் திகதியாகக் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு செய்தியும் தீர்ப்பனவிற்கான செல்லுபடியாகும் கொடுக்கல்வாங்கல்களாகக் கருதப்படமாட்டா.

ஆகவே நீங்கள் பின்வரும் விடயங்களைக் கவனிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

(i) 2005 ஏப்பிறல் 29 ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைக்கு முற் திகதியிடப்பட்ட தீர்ப்பனவு அறிவுறுத்தல்கள் எதனையும் அனுப்பவேண்டாம் எனவும்; அத்துடன்

(ii) 2005 மே 2 ஆம் நாளினை பெறுமதித் திகதியாகக் கொண்ட லங்கா செட்டிலுடன் தொடர்பான அனைத்து சுவிப்ற் செய்திகளையும் கவனிக்காதுவிடவும்.

**சி. பிரேமரத்ன**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**கே. ஆர். எம். சிறிவர்த்தன**
பணிப்பாளர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

2005 யூலை 29

34/07/029/0001/001

சுற்றறிக்கை எண் ஆர்ரிஜிஎஸ்/04/2005

*லங்கா செட்டில் முறையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

## லங்காசெட்டில் முறையின் ஒரு பங்கேற்பாளராக வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கியினை நியமித்தல்

நாணயச்சபை, வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கிக்கு வர்த்தக வங்கித்தொழில் உரிமத்தினை வழங்குவதற்கு ஒப்புதலளித்திருக்கின்றது. வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி என்டிபி வங்கி லிமிட்டெட்டின் வியாபாரத்தினைக் கையேற்பதற்கும் அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. என்டிபி வங்கி லிமிட்டெட் அத்தகைய கையேற்பு 2005 ஓகத்து 1 ஆம் நாளிலிலிருந்து இடம்பெறும் என எமக்கு அறிவித்திருக்கிறது. இதன்படி, 2005 ஓகத்து 1 ஆம் நாளிலிருந்து லங்கா செட்டிலின் ஒழுங்குகள் பின்வருமாறு இருக்கும்.

வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கியானது லங்கா செட்டில் முறையின் வணிகர் நேரடிப் பங்கேற்பாளராகவுள்ளதுடன் தற்பொழுது என்டிபி வங்கி லிமிட்டெட் வசமுள்ள வாடிக்கையாளர் கணக்குகள் வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கியினால் வைத்திருக்கப்படும். சுவிப்ற் பயன்படுத்துனர் அடையாளக் குறியீடும் அ.நே.மொ.தீ.முறை தீர்ப்பனவுக் கணக்கு இலக்கமும் பின்வருமாறு இருக்கும்.

சுவிப்ற் பயன்படுத்துநர் அடையாளக்குறியீடு: NDBSLKLX

அ.நே.மொ.தீ.முறை தீர்ப்பனவுக் கணக்கு: NDBSLKLXXXX010004416

வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கியின் தொடர்பு விபரங்கள் பின்வருமாறு இருக்கும்;

முதன்மை நிறைவேற்று அலுவலர் திரு.என்.எஸ். வெலிக்கல

தொலைபேசி - 2448889

தொலைநகல் -2440262

மின்அஞ்சல் -nihalwelikala@ndb.org

2005 ஓகத்து 1 ஆம் நாளிலிருந்து என்டிபிவங்கி லிமிட்டெட் லங்கா செட்டில் முறையின் பங்கேற்பாளராகத் தொழிற்படுவதனை நிறுத்திக் கொள்ளும்.

லங்காசெட்டில் முறையின் நிலையான தளம் 2005 ஓகத்து 1 ஆம் நாளிலிருந்து கீழே எடுத்துக்காட்டப்பட்டவாறு மாற்றமடையும்.

(i) லங்கா செட்டில் முறையிலுள்ள பங்கேற்கும் நிறுவனமான என்டிபி வங்கி லிமிட்டெட்டின் பெயர் வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி என மாற்றமடையும்; அத்துடன்

(ii) லங்காசெட்டில் முறையிலுள்ள கணக்குப் பெயரான என்டிபி வங்கி லிமிட்டெட்டின் தீர்ப்பனவுக் கணக்கு வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி செட்டில் கணக்கு என மாற்றமடைகின்றது.

**சி. பிரேமரத்ன**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**ஜே.ஆர்.எம். சிறிவர்த்தன**
பணிப்பாளர்/கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்

*2005 செத்தெம்பர் 28*

34/07/029/0001/001

சுற்றறிக்கை எண் ஆர்ரிஜிஎஸ்/ 05/2005

*லங்கா செட்டில் முறையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் தேறிய தீர்ப்பனவுக் கடப்பாடுகளின் தீர்ப்பனவிற்காக அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையின் தீர்ப்பனவுக் கணக்குகளில் போதியளவு நிதியினைப் பேணத்தவறுமிடத்து செலுத்தத்தவறியமைக்கான கட்டணத்தினை விதித்தல்.**

வங்கி முகாமையாளர்களின் 2005 யூலை 28 ஆம் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தல் மற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் தேறிய தீர்ப்பனவு முறையின் தீர்ப்பனவுக் கணக்குகளில், லங்காசெட்டில் முறையின் முறைமை விதிகளின் படியான குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் போதியளவு நிதியினை பேணத்தவறுமிடத்து செலுத்தத்தவறியமைக்கான கட்டணத்தினை விதித்தல் தொடர்பான கருத்துக்களையும் அவதானிப்புக்களையும் கோருகின்ற விதத்தில் 2005 ஓகத்து 17 ஆம் நாளன்று இலங்கை வங்கியாளர் சங்கத்தின் செயலாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக.

இலங்கை வங்கியாளர் சங்கத்திலிருந்து பெறப்பட்ட கருத்துக்களைப் பரிசீலனையில் கொண்ட இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை மேலே குறிப்பிடப்பட்ட கூட்டத்தில் மேற்கொண்ட அறிவித்தலுக்கேற்றவாறு லங்காசெட்டில் முறையின் விதிகளுக்கான திருத்தங்களை அறிவித்தது.

இதன்படி 2003 ஓகத்தில் விடுக்கப்பட்ட லங்காசெட்டில் முறையின் தொகுதி 2 இன் கிளைவாசகம் 8.3 2005 ஒத்தோபர் 1 ஆம் நாளிலிருந்து இணைப்பு 1 இல் உள்ளவாறு திருத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஜே.ஆர்.எம். சிறிவர்த்தன**

பணிப்பாளர்/கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

விதி 8.3இற்கான திருத்தம்

## போதுமான நிதியில்லாமையினால் தீர்ப்பனவு தொகுதியினை இடைநிறுத்துதல் அல்லது தவறுதல்

பங்கேற்பாளர்கள், தேறிய தீர்ப்பனவுத் தொகுதியினை உடனடியாக செய்முறைப்படுத்துவதனை அனுமதிப்பதற்கு தமது தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதி கிடைக்கத்தக்கதாகவுள்ளது என்பதனை கட்டாயமாக உறுதிப்படுத்துதல் வேண்டும். எந்த ஒருவரினதும் அல்லது கூடுதலான பங்கேற்பாளர்களினதும் வசமுள்ள தேறிய பற்றுத் தீர்ப்பனவு எண்தொகை, மேற்கொள்ளப்படவுள்ள பற்றுக்களை அனுமதிக்கின்ற அளவிற்கு அதன் தீர்ப்பனவுக் கணக்கில் போதியளவு நிதியினைக் கொண்டிருக்காத சந்தர்ப்பத்தில், முழுத் தொகுதியும் இடைநிறுத்தப்படும். மேற்கொள்ளப்படவுள்ள பற்றுக்களை அனுமதிக்கின்ற அளவிற்கு அனைத்துப் பங்காளர்கள் வசமுள்ள தேறிய பற்றுத் தீர்ப்பனவு எண்தொகை போதுமான நிதியியனைக் கொண்டிருந்தாலொழிய தேறிய தீர்ப்பனவுத் தொகுதியில் பற்றுக்களோ அல்லது வரவுகளோ செய்யப்படமாட்டாது. தேறிய தீர்ப்பனவுத் தொகுதியில் அறிவுறுத்தலானது முறைக்குள் நுழைந்ததுடன் பங்கேற்பானர் தீர்ப்பனவுக் கணக்கொன்றில் பங்கேற்பாளர் தேறிய பற்றுத் தீர்ப்பனவு எண்தொகை வரையிலான தொகையினால் நிதியத்தினைக் குறிப்பதற்கும் தொகுதி தீர்ப்பனவு மேற்கொள்ளப்படும்வரை அத்தகைய கணக்கில் பற்று வைப்பதற்கான செயல்முறை அறிவுறுத்தல்களைத் தடுத்து வைத்திருப்பதற்கும் மத்திய வங்கி உரிமையினைக் கொண்டுள்ளது.

எனினும், தேறிய தீர்ப்பனவு தொகுதியின் செய்முறைப்படுத்தலுக்காக, அத்தகைய தீர்ப்பனவுகள் மேற்கொள்ளப்படும்வரை நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணைப்படுத்தலில் குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் பங்கேற்பாளர்களின் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமானநிதி கிடைக்கத்தக்கதாகவுள்ளதென்பதனை உறுதிப்படுத்துவது ஒவ்வொரு பங்கேற்பாளர்களினதும் பொறுப்பாகும். செய்யப்படவுள்ளவற்றினை அனுமதிப்பதற்கு தேறிய பற்று தீர்ப்பனவு எண்தொகையுடன் பங்கேற்பாளர்களின் தீர்ப்பனவுக் கணக்கில் போதியளவு நிதியம் கிடைக்கத்தக்கதாக இல்லாதுவிடின் பின்வரும் விதத்தில் செலுத்தத்தவறுகைக்கான விதிப்பனவை செலுத்துவதற்கு அவர் பொறுப்புடையவராவர்.

ரூ.100,000, முதல் ஒரு மணித்தியாலத்திற்கு அல்லது அதன் எந்த ஒரு பகுதிக்கு

ரூ.100,000, அடுத்த ஒரு மணித்தியாலத்திற்கு அல்லது அதன் எந்த ஒரு பகுதிக்கும்

மேலதிகமாக ரூ.500,000, போதுமானதற்ற நிதி இரண்டு மணித்தியாலங்களுக்கும் கூடுதலாக இருந்தால்.

செலுத்தத் தவறிய கட்டணமானது தீர்ப்பனவுத் தொகுதி தீர்ப்பனவிற்காக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைக்கு முதற்தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட நேரத்திலிருந்து தொகுதி தீர்ப்பனவு செய்யப்படும் நேரம் வரை விதிக்கப்படும். எனினும், செலுத்தத் தவறிய பங்கேற்பாளர்கள், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைகளின் மீது வரவேண்டிய மற்றைய கொடுப்பனவுக் கடப்பாடுகளை ஈடுசெய்வதற்கு மேலதிகமாக, உண்மையான தீர்ப்பனவு மற்றும் அத்தகைய நிதிகளைப் பேணுவதற்கு முன்னர் அவரின் தவறிய கொடுப்பனவுக் கடப்பாடுகளை ஈடு செய்வதற்காக போதுமான நிதியினை அவரின் தீர்ப்பனவுக் கணக்குக்குள் செலுத்துவாராயின் செலுத்தத் தவறிய கட்டணம் தீர்ப்பனவுக் கணக்கிற்கு அத்தகைய நிதி செலுத்தப்பட்ட நேரம்வரை மட்டுமே அற விடப்படும்.

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் மீதான ஏனைய அட்டவணையிடப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளுக்கு உள்பட்டு, தவறுகையின் பின்னர் எந்தவொரு நேரத்திலும் மத்திய வங்கி தவறிய தேறிய தீர்ப்பனவுத் தொகுதியின் விசாரணைகளை தொடங்கலாம்.

செலுத்தத் தவறிய வியாபார நாளுக்கு அடுத்த வேலைநாளன்று செலுத்தத் தவறியமைக்கான கட்டணம் தீர்ப்பனவுக் கணக்கிலிருந்து கழிக்கப்பட்டு மத்திய வங்கியின் கணக்கில் வரவு வைக்கப்படும் அவ்வாறு வரவு வைக்கப்பட்ட ஒவ்வொரு செலுத்தத் தவறிய கட்டணத்திலும் பத்து சதவீதம் (10%.) நிருவாகக் கட்டணமாக மத்திய வங்கியினால் கழிக்கப்படுவதுடன் மீதி வங்கியாளர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காகப் பயன்படுத்துவதற்கு வழங்கப்படுவதுடன் அத்தகைய நோக்கங்களுக்கு வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கியாளர் சங்கம்

(உத்தரவாதம்) விபரமான முறையில் மத்திய வங்கிக்கு செய்யும் விண்ணப்பங்களின் பேரில் அத்தகைய நோக்கங்களுக்கும் வழங்கப்படும்.

பங்கேற்பாளர் ஒருவர் ஒரு ஆண்டுக்காலப் பகுதியில் ஒரு தடவைக்குக் கூடுதலாக செலுத்தத் தவறியிருப்பின் மற்றைய பங்கேற்பாளர்கள் மீது அத்தகைய தேவைப்பாடுகள் உண்மையில் விதிக்கப்படாதிருப்பினும்கூட, குறிப்பிட்ட நேரத்தில் தீர்வக நிலுவைகளை தீர்ப்பனவு செய்யும் நோக்கத்திற்காக, அத்தகைய பங்கேற்பாளர்கள் அதன் அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கணக்கில் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த நிலுவையினை பேண வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

போதுமான நிதி இல்லாமையின் விளைவாக, தேறிய தீர்ப்பனவு தொகுதி இடைநிறுத்தப்படும் சந்தர்ப்பத்தில் மத்திய வங்கி தொடர்பு கொள்ளக்கூடிய விதத்தில் ஒவ்வொரு பங்கேற்பாளர்களும் மூத்த அலுவலர் ஒருவரை நியமித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கப்பட்டதும் பங்கேற்பாளர் தீர்ப்பனவு பூர்த்தி செய்யப்படுவதனை இயலச் செய்யும் விதத்தில் அதன் தீர்ப்பனவுக் கணக்கிற்கு நிதியினை இடுவதற்கு உடனடியாக ஒழுங்குகளைச் செய்ய வேண்டும். எனினும், நிதி போதாமைபற்றி பங்கேற்பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டிய கடப்பாடு மத்திய வங்கிக்கு இல்லையாகையால் பங்கேற்பாளர் தமது தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியினைப் பேணுவதனை உறுதிப்படுத்திக் கொள்வது அவரின் முழுப் பொறுப்பாகும்.

தேறிய தீர்ப்பனவுக் தொகுதி, வியாபாரம் முடிவடைகையிலும்கூட இடைநிறுத்தப்பட்டிருக்குமாயின், தொகுதியிலுள்ள அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் இடைநிறுத்தப்படும்.

செலுத்தத் தவறியமைக்காக விதிக்கப்பட்ட எந்தக் கட்டணமும் மத்திய வங்கியினால் அல்லது எந்த ஒரு பங்கேற்பாளரினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையின் பதிலீடாக வலுக்குறைப்பாக அல்லது விலக்கலாகவோ மத்திய வங்கி அல்லது பங்கேற்பாளர் எந்த ஒரு உரிமை அல்லது கோரலைக் கொண்டதாகவோ தேறிய தீர்ப்பனவுத் தொகுதியிலுள்ள கடப்பாடுகளைத் தீர்ப்பதற்கு தவறுகின்ற எந்தவொரு பங்கேற்பாளரிடமிருந்தும் உருவாகின்றவை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவோ அல்லது நடவடிக்கை எடுக்கவோ முடியாது.

தொகுதி 2

*2005 செத்தெம்பர் 30*

34/07/029/0001/001

சுற்றறிக்கை எண் ஆர்ரிஜிஎஸ் /07/2005

*லங்கா செட்டில் முறையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

**வரையறுக்கப்பட்ட முஸ்லீம் வர்த்தக வங்கியின் பெயரை மாற்றுதல்**

வரையறுக்கப்பட்ட முஸ்லீம் வர்த்தக வங்கி அதன் பெயரை எம்சிபீ வங்கி லிமிட்டெட் என மாற்றியிருப்பதனால் லங்கா செட்டில் முறையின் நிலையான தரவு 2005 ஒத்தோபர் 1 ஆம் நாளிலிருந்து கீழே எடுத்துக்காட்டப்பட்டவாறு மாற்றமடையும்.

(i) வரையறுக்கப்பட்ட முஸ்லீம் வர்த்தக வங்கி என்ற பங்கேற்பாளரின் பெயர் எம்சிபீ வங்கி லிமிட்டெட் என மாற்றப்படுகிறது. அத்துடன்

(ii) லங்காசெட்டில் முறையிலுள்ள வரையறுக்கப்பட்ட முஸ்லீம் வர்த்தக வங்கியின் கணக்குப் பெயர் முஸ்லீம் வர்த்தக வங்கி தீர்ப்பனவுக் கணக்கு என்பதிலிருந்து எம்சிபீ வங்கி லிமிட்டெட் தீர்ப்பனவுக் கணக்கு என மாற்றமுறுகின்றது.

வங்கியின் சுவிப்ற் பிஜசி மாற்றமின்றியிருக்கும்.

**சி. பிரேமரத்ன**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**ஜே.ஆர்.எம். சிறிவர்த்தன**
பணிப்பாளர்/ கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

பொதுப்படுகடன் திணைக்களம்

*2005 சனவரி 18*

தொடர்பு 08/24/002/0001/005

*முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்*

**முதனிலை வணிகர்களின் ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளை அதிகரிப்பதன் மீதான பணிப்புரை**

இப்பணிப்புரையானது, பதியப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ், நிதியமைச்சரினால் விடுக்கப்பட்ட 2002 ஏப்பிறல் 1 ஆம் நாளிடப்பட்ட ஒழுங்குவிதியின் 12 ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க விடுக்கப்பட்டது.

ஆகக்குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளின் மீது 2003 நவெம்பர் 28 ஆம் நாள் விடுக்கப்பட்ட பணிப்புரையின் நியதிகளுக்கிணங்க, முதனிலை வணிகர்கள், 2004 திசெம்பர் 31 ஆம் நாளுக்கு முன்னர் ஆகக் குறைந்த மூலதனமாக ரூ.350 மில்லியனைப் பேணவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டனர். எனினும், சில முதனிலை வணிகர்கள் 2004 திசெம்பர் 31 ஆம் நாளன்று இத்தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய முடியாதவர்களாக இருந்தனர். இச்சூழ்நிலையினையும் நடைமுறைச்சந்தை நிலைமைகளையும் பரிசீலனையில் கொண்டு தீர்மானித்த நாணயச்சபை முதனிலை வணிகர்கள் நிறைவேற்ற வேண்டிய ரூ.350 மில்லியன் கொண்ட ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாட்டாளர் முடிவுத்திகதியினை 2004 திசெம்பர் 31 ஆம் நாளிலிருந்து 2005 யூலை 1 ஆம் நாள் வரை நீடிக்கத் தீர்மானித்தது.

2004 திசெம்பர் 31 ஆம் நாளிலிருந்து 2005 யூலை 1 ஆம் நாள் வரையான காலப்பகுதியில் இலாபங்களை பங்கிலாபங்களாக பிரகடனப்படுத்த விரும்பும் எந்த ஒரு முதனிலை வணிகரும் அவ்வாறு செய்வதற்கு மத்திய வங்கியின் முன் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளை நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

**முனைவர் இடபிள்யூ.எம். ஹேமச்சந்திரா**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்
2005 ஏப்பிறல் 18

தொடர்பு எண் 08/24/002/0005/005

*முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

**ஆகக்குறைந்த மூலதனத் தேவைப்பாடுகளை அதிகரித்தல், பங்கிலாபம் பகிர்ந்தளிப்பு மற்றும் முதனிலை வணிகர்களின் அடுக்கு II மூலதனத்தைப் பேணல் என்பன மீதான பணிப்புரை**

இப்பணிப்புரையானது பதிவு செய்யப்பட்ட பங்குகள் பிணையங்கள் கட்டளைச்சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டம் என்பனவற்றின் கீழ் நிதியமைச்சரினால் வழங்கப்பட்ட 2002 பெப்புருவரி 1 ஆம் திகதியிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் 12 ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க விடுக்கப்படுகிறது.

1. முதனிலை வணிகர்கள் ஆகக்குறைந்த மூலதனத்தினைப் பொறுத்தவரையில் 2003 நவெம்பர் 28 ஆம் திகதி மற்றும் 2005 சனவரி 18 ஆம் திகதிய இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரை களில் குறிப்பிடப்பட்டவாறு ரூ.350 மில்லியன்களுக்குப் பதிலாக

   (அ) தற்போதுள்ள ரூ.200 மில்லியனை 2005 யூலை 1 ஆம் நாளிலிருந்து ரூ.250 மில்லியனுக்கும்.

   (ஆ) ரூ.250 மில்லியனை 2006 யூலை 1 ஆம் நாளிலிருந்து ரூ.300 மில்லியனுக்கும்.

   அதிகரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

2. ரூ.250 மில்லியன்-ரூ.300 மில்லியனுக்குமிடையில் மூலதனத்தினைப் பேணும் முதனிலை வணிகர்கள் 2005 யூலை 1 ஆம் நாளிலிருந்து 25% இலாபத்தினை பங்கிலாகமாகப் பிரகடனப்படுத்த அனுமதிக்கப்பட்டனர்.

3. ரூ.300 மில்லியனுக்கு மேலான மூலதனத்தினைப் பேணும் முதனிலை வணிகர்கள் 2005 யூலை 1 ஆம் நாள் தொடக்கம் வருடாந்த இலாபத்தில் 25% இனை சிறப்பு ஒதுக்கத்திற்கு ஒதுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். 2003 நவெம்பர் 28 ஆம் நாளின்று விடுக்கப்பட்ட சிறப்பு இடர்நேர்வு ஒதுக்குகள் மீதான பணிப்புரை 2005 யூன் 30 ஆம் நாளின் பின்னர் காலாவதியாகும்.

4. முதனிலை வணிகர்கள் 2005 யூலை 1 ஆம் நாள் வரை அடுக்கு I மூலதனத்தில் ஆகக்கூடியது 50% இனை அடுக்கு II மூலதனமாகப் பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

5. முதனிலை வணிகர்கள், 2006 யூலை 1 ஆம் நாளிலிருந்து இடர்நேர்வு நிறைவேற்றப்பட்ட மூலதனப்போதுமைச் கட்டமைப்பினை ரூ.300 மில்லியன் கொண்ட ஆகக்குறைந்த மூலதனத் தேவைப்பாட்டுடன் நடைமுறைக்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஒப்பம்

பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்
2005 செத்தெம்பர் 30

08/25/001/0034/001

**சுற்றறிக்கை எண் எஸ்எஸ்எஸ்எஸ்/01/2005**

*லங்கா செட்டில் முறையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்*

## 2003 ஒகத்தில் லங்காசெட்டில் முறையின் ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம்

2003 ஒகத்தில் வெளியிடப்பட்ட லங்காசெட்டில் முறை ஒழுங்குவிதிகளின் தொகுதி 3 இன் கிளைவாசகம் 5.8 இன் முதல் பந்தி 2005 ஒத்தோபர் 1 ஆம் நாளிலிருந்து பின்வருமாறு வாசிக்கப்படும் விதத்தில் திருத்தப் படுகிறது என்று இத்தால் உங்களுக்கு அறியத்தரப்படுகிறது.

"லங்காசெகுயர் எதிர்கால பெறுமதித் திகதிகளில் தீர்ப்பனவு செய்வதற்காக பிணையங்கள் அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்வதுடன் அத்தகைய பெறுமதித் திகதி வரை அத்தகைய அறிவுறுத்தல்களைக் களஞ்சியப்படுத்தியும் வைக்கும். நடைமுறைத் திகதியிலிருந்து முன்கூட்டிய 31 கலண்டர் நாட்கள் வரைக்கான பிணையங்கள அறிவுறுத்தல்கள் முறை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் 31 கலண்டர் நாட்களுக்குக் கூடுதலான முன்கூட்டிய எதிர்கால பெறுமதித் திகதிகளுடன் கூடிய பிணையங்களின் அறிவுறுத்தல்கள் நிராகரிக்கப்படும்."

இதன்படி, லங்காசெட்டில் முறையின் ஒழுங்குவிதிகளின் தொகுதி 3 இன் கிளைவாசகம் 03.08.2005 ஒத்தோபர் 1 ஆம் நாளிலிருந்து பின்வருமாறு வாசிக்கப்படும்.

**5.8 முன் திகதியிடப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்**

லங்கா செகுயர் எதிர்கால பெறுமதித் திகதிகளில் தீர்ப்பனவு செய்வதற்காக பிணையங்கள் அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்வதுடன் அத்தகைய பெறுமதித் திகதிவரை அத்தகைய அறிவுறுத்தல்களைக் களஞ்சியப்படுத்தியும் வைக்கும். நடைமுறைத் திகதியிலிருந்து முன்கூட்டிய 31 கலண்டர் நாட்கள் வரைக்கான பிணையங்கள் அறிவுறுத்தல்கள் முறை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் 31 கலண்டர் நாட்களுக்கும் கூடுதலான முன்கூட்டிய எதிர்கால பெறுமதித் திகதிகளுடன் கூடிய பிணையங்களின் அறிவுறுத்தல்கள் நிராகரிக்கப்படும்.

பெறுமதித் திகதியினைக் கொண்டுள்ள பிணையங்களின் அறிவுறுத்தல்களை லங்கா செகுயர் பெறும்பொழுது பெறுமதித் திகதி ஏற்கனவே முடிவடைந்திருப்பின் அவை நிராகரிக்கப்படும்.

ஒவ்வொரு வியாபார நாள் தொடங்குகையிலும் லங்காசெகுயர் செல்லுபடியாகும் பெறுதித் திகதியினை கொண்டுள்ள களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு பிணையங்கள் அறிவுறுத்தலையும் பரிசோதிக்கிறது. களஞ்சியப்படுத்தப்பட்ட பிணையங்கள் அறிவுறுத்தல் கொண்டிருக்கும் பெறுமதித் திகதி ஏற்கனவே கடந்திருக்குமாயின் அவை நிராகரிக்கப்படும்.

வியாபார நாள் "இரத்துச் செய்யப்படும்" சந்தர்ப்பங்களில் அதாவது உரிய நாளன்று மத்திய வங்கி வியாபார நடவடிக்கைளுக்காக திறக்கப்படாத அசாதாரண சூழ்நிலைகளில் பெறுமதித் திகதிக்காக களஞ்சியப்படுத்தி வைத்திருந்த பிணையங்கள் அறிவுறுத்தல்களை இரத்துச்செய்வது அல்லது நிராகரிப்பதனைத் தொடர்ந்து புதிய பெறுமதித் திகதிகளுடன் மீண்டும் அனுப்பிவைப்பது பங்கேற்பாளர்களின் பொறுப்பாகும்.

**சி. பிரேமரத்ன**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**ஜே.ஆர்.எம். சிறிவர்த்தன**
கொடுப்பனவு தீர்ப்பனவுப் பணிப்பாளர்

## 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

*1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்படும் பணிப்பு.*

சுனில் மென்டிஸ்

தவிசாளர்

இலங்கை மத்திய வங்கியின்

நாணயச்சபை

கொழும்பு

*2005 சனவரி 31 ஆந் திகதி*

1. இப்பணிப்பு 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்பு என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையதாதலும், உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. நிதிக்கம்பனியொன்று கோரப்படுவதன் மீது மீளச்செலுத்தற்படற்பாலதான அல்லது ஏதேனும் வைப்புப் பெறப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குக் குறைவானதும் அத்தகைய வைப்புப் பெறப்பட்ட திகதியிலிருந்து அறுபது மாதங்களுக்கு மேற்படுவதுமான ஒரு காலப்பகுதிக்கு பின்னர் மீளச்செலுத்தப்படற்பாலதான அத்தகைய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதலாகாது அல்லது அவ்வாறு புதுப்பிக்கப்படும் அத்தகைய வைப்பு, அத்தகைய புதுப்பித்தல் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்கு முந்தாமலும் அறுபது மாதங்களுக்குப் பிந்தாமலும் மீளச்செலுத்தப்படற்பாலதாய் இருந்தாலொழிய அதனாற் பெறப்பட்ட ஏதேனும் தவணை வைப்பைப் புதுப்பித்தலாகாது. எவ்வாறெனினும், நிதிக்கம்பனி யொன்றான இப்பணிப்புரைகள் 2001 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வைப்புக்கள்- ஊக்குவிப்புத் திட்டங்கள்) பணிப்புரை, 2003 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (மூலதன நிதியம்) பணிப்புரை 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வட்டி) பணிப்புரை, 2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரை, மற்றும் 2001 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (விளம்பரங்கள்) ஒழுங்குவிதி ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக்கொள்ளலாம்.

3. (i) நிதிக்கம்பனி ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலையான வைப்புக்கும் ஒரு சான்றிதழை எல்லா வைப்பாளர்களுக்கும் வெவ்வேறாக வழங்குதல் வேண்டும். அந்தப்பத்திரம் எல்லாத் தேவைகளுக்கும் நிதிக்கம்பனியினால் குறிப்பிட்ட தொகைப் பணத்தினை பெற்றுக்கொண்டதற்கான பற்றுச்சீட்டாகக் கருதப்படும். தவணை வைப்புக்களைப் புதுப்பித்தலைப் பொறுத்த வரையில் புதுப்பித்தல் தொடர்பான அறவித்தலை உரிய வைப்பாளர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

(ii) அத்தகைய ஒவ்வொரு சான்றிதழும் அல்லது புதுப்பித்தலுக்கான அறிவித்தலும் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல்/புதுப்பித்தல் நோக்கங்களுக்காக, நிதிக்கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அதிகாரமளிக்கப்பட்டவர்களான இரு அதிகாரிகளினால் கையொப்பமிடப்பட்டதாகவும் அத்தகைய பற்றுச்சீட்டுக்கள்/புதுப்பித்தல் அறிவித்தல்களின் வெளியீடு பின்வரும் தகவல்களை தெளிவாகக் குறித்துக் காட்டுவதாகவும் இருத்தல் வேண்டும:-

(அ) பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனியின் பெயரும் முகவரியும்;

(ஆ) வைப்புச் செய்யப்பட்ட/ வைப்புப் புதுப்பிக்கப்பட்ட திகதி;

(இ) வைப்பாளரின் பெயரும் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு இலக்கமும் முகவரியும்;

(ஈ) வைப்பு என்ற வகையில் அல்லது வைப்புக்களின் புதுப்பித்தல் என்ற வகையில் நிதிக்கம்பனியினால் பெறப்பட்ட பணத்தொகை சொற்களிலும் எண்களிலும்;

(உ) கொடுபடத்தக்க ஆண்டு வட்டி வீதமும் கொடுப்பனவு அடிப்படையும் (மாதாந்தம் அல்லது முதிர்ச்சியில்);

(ஊ) வைப்பு மீளச்செலுத்தப்படற்பாலதான திகதி;

(எ) பற்றுச்சீட்டு/புதுப்பித்தலுக்கான அறிவித்தலில் கையொப்பமிட்ட அலுவலர்களின் பெயர்கள்;

(ஏ) சான்றிதழின் தொடர் இலக்கம்;

(ஐ) வைப்பின் கணக்கு இலக்கம்;

4. ஒவ்வொரு நிதிக்கம்பனியும் ஒவ்வொரு தவணை வைப்புத் தொடர்பாகவும் பின்வரும் விபரங்களைக் கொண்ட பதிவேடு ஒன்றினைப் பேணவேண்டும்.

(அ) கணக்கு இலக்கம்;

(ஆ) ஒவ்வொரு வைப்பாளரினதும் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டின் இலக்கமும்;

(இ) அத்தகைய வைப்பின் முதல் தொகை;

(ஈ) வைப்புத் திகதி/ புதுப்பித்தல் திகதி;

(உ) ஒவ்வொரு வைப்பினதும் காலமும் முதிர்ச்சியும்;

(ஊ) வட்டி வீதமும் வட்டிக் கொடுப்பனவிற்கான அடிப்படையும் (மாதாந்தம் அல்லது முதிர்ச்சியில்);

(எ) திரண்ட வட்டித் தொகை (ஏதுமிருப்பின்)

(ஏ) ஒவ்வொரு கொடுப்பனவினதும் திகதியும் தொகையும் (முதல் அல்லது வட்டி);

(ஐ) சான்றிதழின் தொடர் இலக்கம்;

5. ஒவ்வொரு நிதிக்கம்பனியும் சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக்கொள்ளும்பொழுது, சேமிப்புக் கணக்குகளின் தொழிற்பாடுகளை நிருவகிக்கின்ற நியதிகளை உள்ளடங்கிய மும்மொழிகளில் அமைந்த ஆவணமொன்றினையும் சேமிப்புப் புத்தகத்தையும் அல்லது பணிப்பாளரினால் ஏற்றுக்கொள்ளத்தக்க வேறு அத்தகைய ஆவணங்களையும் கணக்குகளின் தொழிற்பாடுகளைப் பதிவு செய்வதற்காக பின்வருவன உள்ளிட்ட விபரங்களையும் வழங்குதல் வேண்டும்.

(அ) நிதிக்கம்பனியின் பதிவு செய்யப்பட்ட பெயரும் முகவரியும்;

(ஆ) கிளையின் பெயர்;

(இ) கணக்கு வைத்திருப்பரின் பெயர், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி; அத்துடன்

(ஈ) கணக்கு இலக்கம்;

6. ஒவ்வொரு நிதிக்கம்பனியும் ஒவ்வொரு சேமிப்பு வைப்புக்கள் தொடர்பாகவும் பின்வரும் விபரங்களைப் பதிவு செய்து பேணிவருதல் வேண்டும்.

(அ) கணக்கு வைத்திருப்பவரின் பெயர், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி

(ஆ) கணக்கு இலக்கம்

(இ) சேமிப்பு கணக்கில் செய்யப்பட்ட ஒவ்வொரு பற்று மற்றும் வரவின் திகதி, தொகை மற்றும் விபரங்கள்; அத்துடன்

(ஈ) எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் வெளிநின்றநிலுவை

7. ஒவ்வொரு நிதிக்கம்பனியும் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த மூன்று மாதங்களுக்குள், மீள்கொடுப்பனவிற்கான அல்லது புதுப்பித்தலுக்கான திகதியை அடைந்த, ஆனால் அத்திகதியின் பின் நிதிக்கம்பனியினால் மீளச்செலுத்தப்படாத/புதுப்பிக்கப்படாத ஒவ்வொரு தவணை வைப்புக்கள் எதுவாக இருப்பினும் அவை தொடர்பான பின்வரும் விபரங்களை அத்தகைய நிதியாண்டின் இறுதியிலுள்ளவாறு பணிப்பாளருக்கு வழங்குதல் வேண்டும்.

(அ) வைப்பாளரின் பெயர் மற்றும் முகவரி

(ஆ) வைப்புத் தொகை

(இ) திரண்ட வட்டித் தொகை

(ஈ) வைப்பாளரிடமிருந்து அல்லது அவரின்/ அவளின் சட்டரீதியான பிரதிநிதியிடமிருந்து இறுதியாகக் கிடைத்த தொடர்புக் கடிதம்; அத்துடன்

(உ) வைப்பு மற்றும் அதன் திரண்ட வட்டித் தொகையினை மீள்கொடுப்பனவு செய்வதற்காக நிதிக்கம்பனியினால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கை.

8. ஒவ்வொரு நிதிக்கம்பனியும் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின் மூன்று மாதங்களுக்கிடையில் ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்குக் கூடுதலான காலப்பகுதியில் வைப்புக்களோ அல்லது எடுப்பனவுகளோ செய்யப்படாத ஒவ்வொரு சேமிப்பு கணக்குகள் தொடர்பாகவும் பின்வரும் விபரங்களைத் தரும் அறிக்கையொன்றினை பணிப்பாளருக்கு அத்தகைய நிதியாண்டின் இறுதியிலுள்ளவாறு சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) கணக்கு வைத்திருப்பவரின் பெயரும் முகவரியும்

(ஆ) முன்னைய நிதியாண்டு முடிவடைந்ததை உடனடுத்து உள்ளவாறு ஒன்று திரண்ட வட்டி உட்பட வெளிநின்ற தொகை

(இ) வைப்பாளர் அல்லது அவரின்/அவளின் சட்டரீதியான பிரதிநிதியிடமிருந்து இறுதியாகக் கிடைத்த ஏதாவது எழுத்து மூலமான கடிதத் தொடர்புகள்

(ஈ) கணக்கில் வெளிநிற்கும் தொகையினை மீள்கொடுப்பனவு செய்ய நிதிக்கம்பனி மேற்கொண்ட அல்லது மேற்கொள்ள உத்தேசித்துள்ள நடவடிக்கைகள்

9. நிதிக்கம்பனியொன்று சேமிப்புக் கணக்கில் வரவு வைப்பதற்கு காசு அல்லது கணக்கு வைத்திருப்பவரின் பெயரில் எழுதப்பட்ட காசோலை அல்லது ஏனைய ஏற்றுக்கொள்ளத்தக்க எந்தஒரு பணமாற்றல் ஆவணங்கள் போன்ற வடிவிலான படிவங்களைத் தவிர வேறு எந்த ஒரு நிதியத்தினையும் ஏற்றுக் கொள்ளக்கூடாது.

10. இப்பணிப்பில்,

(i) "தவணை வைப்பு" என்பது குறிப்பிட்ட தவணைக்காலப் பகுதியின் பின்னர் மீளக்கொடுப்பனவு செய்யப்படும் என்ற உடன்படிக்கையுடன் நிதிக்கம்பனியொன்றினால் ஏற்றுக்கொள்ளப்படும் எந்த ஒரு வைப்பையும் குறிக்கும்.

(ii) "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

(iii) "பணிப்பாளர் சபை" என்பது இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் நியமிக்கப்பட்ட ஏதேனும் பணிப்பாளர்கள் தவிர்ந்த, கம்பனியின் பணிப்பாளர் சபையினைக் குறிக்கும்.

11. 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

## 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

*1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்படும் பணிப்புரை.*

சுனில் மென்டிஸ்
தவிசாளர்
இலங்கை மத்திய வங்கியின்
நாணயச்சபை

கொழும்பு
*2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆகிய இன்று.*

## 2005 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க (வட்டி) பணிப்புரை

1. இப்பணிப்பு 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (வட்டி) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையனவாதலும் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2.(அ) எந்த ஒரு நிதிக்கம்பனியினாலும் எந்த ஒரு காலாண்டுப்பகுதியிலும் ஏற்றுக்கொள்ளப்பட அல்லது புதுப்பிக்கப்பட்ட தவணை வைப்புக்களின் மீது செலுத்தப்படக்கூடிய ஆகக்கூடிய ஆண்டு வட்டி வீதம்

(i) அத்தகைய வைப்பு 12 மாத கால அல்லது அதற்கு குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 3 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

(ii) அத்தகைய வைப்பு 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டிற்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 6 சதவீதம் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பினையும்

விஞ்சக் கூடாது.

*(ஆ) முதிர்ச்சியின் போதான மீட்புப் பெறுமதியினை விடக் குறைவான விலையில் ஏதேனும் காலாண்டுப் பகுதியொன்றினுள் முறியொன்றின் அல்லது வேறு ஏதேனும் உபகரணத்தின் விற்பனையின் மீது நிதிக்கம்பனியொன்றினால் அனுமதிக்கக்கூடிய ஆகக்கூடிய கழிவு வீதமானது அந்த உபகரணத்தின் மீதான ஆகக்கூடிய ஆண்டு வருவாய்

(i) அத்தகைய முறி அல்லது உபகரணம் 12 மாத அல்லது அதற்குக் குறைவான முதிர்ச்சி காலத்தினைச் சம்பந்தப்பட்ட காலாண்டுக்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 3 சதவீதப்புள்ளி கொண்ட அதிகரிப்பினையும்

(ii) அத்தகைய முறி அல்லது உபகரணம் 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சி காலத்தினைக் கொண்டிருந்தால் சம்பந்தப்பட்ட காலாண்டுக்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு 6 சதவீதப் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பினையும்

விஞ்சக் கூடாது.

3. நிதிக்கம்பனியொன்றினால் எந்த ஒரு காலாண்டுப் பகுதியிலும் எந்த ஒரு சேமிப்பு வைப்பு மீதும் செலுத்தப்படக்கூடிய ஆண்டொன்றிற்கான ஆகக்கூடிய வட்டி வீதமானது சம்பந்தப்பட்ட காலாண்டுப் பகுதிக்கு உடனடியாக முற்போந்த காலாண்டுப் பகுதியில் 90 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாயினை விஞ்சக்கூடாது.

4. இப்பணிப்பில் "தவணை வைப்புக்கள்" என்பது 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகளின் (வைப்புக்கள்) பணிப்பில் காணப்படும் அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

5. 2001 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வட்டி) பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

## 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

*1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்படும் பணிப்பு.*

சுனில் மெண்டிஸ்
தவிசாளர்
இலங்கை மத்திய வங்கியின்
நாணயச்சபை

கொழும்பு
*2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆகிய இன்று.*

## 2005 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (திரவச்சொத்துக்கள்) பணிப்புரை

1. இப்பணிப்பு 2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (திரவச்சொத்துக்கள்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையதாதலும் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 46 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு ஒவ்வொரு நிதிக்கம்பனியும் ஆகக் குறைந்த திரவச் சொத்தொன்றினைப் பேணிவருதல் வேண்டும். இது எந்த ஒரு வேலை நாள் முடிவின்போதும் மொத்தத்தின் பின்வரும் சதவீதத்திற்கு குறையாததாக இருத்தல் வேண்டும்.

(i) பின்வருவனவற்றில் பதினைந்து சதவீதம்

(அ) அத்தகைய நாளன்று வியாபாரம் முடிவடைகையில் நிதிக்கம்பனியினால் பெறப்பட்ட தவணை வைப்புக்களின் வெளிநிற்கும் பெறுமதியில்; அத்துடன்

(ஆ) அத்தகைய நாளன்று வியாபாரம் முடிவடைகையில் நிதிக்கம்பனியின் கணக்கேட்டில் காணப்படுகின்றவாறு நிதிக்கம்பனியினால் வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்களின் முகப்புப் பெறுமதியில்

அத்துடன்,

(ii) அத்தகைய நாளின் வியாபாரம் முடிவடைகையில், அத்தகைய கம்பனியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சேமிப்பு வைப்புக்களின் வெளிநின்ற பெறுமதியில் இருபது சதவீதம்.

3. ஒவ்வொரு நிதிக்கம்பனியும், அந்த மாதத்தின் ஒவ்வொரு வாரத்தினதும் இறுதி வேலை நாளன்று வியாபாரம் முடிவடைந்த நேரத்திலுள்ளவாறான மொத்த வைப்புப் பொறுப்புக்களையும் திரவச் சொத்துக்களையும் உறுதிப்படுத்துகின்ற விதத்தில் பணிப்பாளரினால் விபரிக்கப்படவுள்ள ஒரு படிவத்தில் மாதாந்த கூற்றொன்றினைப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். மாதத்தின் இறுதி வேலைநாளும் அத்தகைய மாதத்தின் இறுதி வாரத்தின் இறுதி வேலைநாளும் ஒன்றாக இருக்காதவிடத்து இதனை மாதத்தின் இறுதி வேலை நாளன்று உள்ளவாறு மேற்கொள்ளல் வேண்டும். அத்தகைய கூற்றினைத் தொடர்ந்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளுக்கு முன்னதாக பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

4. ஒவ்வொரு நிதிக்கம்பனியும் முற்போந்த நிதியாண்டினது பன்னிரண்டு மாதங்களின் மொத்த வைப்புப் பொறுப்புக்களின் மாதாந்த சராசரியில் பத்து சதவீதத்திற்கு சமமான தொகையினை இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள் இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் ஆகியவற்றின் வடிவில் எல்லா நேரத்திலும் பேண வேண்டும்.

5. மேலேயுள்ள பந்தி 4 இல் குறிப்பிடப்பட்ட இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள், இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் என்பன மேலேயுள்ள 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட திரவச் சொத்துக்களின் ஒரு பகுதியையும் கொண்டதாக இருக்கும்.

6. மேலேயுள்ள பந்தி 4 இன் விதிகளுக்கு இணங்கும் விதத்தில் நிதிக்கம்பனியொன்றின் வசமுள்ள இலங்கை அரச திறைசேரி உண்டியல்களையும், இலங்கை அரச பிணையங்களையும், இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களையும் வர்த்தக வங்கியொன்றில் அல்லது ஒன்றிற்கு கூடுதலான வங்கிகளில் அல்லது முதனிலை வணிகர் கம்பனியொன்றில் அல்லது ஒன்றிற்கும் கூடுதலானவற்றின் கட்டுக்காப்பில் வைத்திருக்க முடியும். ஒவ்வொரு நிதிக் கம்பனியும் அத்தகைய உண்டியல்கள்/ பிணையங்கள் தொடர்பாக அத்தகைய வங்கி/ வங்கிகள் அல்லது முதனிலை வணிகர்கள்/ கம்பனி/ கம்பனிகளிடமிருந்து பெற்ற விபரங்களை பணிப்பாளரினால் விபரிக்கப்பட்ட படிவத்தில் வாராந்த கூற்றொன்றாக பணிப்பாளருக்கு வழங்குதல் வேண்டும்.

7 ஒவ்வொரு நிதிக்கம்பனியும் அதன் முற்போந்த நிதியாண்டின் பன்னிரண்டு மாத காலப்பகுதியின் மாத இறுதியில் காணப்படும் பொறுப்புக்களைக் காட்டுகின்ற கூற்றொன்றினை, அத்தகைய நிதியாண்டு முடிவடைந்ததைத் தொடர்ந்துவரும் மாதத்தின் பதினைந்தாம் (15) நாளன்றோ அல்லது அதற்கு முன்போ பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இப்பணிப்புரையில்,

(i) "தவணை வைப்புக்கள்" என்பது 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்புரையிலுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

(ii) "மொத்த வைப்புப் பொறுப்புக்கள்" தவணை வைப்புக்கள் வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் சேமிப்பு வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.

(iii) "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப்பொருள்படும்.

(iv) "உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்" என்பது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் எனப்பொருள்படும்.

(v) "முதனிலை வணிகர் கம்பனி" என்பது 1995 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கச் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க உள்நாட்டு திறை சேரி உண்டியல் (முதனிலை வணிகர்கள்) கட்டளைச்சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான பதிவு செய்யப்பட்ட பங்குகள் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 420) 55 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள், இருப்புக்கள் கட்டளை முதனிலை வணிகர்கள் விதிகளின் கருத்திற்குட்பட்ட முதனிலை வணிகர் கம்பனி எனப்பொருள்படும்.

9. 2001 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) (திருத்தம்) பணிப்புரையினால் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

## 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

*1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்படும் பணிப்புரை.*

சுனில் மென்டிஸ்
தவிசாளர்
இலங்கை மத்திய வங்கியின்
நாணயச்சபை

கொழும்பு
2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆகிய இன்று.

### 2005 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (அநுபவம்/வியாபாரத்தை மூடுதல்) பணிப்புரை

1. இப்பணிப்பு 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நிதிக்கம்பனிகள் (வியாபாரத்துக்காக அலுவலகத்தை/ அலுவலகங்களை மூடிவிடுதல்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 1991 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடையதாதலுடன் உடனடியாக நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. எந்த ஒரு நிதிக்கம்பனியும் இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்தப்படாத, திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையான எந்த ஒரு வேலை நாளிலும் பணிப்பாளரின் எழுத்து மூலமான முன்அனுமதியினைப் பெறாமல் வியாபாரத்துக்காக அதன் அலுவலகத்தினை/ அலுவலகங்களை மூடக்கூடாது.

3. மேலே 2 இல் கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஒப்புதலை வழங்குகையில் பணிப்பாளர் ஒருவர் அவருக்கு/ அவளுக்கு அவசியமானதெனக் கருதும் நிபந்தனைகளை விதிக்கலாம்.

4. இப்பணிப்பில் "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் எனப்பொருள்படும்.

5. 1991 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (அலுவலர்களை மூடிவிடுதல்) பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

## 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டம்

*1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.*

கொழும்பு
*29 திசெம்பர் 2005*

**சுனில் மென்டிஸ்**
*தலைவர்*
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

### நிதிக் கம்பனிகள் (அமைப்பு மாற்றங்கள்) 2005ஆம் ஆண்டு 5ஆம் இலக்கப் பணிப்பு

1. இப்பணிப்பு 2005ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அமைப்பு மாற்றங்கள்) பணிப்பு என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 2ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடையதாதலுடன் 2006 சனவரி 2ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. உரிமம் வழங்கப்பட்டுள்ள எந்த ஒரு நிதிக் கம்பனியும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் எழுத்து மூலமான முன் ஒப்புதலின்றி பின்வருவனவற்றை மேற்கொள்ள முடியாது

   (அ) எந்த ஒரு துணை அல்லது இணைக் கம்பனியினையும் நிறுவுதல்.

   (ஆ) நிதி வியாபாரம், தவணைக் கொள்வனவு அல்லது அடகு பிடித்தலுடன் நேரடியாக தொடர்புபடாத புதிய வியாபார நடவடிக்கையினைத் தொடங்குதல்.

   (இ) அதன் வழங்கப்பட்ட மூலதனத்தினை அதிகரித்தல் அல்லது குறைத்தல்

   (ஈ) அதன் வியாபாரத்தினை விற்றுவிடுதல்

   (உ) மற்றைய எந்த ஒரு நிதிக் கம்பனியினதும் வியாபாரத்தினை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பொறுப்பேற்றல்

   (ஊ) அமைப்பின் விஞ்ஞாபனத்தினை அல்லது அமைப்பின் உறுப்புரையினை மாற்றுதல்

   (எ) கம்பனியினை மற்றைய எந்த ஒரு நிதிக் கம்பனியுடனும் ஒன்றாக்குதல், கூட்டிணைத்தல், அல்லது இணைத்தல்

   (ஏ) கம்பனியின் முகாமைத்துவத்தினை மீளமைத்தல்

3. இப் பணிப்பில் "நிதி வியாபாரம்" என்பது 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 46ஆம் பிரிவிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## 1991ஆம்ஆண்டின் 23ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்படவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

*1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு*

கொழும்பு
*29 திசெம்பர் 2005*

சுனில் மென்டிஸ்
**தலைவர்**
இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை

## நிதிக் கம்பனிகள் (கிளைகளை/ அலுவலகங்களைத் திறத்தல்/இடம்மாற்றுதல்/மூடிவிடுதல்) 2005ஆம் ஆண்டின் 6ஆம் இலக்கப் பணிப்பு

1. இப்பணிப்பு 2005ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கிளைகளை/அலுவலகங்களைத் திறத்தல்/ இடம் மாற்றுதல் / மூடிவிடுதல்) பணிப்பு என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் 2ஆம் பிரிவின் நியதிகளின்படி பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடையதாதலுடன் 2006 சனவரி 2ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. உரிமம் வழங்கப்பட்டுள்ள எந்த ஒரு நிதிக் கம்பனியும் பணிப்பாளரின் எழுத்து மூலமான முன் அனுமதியின்றி பின்வருவனவற்றை மேற்கொள்ளக்கூடாது.

   (அ) புதிய வியாபாரதலமொன்றினைத் திறத்தல்

   (ஆ) இதன் எந்த ஒரு வியாபாரத்தல அமைவிடத்தினையும் மாற்றுதல்; அல்லது

   (இ) அதன் எந்த ஒரு வியாபாரத் தலங்களையும் மூடுதல்.

3. இப் பணிப்பில் "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் என்ற பொருளினைக் கொண்டிருத்தல் வேண்டும்

## 1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டம்

*1991ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 2(2), 6, 7(1) மற்றும் 7 (3) என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான பிரிவு 33 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

கொழும்பு
*29 திசெம்பர் 2005*

சுனில் மென்டிஸ்
**தலைவர்**
**இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை**

### 2005 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (பதிவு செய்தலும் உரிமம் வழங்கலும்) விதி

1. இவ்விதிகள் 2005 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (பதிவு செய்தலும் உரிமம் வழங்கலும்) விதி என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன்1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 2இன் நியதிகளின்படி எந்த ஒரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடையதாதலும் வேண்டும். அத்துடன் நடைமுறைக்கு வரும் திகதிகளைக் குறித்துரைக்கின்ற 5ஆம் 6ஆம் விதிகள் விலக்கலாக 2006 சனவரி 2ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. கம்பனியொன்றினால் பதிவிற்காகச் செய்யப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் இங்குள்ள அட்டவணையின் "படிவம் அ1 இல்" மேலதிக பிரதியுடன் செய்யப்பட வேண்டும். இப்படிவத்தினை பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.

3. ஒவ்வொரு நிதிக் கம்பனியினதும் பதிவிற்காகப் பேணப்படுகின்ற பதிவேடு இங்குள்ள அட்டவணையின் "படிவம் ஆ1 " இன் தன்மைகளைக் கொண்டிருக்கும்.

4. எந்தவொரு நிதிக் கம்பனிக்கும் வழங்கப்படுகின்ற உரிமம் அட்டவணையின், "படிவம் இ" இனை ஒத்ததாக இருக்கும்.

5. முதன்முதலில் பதிவு செய்யப்பட்டு ஆண்டிற்காக நிதிக் கம்பனி செலுத்த வேண்டிய உரிமக் கட்டணம் 2006வரை ரூ.20,000ஆகவும் அதன் பின்னர் ரூ.50,000ஆகவும் இருப்பதுடன் இத்தொகையினை பதிவு செய்யும் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ ஆண்டின் எஞ்சியுள்ள நாட்களின் எண்ணிக்கைக்கு விகிதசமமாக இலங்கை மத்திய வங்கியில் செலுத்தப்படுதலும் வேண்டும்.

6. 1988ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் கம்பனியும் 2006 திசெம்பர் வரை ஆண்டு உரிமச் சட்டமான ரூ.20,000இனையும் அதன் பின்னர் ஆண்டு உரிமக் கட்டணமான ரூ.50,000இனை முன்னைய கலண்டர் ஆண்டு முடிவடைவதற்கு முற்போந்த 30 நாட்களுக்குள்ளும் இலங்கை மத்திய வங்கியில் செலுத்தல் வேண்டும்.

7. இப்பணிப்பில் "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளர் என்ற பொருளினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

8. 1990ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (பதிவு செய்தலும் உரிமம் வழங்கலும்) விதி இத்தால் மீளப்பெறப்படுகிறது.

வங்கியல்லா நிதியியல்

நிறுவனங்களின்
மேற்பார்வைத் திணைக்களம்

2005 மே 10

24/01/015/004/005

அனைத்து பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளுக்கும்

அன்புள்ள ஐயா,

## மூலதனப்போதுமை மீதான பணிப்புரை அறிவுறுத்தல்களுக்கான திருத்தம்

நாணயச்சபையானது சில நிபந்தனைகளுக்கமைய அடுக்கு 2- துணைநிரப்பு மூலதனத்தின் கீழ்நிலைப்பட்ட நீண்டகால கால படுகடன் கூறுகளில் மீட்கத்தக்க, ஒன்றுசேர்க்கின்ற முன்னுரிமைப் பங்குகளை உள்ளடக்குவதற்கு அனுமதித்துள்ளது என்பதனை உங்களுக்கு அறிவித்துக் கொள்கிறோம். இதன்படி, 2005 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (இடர்நிறையேற்றப்பட்ட மூலதனப்போதுமை விகிதம்) பணிப்புரையுடன் சேர்த்து விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரிவு 'இ' இன் விடயம் 34 பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

**34 ஒப்புதலளிக்கப்பட்ட பிணையிடப்படாத கீழ்நிலைப்பட்ட நீண்டகால படுகடன்.**

இக்கூறு பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது.

(i) பிணையிடப்படாத கீழ்நிலைப்பட்ட நீண்டகால படுகடனொன்று பின்வரும் நிபந்தனைகளை திருப்திப்படுத்துகின்றது.

(அ) பிணையிடப்படாத கீழ்நிலைப்பட்ட நீண்டகால படுகடன் சாதனங்களையும் கலந்த (படுகடன்/பங்கு) மூலதனச் சாதனங்களையும் வைத்திருப்பவர்கள் தவிர்ந்த அனைத்து கடனீந்தோரினதும் அக்கறைக்குரிய பிணையிடப்படாத, முழுமையாக செலுத்தப்பட்ட மற்றும் குறைக்கப்பட்டவை.

(ஆ) சாதனமொன்றின் ஆகக் குறைந்த ஆரம்ப முதிர்ச்சி 5 ஆண்டுகளாக இருக்கும்.

(இ) மத்திய வங்கியின் முன் சம்மதமில்லாமல் உரிய காலத்திற்கு முன்பாக மீள்கொடுப்பனவு செய்யவோ மீட்கப்படவோ கூடாது.

(ஈ) முதிர்ச்சிக்கு முன்னதான நான்கு ஆண்டு காலங்களில் ஒவ்வொரு 1/5 ஆண்டளவில் மூலதனமாக கணக்கிடப்பட்ட தொகையினைக் கழிவிடுதல்.

(ii) மீட்கத்தக்க ஒன்று சேர்ந்த முன்னுரிமைப் பங்குகள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கிறது:

(அ) அத்தகைய முன்னுரிமைப் பங்குகள் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு, குறிப்பாக, பிரிவு 57 இற்கமைவாக வழங்கப்பட்டு மீட்கப்பட வேண்டும்.

(ஆ) இலங்கை மத்திய வங்கியின் முன்ஒப்புதலில்லாமல் அத்தகைய முன்னுரிமைப் பங்குகளை வழங்கப்பட்ட திகதியிலிருந்து முதல் ஐந்தாண்டுகளுக்குள் மீட்கக்கூடாது.

(இ) அத்தகைய முன்னுரிமைப் பங்குகள் பிணையிடப்படாது கீழ்நிலைப்படுத்தப்பட்ட முழுமையாகச் செலுத்தப்பட வேண்டும்; அத்துடன்

(ஈ) முதிர்ச்சிக்கான இறுதி ஐந்தாண்டு காலத்தில், தொடர்ச்சியான மூலங்களின் வலுவாக இச்சாதனங்களின் குறைந்துசெல்லும் பெறுமதியினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் ஆண்டொன்றிற்கு 20 சதவீதம் கொண்ட ஒன்றுசேர்ந்த கழிவிடல் காரணி பிரயோகிக்கப்படல் வேண்டும்.

அடுக்கு 2. மூலதனத்திற்குள் அத்தகைய எந்த ஒரு சாதனத்ததையும் மீட்கத்தக்க ஒன்று சேர்ந்த முன்னுரிமைப் பங்குகளையும் உள்ளடக்குவதற்கு இலங்கை மத்திய வங்கியின் முன்ஒப்புதல் தேவையாகும்.

ஒப்புதலளிக்கப்பட்ட பிணையிடப்படாத கீழ்நிலைப்பட்ட நீண்டகால படுகடன்கள் (மீட்கத்தக்க ஒன்றுசேர்ந்த முன்னுரிமைப் பங்குகள் உட்பட) என்பன அடுக்கு - 1 மூலதனத்தின் 50 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டன. பிணையிடப்படாத கீழ்நிலைப்பட்ட நீண்டகால படுகடன் மற்றும் மீட்கத்தக்க ஒன்று சேர்ந்த முன்னுரிமைப் பங்குகளின் உண்மையான தொகைகள் தனித்தனியாக அறிக்கையிடப்பட வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள

பணிப்பாளர்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின்
மேற்பார்வைத் திணைக்களம்

*2005 மே 11*

தொடர்பு 24/01/015/0004/003

*அனைத்து பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளுக்கும்*

*அன்புள்ள ஐயா,*

## தகுதியுடைய மீள்மதிப்பீட்டு ஒதுக்குகளை மூலதன நிதியத்தில் உள்ளடக்குவது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கான வழிகாட்டல்கள்

2003 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (மூலதன நிதியம்) பணிப்புரை, 2001 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கப் பணிப்புரைகளினால் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (முதலீடு) பணிப்புரை 1991 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (நிலையானசொத்து) பணிப்புரை மற்றும் 1992 ஆம் ஆண்டின் நிதிக்கம்பனிகள் (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) பணிப்புரை என்பனவற்றின் நோக்கத்திற்காக, மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்குகளை 'மூலதன நிதியத்தில்' உள்ளிடுவது தொடர்பில் பின்வரும் வழிகாட்டல்களை விடுப்பதற்கு நாணயச்சபை ஒப்புதலளித்துள்ளமை பற்றித் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

(i) மதிப்பீடு மத்திய வங்கியின் முன்ஒப்புதலுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) சொத்துக்கள் முன்னைய மதிப்பீட்டு திகதி அல்லது கொள்வனவுத் திகதிகளுக்குப் பின்னர் இதில் எதுபிந்தியதோ அதிலிருந்து 7 ஆண்டுகளுக்குப் பின்னரே மீள்மதிப்பீட்டிற்கு தகுதியுடையதாகும்.

(iii) சொத்துக்கள் பின்வரும் தகைமையுடைய மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்பட வேண்டும்.

(அ) ஒரு பட்டய மதிப்பீட்டு அளவையாளர்; அல்லது

(ஆ) மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் (இலங்கை) உறுப்பினராயிருப்பதுடன் 15 வருடகால வேலை அனுபவத்துடன் ஒரு பட்டதாரியாகவோ அல்லது மதிப்பிடுதலில் டிப்ளோமா பட்டதாரியாகவோ இருத்தல் வேண்டும்.

(இ) 18 வருட கால வேலை அனுபவத்துடன் மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் (இலங்கை) பட்டதாரி உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

(ஈ) 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வேலை அனுபவத்துடன் இணை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் (இலங்கை) உறுப்பினராயிருத்தல் வேண்டும்.

(உ) 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வேலை அனுபவத்துடன் மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் (இலங்கை) இடைநிலைத் தேர்வில் சித்தியடைந்தவராயிருத்தல் வேண்டும்.

இலங்கை நிதிஅக சங்கத்தினூடாக இலங்கை மத்திய வங்கியுடன் ஒரு பரஸ்பர இணக்கத்திற்கு வந்த நியதிகளுக்கிணங்க பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் இவ்வழிகாட்டல்களைப் பின்பற்றி வருகின்றன என்பதனை தயைகூர்ந்து கவனிக்கவும். இப்பொழுது, நடைமுறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன.

தயைகூர்ந்து இக்கடிதம் கிடைத்தமை பற்றி அறியத்தரவும்.

உங்கள் உண்மையுள்ள

பணிப்பாளர்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின்
மேற்பார்வைத் திணைக்களம்

2005 யூலை 27

தொடர்பு 24/01/015/0004/003

அன்புள்ள ஐயா,

**2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (இடர் நிறையேற்றப்பட்ட மூலதனப்போதுமை விகிதம்) பணிப்புரை அறிவித்தல்களுக்கான திருத்தங்கள்**

2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப்போதுமை விகிதம்) பணிப்புரையின் நோக்கத்திற்காக, தவணைக் கொடுப்பனவு அடிப்படையொன்றில் மேற்கொள்ளப்பட்ட உண்மைச்சொத்து விற்பனைகளின் பேரில் செயற்படுகின்ற முற்பணங்களுக்காக 50 சதவீதம் கொண்ட இடர்நேர்வு நிறையேற்றலைச் சாட்டுதல் பண்ணுவதற்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு நாணயச்சபை ஒப்புதலளித்திருக்கின்றது என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

(அ) உண்மைச் சொத்தின் வாங்குநருடன் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனி உடன்படிக்கையினைச் செய்யும்போது, தொகை முழுமையாக செலுத்தப்படும்வரை சொத்தின் உரித்து கடன்பாட்டாளரிடம் மாற்றல் செய்யப்பட மாட்டாது எனக் குறித்துரைக்கிறது.

(ஆ) தவணைக் கொள்வனவு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட உண்மைச் சொத்தின் எந்த ஒரு விற்பனை தொடர்பான தவணைக் கொடுப்பனவுகளும் 6 மாதங்களுக்கும் கூடுதலாக நிலுவையில் நிற்குமாயின் 100 சதவீதம் கொண்ட இடர்நேர்வு நிறையேற்றத்திற்கு சாட்டுதல் செய்யப்படும்; அத்துடன்

(இ) தவணைக் கொடுப்பனவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட உண்மைச்சொத்துக்களின் விற்பனை தொடர்பான செயற்படுகின்ற செயற்படாத (6 மாதத்திற்கும் கூடுதலாக நிலுவையிலுள்ள தவணைகள்) விடயங்கள் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளினால் பொதுப்பேரேட்டில் தனித்தனியாகக் காட்டப்பட வேண்டும்.

இதற்கிணங்க, 2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (இடர்நிறையேற்று மூலதனபோதுமை விகிதம்) பணிப்புரையின் கீழ் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் "தவணைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட உண்மைச் சொத்துக்களின் விற்பனைக்கெதிரான கடன்கள் (உ.சொ.வி.கடன்கள்)" என்ற தலைப்பிலும் "செயற்படும் உ.சொ.விற்பனைக் கடன்கள்" மற்றும் "செயற்படாத உ.சொ.கடன்கள்" என்ற இரு துணைத் தலைப்புக்களிலும் அறிமுகப்படுத்தியதன் மூலம் திருத்தப்பட்டிருக்கிறது. இவ்விடயங்களுக்கு/ துணை விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள எண்கள் முறையே 08.06, 08.06.01 மற்றும் 08.06.02 என்பனவாம். "ஏனைய கடன்களும் முற்பணங்களும்" என்ற விடயத்திற்கு 08.07 என மீள எண்ணிடப்பட்டுள்ளது. அறிவுறுத்தல்களின் திருத்தப்பட்ட பிரிவுகளின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இக்கடிதம் கிடைத்தமை பற்றி தயவுசெய்து அறியத்தரவும்.

உங்கள் உண்மையுள்ள

பணிப்பாளர்

## 2000ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக்குத்தகைச் சட்டம்

*2000 ஆம் ஆண்டின் 56 இலக்க நிதிக்குத்தகைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.*

திருமதி.எல்கே. குணதிலக்க

**பணிப்பாளர்**
வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

*28 ஆம் திகதி திசெம்பர் 2005*

### 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கநிதிக்குத்தகை (ஆகக் குறைந்த மூலதனம்) பணிப்புரை

1. இப்பணிப்புரையானது 2005 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க நிதிக் குத்தகை (ஆகக் குறைந்த மூலதனப்) பணிப்புரை எனக் எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் ஆளுகை செய்யப்படும் உத்தரவு பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உத்தரவ பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், 1988 ஆம் ஆண்டு 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஆளுகை செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் மற்றும் 2000 ஆம் ஆண்டு 56 ஆம் இலக்க நிதிக்குத்தகை சட்டத்தின் 2005ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் திருத்தப்பட்டவாறான 44 (அ) பிரிவின் விதிகளுக்கிணங்க பதிவு செய்யப்படும் எந்த ஒரு நிறுவனமும் தவிர்ந்த ஏனைய பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக் குத்தகை நிறுவனத்திற்கும் இது ஏற்புடையதாகும். இந்த பணிப்புரையானது 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 2 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகின்றது.

2. இந்த பணிப்புரையானது ஏற்புடைத்தாகும் ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகை நிறுவனமும் (இதன் பின்பு தொடர்பான நிறுவனம் என்று குறிக்கப்படும்) 2000 ஆம் ஆண்டு 56 ஆம் இலக்க நிதிக் குத்தகைச் சட்டத்தின் பிரிவு 3(இ) இன் விதிகளின் கீழ் அமைச்சரால் விதந்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட மூலதனத்துக்கு குறையாத தொகையை பழுதுறாக ஆகக் கூடிய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பராமரித்தல் வேண்டும்.

3. இப்பணிப்புரையின் ஆரம்பத்தில் அமைச்சரால் விதந்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த வழங்கல் குறைந்த மைய மூலதனமாக செலுத்தப்பட்ட இறுத்த மூலதனத்துக்கு குறைவான மைய மூலதனத்தை தொடர்பான நிறுவனம் கொண்டிருப்பின் இப்பணிப்புரையின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் வகையில் இப்பணிப்புரை அமுலுக்கு வந்த திகதியில் இருந்து ஒரு வருட கால அவகாசத்தினை பணிப்பாளர் வழங்கலாம்.

4. இப்பணிப்புரையின் நோக்கத்துக்காக "மைய மூலதனம்" என்பது பின்வருவனவற்றின் கூட்டுத்தொகை எனப் பொருள்படும்.

   (அ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்கு மூலதனம்;

   (ஆ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட மீட்கப்பட முடியாத, ஒன்று சேர்க்கப்படாத முன்னுரிமைப் பங்குகள்;

   (இ) பங்குவட்டம்;

   (ஈ) 2005ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிக்குத்தகை (ஒதுக்கு நிதியம்) பணிப்புரையின் கீழ் பேணப்படும் ஒதுக்கு நிதியம்

   (உ) எந்த ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகவும் நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது இலங்கை கணக்கீட்டு நியமத்தின் கீழ் குறிப்பிடப்படாததுமான ஒதுக்கங்கள்;

   (ஊ) நிறுத்தி வைக்கப்பட்ட இலாபங்கள் அல்லது ஒன்று சேர்ந்த நட்டங்கள்;

   (எ) நடைமுறை ஆண்டு இலாபங்கள் அல்லது நட்டங்கள்; அத்துடன்

   (ஏ) வழங்கப்பட்ட அறவிடமுடியாக்கடன் மற்றும் ஐயக் கடன்களுக்கான பொது ஒதுக்கமும் கணக்காய்வாளரின் உறுதிப்பாட்டிற்கு உற்பட்டு செயறபடும் சொத்துப் பட்டியலின் மீதான மேலதிக குறித்துரைக்கப்படட் ஒதுக்கமும்

5. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "பணிப்பாளர்" என்பது வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

## 2000ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக்குத்தகைச் சட்டம்

2000 ஆம் ஆண்டின் 56 இலக்க நிதிக்குத்தகைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

திருமதி.எல்கே. குணதிலக்க

**பணிப்பாளர்**
வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

28 ஆம் திகதி திசெம்பர் 2005

## 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்குத்தகை (அறவிடமுடியா, ஐயத்துக்கிடமான கடன்களுக்கான ஏற்பாடு)பணிப்புரை

1. இப்பணிப்புரையானது 2005 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க நிதிக்குத்தகை (அறவிடமுடியா ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு) பணிப்புரையெனக் கருதப்படலாமென்பதுடன், 1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் ஆளுகை செய்யப்படும் உத்தரவு பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உத்தரவு பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஆளுகை செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் என்பன தவிர்ந்த ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகை நிறுவனங்களுக்கும் பொருந்தும். இப்பணிப்புரையானது 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் சனவரி மாதம் 2 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது.

2. இந்த பணிப்புரையானது ஏற்புடைத்தான ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகை நிறுவனங்களும் (இதன் பின்பு தொடர்பான நிறுவனம் என அழைக்கப்படும்) எந்த இலாப நட்டத்தையும் பிரகடனப்படுத்த முன்பு அறவிடமுடியா ஐயக்கடன்களுக்கான அவ்வேறுபாடானது குறைந்த பட்சம் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

   (அ) 6 முதல் 12 மாத காலப்பகுதிக்கு நிலுவையிலுள்ள எல்லா மொத்தக் கடன்களின் 20 சதவீதத்தையும்;

   (ஆ) 12 முதல் 18 மாத காலப்பகுதிக்கு நிலுவையிலுள்ள எல்லா மொத்தக் கடன்களின் 50 சதவீதத்தையும்;

   (இ) 18 மாதங்களுக்கு மேற்பட்ட நிலுவையிலுள்ள மொத்தக் கடன்களின் 100 சதவீதத்தையும்.

   (ஈ) மாதாந்த தவணைக் கட்டணங்கள் அடிப்படையில் செலுத்தப்படாததும், கம்பனியானது மாதாந்த தவணைத் திகதிகளில் செலுத்தப்பட மாட்டாதென கருதும் கடன்கள் அனைத்தினதும் மீதிகளில் 100 சதவீதத்தினையும்.

3. எந்த குறிப்பிட்ட நிறுவனத்தையும் அந்நிறுவனத்தால் ஏற்கனவே செய்யப்பட்ட அறவிடமுடியாக் ஐயக்கடன்களுக்கான ஒதுக்கத்திற்கு மேலதிகமாக, கூடுதலான குறிப்பிட்ட ஒதுக்கத்தை செய்யும்படி பணிப்பாளர் வேண்டலாம்.

4. ஒரு பொருத்தமான நிறுவனமானது, மேற்குறிப்பிட்ட 2(அ) இலிருந்து 2 (ஈ) வரையான கடன் மீதிகளில் ஒதுக்கங்களை ஏற்படுத்தும்போது பின்வரும் கடன் பிணைகளை அம்மீதிகளிலிருந்து கழிக்கலாம்.

   (அ) காசு அல்லது காசுக்கு சமமானவை (உத்தரவு பெற்ற வர்த்தக வங்கிகள், உத்தரவு பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளில் உள்ள பொறுப்புக்களற்ற திறைசேரி உண்டியல்கள், திறைசேரிப் பிணைகள் மற்றும் நிலையான வைப்புக்கள் போன்ற அத்தகைய பிணையங்கள் உட்பட)

   (ஆ) வங்கி உத்தரவாதங்கள்

(ஈ) காணி கட்டடங்களைப் பொறுத்தவரையில், முதன்மை ஈடாயின் முழுப் பெறுமதியையும் கருத்திற் கொள்ளலாம். இப்பெறுமதியானது கடன் வசதி வழங்கப்பட்ட சமயத்தில் கொடுக்கப்பட்ட தொழில்சார் மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுப் பெறுமதியிலிருந்து கூடுதலானதாக இருத்தலாகாது. (மதிப்பீட்டாளர்களை தேர்ந்தெடுக்கும் வழிகாட்டியானது பிற்சேர்க்கையில் இணைக்கப்பட்டுள்ளது) எவ்வாறெனினும், நிலுவைகளை மீளப்பெறுவதற்காக விற்பனை செய்யும்போது ஆளில்லாத உடைமையைக் கையளிப்பதற்கான ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படாத, குடியிருக்கும் ஆதனங்கள் பிணையாக பெறப்பட்டிருப்பின் அவை தேவைப்பட்ட ஒதுக்கீடுகளின்போது கழிக்கப்பட மாட்டாது.

5. ஒரு பொருத்தமான நிறுவனமானது, இடர்நேர்வு அடிப்படையிலான செயற்பாட்டுக் கடன்களின் அடிப்படையிலான அறவிடமுடியா, ஐயக்கடன்களுக்கான மேலதிக குறிப்பிட்ட தொகையை ஒதுக்கலாமென்பதுடன் அக்குறிப்பிட்ட தொகையானது மைய மூலதனத்தின் அல்லது மூலதன ஒதுக்கத்தின் மேலதிக பொது ஒதுக்கமாக உள்ளடக்கப்படலாகாது.

6. ஒரு குறிப்பிட்ட கடன் வசதியானது செயற்படாக் கடன்களாக வேறுபடுத்தும்முன் மறுசீரமைக்கப் பட்டிருப்பின், மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கடனானது, மறுசீரமைக்கப்படுமுன் (இருந்தால்) மற்றும் மறுசீரமைக்கப்பட்ட பின்னரான வருமதியாக உள்ள மாதங்களின் கூட்டுத்தொகையானது ஆறு மாதங்களுக்கு அல்லது அதற்குக் கூடுதலாக இருந்தால் அத்தொகை செயற்படாக் கடனாக கருதப்பட வேண்டும்.

7. ஒரு குறிப்பிட்ட கடன் வசதியானது, செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்பட்ட பின் மீள் அட்டவணைப்படுத்தப் பட்டிருப்பின். கடனானது தொடர்ந்தும் செயற்படாக் கடனாகவே பராமரிக்கப்பட வேண்டும். அம் மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கடனுக்கான கொடுப்பனவானது தொடர்ந்தும் ஆறு மாதங்களுக்கு செய்யப்பட்டிருந்தாலேயே அக்கடனானது செயற்படாக் கடன் பிரிவிலிருந்து மாற்றப்படுதல் வேண்டும்.

8. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "கடன் வசதி " என்பதன் பொருளானது, கடன்கள், வாடகைக் கொள்வனவு அல்லது குத்தகை உடன்படிக்கைகளின் கீழ் வழங்கப்படும் வசதிகள், மீட்கப்படக்கூடிய திரண்ட முன்னுரிமைப் பங்குகள் மற்றும் கடன் பிணைகள் போன்ற பிணைகள், தொகுதிக்கடன்கள், கடன் பிணைகளாக உள்ள சொத்துக்கள், வணிகத்தாள்கள், உறுதிப்பத்திர ங்ள் கம்பனிகளுக்கிடையேயான கடன்கள் திருப்பிச்செலுத்தும் அடிப்படையில் நிதி வழங்குவதற கான ஒழுங்குகள், நிகழத்தக்க பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கான உறுதிப்பாடு அல்லது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்ட வேறு ஏதேனுமொரு நிதி வசதி என்பனவாகும்.

9. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "கம்பனிக்கிடையேயான கடன்" என்பது குறிப்பிட்ட நிறுவனமானது தனது பணிப்பாளர்களுக்கோ அல்லது தமது உறவினர்களுக்கோ மற்றும்/அல்லது தமது இணைக்கம்பனிகளுக்கோ மற்றும்/ அல்லது தமது துணைக்கம்பனிகளுக்கோ மற்றும்/ அல்லது தமது தாய்க்கம்பனிக்கோ வழங்குகின்ற கடன் வசதிகளைக் குறிக்கும். இப்பணிப்புரை யின் நோக்கத்திற்காக"உறவினர்" என்பது ஒரு தனிப்பட்ட நபரின் வாழ்க்கைத்துணை மற்றும்/ அல்லது தங்கியிருக்கும் பிள்ளையாகவோ இருக்கலாம். ஒரு கம்பனியானது பிறிதொரு கம்பனியின் முறையான "இணைக்கம்பனியாக இருப்பதென்பது அக்கம்பனியின் வழங்கி இறுத்த பங்கு மூலதனத்தில் 20% வீதத்திற்கு சமமாக அல்லது மேலதிகமாக என்பதாகும்.

10. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "துணைக்கம்பனி" மற்றும் "தாய்க்கம்பனி" என்பதன் பொருளானது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள அதே அர்த்தத்தைக் கொண்டதபகும்.

11. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "செயற்படாக் கடன்களென்பது" ஆறு மாதங்களுக்கு மேலாக வருமதியாக உள்ள தவணைக் கட்டணங்களைக் கொண்ட கடன்வசதிகளைக் குறிப்பதாகும்.

12. இப்பணிப்பரையின் நோக்கத்திற்காக "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிப்பதாகும்.

## மதிப்பீட்டாளர்களை தெரிவு செய்வதற்கான வழிகாட்டிகள்

காணி மற்றும் கட்டடம் தொடர்பாக, சொத்துக்களை மதிப்பீடு செய்யும் மதிப்பீட்டாளரானவர்.

1. ஒரு பட்டய மதிப்பீட்டு அளவையியலாளராக அல்லது
2. இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் உறுப்பினராயிருப்பதுடன் 15 வருட சேவைக்கால அனுபவத்துடன் ஒரு பட்டதாரியாகவோ அல்லது மதிப்பீட்டுதலில் ஒரு டிப்போளாமா பட்டதாரியாகவோ இருத்தல் வேண்டும். அல்லது
3. 18 வருட சேவைக்கான அனுபவத்துடன் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் ஒரு பட்டதாரி உறுப்பினராக இருத்தல் வேண்டும்; அல்லது
4. 20 வருட சேவைக்கால அனுபவத்துடன் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் இணை உறுப்பினராக இருத்தல் வேண்டும்; அல்லது
5. 25 வருட சேவைக்கால அனுபவத்துடன் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் இடைநிலை தேர்வில் சித்திபெற்றவராக இருத்தல் வேண்டும்.

## 2000ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக்குத்தகைச் சட்டம்

*2000 ஆம் ஆண்டின் 56 இலக்க நிதிக்குத்தகைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.*

திருமதி.எல்கே. குணதிலக்க

**பணிப்பாளர்**
வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்

*இலங்கை மத்திய வங்கி*
*28 ஆம் திகதி திசெம்பர் 2005*

## 2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக்குத்தகை (தனி கொடுகடன்பாட்டாளர் வரையறை) பணிப்புரை

1. இந்தப் பணிப்புரையானது கடன்பெறுபவர் 2005 ஆம் ஆண்டு 3 ஆம் இலக்க நிதிக்குத்தகை (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) ஆகக் கருதப்படலாமென்பதுடன், 1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் ஆளுகை செய்யப்படும் உத்தரவுபெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உத்தரவுபெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தினால் ஆளுகை செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் தவிர்ந்த ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகை நிறுவனங்களுக்கும் ஏற்புடையதாகும். இப்பணிப்பரையானது 2006 ஆம் ஆண்டு சனவரி 2 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

2. இந்தப் பணிப்புரை பிரயோகிக்கக்கூடிய ஒவ்வொரு நிதிக்குத்தகை கம்பனியும் இதன்பின்பு "பொருத்தமான நிறுவனம்" என அழைக்கப்படும்.

3. கீழே 5 ஆம் பந்தியின் குறிப்பிட்ட பகுதிக்கிணங்க எந்த ஒரு கடன் தனிநபருக்கோ, எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உள்ள மீதிகள் மற்றும் வழங்கப்பட்ட தனிப்பட்ட கடன் வசதியோ அல்லது ஒரு தனியொரு கடன்பெறுபவரின் மொத்தக் கடன்வசதிககளின் உச்சத்தொகையானது, கம்பனியில் இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட மூலதனத்தொகையில் 15 சதவீதத்தை மிஞ்சியதாக இருத்தல் கூடாது.

4. கீழே 5 ஆம் பந்தியின் குறிப்பிட்ட பகுதிகளுக்கிணங்க எந்த ஒரு கடன் பெறும் குழுவுக்கோ,எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் உள்ள மீதிகள் மற்றும் வழங்கப்பட்ட தனிப்பட்ட கடன்வசதியோ அல்லது மொத்தக் கடன்வசதிகளின் உச்சத்தொகையானது கம்பனியானது இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட மூலதனத்தொகையின் 20 சதவீதத்தை மிஞ்சியதாக இருத்தல் கூடாது.

5. ஆகக்கூடுதலாக அனுமதிக்கப்பட்ட தனிப்பட்ட கடன்வசதிகள் அல்லது கூட்டுமொத்தக் கடன்வசதிகளின் எந்த ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் எந்த ஒரு பணிப்பாளருக்கும், தாய்க்கம்பனி அல்லது துணைக்கம்பனிகளுக்கு எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் அனுமதிக்கப்பட்ட தனிப்பட்ட கடன்வசதிகள் அல்லது கூட்டு மொத்தக் கடன்வசதிகளின் உச்ச எல்லையானது கம்பனியின் இறுதியாக வெளியிடப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் உள்ளவாறான மூலதன நிதியத்தில் 15 சதவீதத்துக்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும். இந்த நிபந்தனைகளுடன் வழங்கப்படக்கூடிய கடன்வசதியானது குறிப்பிட்ட நிறுவனத்தின் எந்த ஒரு கடன்பெறுநருக்கும் பொருந்தக்கூடியது என்பதுடன் குறிப்பிட்ட கடன்பெறுநரின் பெயர் உட்பட அக்கடன்வசதியின் விபரங்கள் கடன்வசதிகள் அல்லது கம்பனிக்கிடையேயான கடன் என்பன அனுமதிக்கப்பட்ட திகதி, அனுமதிக்கப்பட்ட தொகை மீள்செலுத்தும் காலஅட்டவணை, பிணை மற்றும் வட்டி வீதங்கள் என்பன அக்கடன்வசதியானது அனுமதிக்கப்பட்டு 14 தினங்களுக்கும் பணிப்பாளருக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

6. தனிப்பட்ட கடன்வசதி அல்லது கூட்டு மொத்தமான கடன்வசதிகள் அனுமதிக்கப்பட்டதுடன் மேலே கூறப்பட்ட 3, 4 மற்றும் 5ஆம் பந்திகளில் குறிப்பிட்டது மேலுள்ள கடன் எல்;லைகளுக்கு

மேலாக தனிப்பட்டது போலுள்ள கடன் எல்லைகளுக்கு மேலாக தனிப்பட்ட நபரோ, நிறுவனமோ அல்லது ஒரு குழுவோ நிலுவை மீதிகளைக் இப்பணிப்புரை ஆரம்பமாகும் திகதியில் கொண்டிருப்பின் இப்பணிப்புரை ஆரம்பமாகும் திகதியிலிருந்து அந்நிறுவனங்கள் இப்பணிப்புரை யின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் வகையில் இரண்டு வருடகால அவகாசத்தை வழங்கலாம்.

7. இப்பணிப்புரை நோக்கத்திற்காக "தனிப்பட்ட கடன்பெறுபவர்" என்பவர், தனிப்பட்ட கம்பனி, பொதுக்கூட்டுத்தாபனம், நிறுவனம், நபர்களின் அமைப்பு அல்லது தனிப்பட்ட ஒரு நபரையும் குறிப்பிடலாம்.

8. இப்பணிப்புரை நோக்கத்திற்காக கடன்பெறுபவர்களின் குழு என்பது

(அ) ஒரு தனிப்பட்டவர் மற்றும் அவரது உறவினர் மற்றும் ஒரு கம்பனியில் அத்தனிப்பட்டவர் அல்லது அவரது உறவினர்கள் அக்கம்பனியின் வழங்கி இறுத்த பங்கு மூலதனத்தில் 10 சதவீதத்துக்கும் மேற்பட்ட பங்குகளை வைத்திருந்தால்; அல்லது

(ஆ) ஒரு கம்பனி மற்றும் ஒன்றும் அதற்கு மேற்குறிப்பிட்ட பின்வருவனவும்

i அதன் துணைக்கம்பனிகள்

ii அதன் தாய்க்கம்பனி அல்லது

iii தாய்க்கம்பனியின் ஒரு துணைக்கம்பனி

9. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "மூலதன நிதியம்" என்பது பின்வருவனவற்றின் கூட்டுத்தொகையாகும்.

(அ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட சாதாரண பங்குமூலதனம்

(ஆ) வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட முடியாத, திரளத முன்னுரிமைப்பங்குகள்

(இ) பங்குவட்டம்

(ஈ) 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிக்குத்தகை (ஒதுக்குநிதியம்) பணிப்புரையின் கீழ் பராமரிக்கப்படும் ஒதுக்குநிதியம்

(உ) எந்த ஒரு காரணத்திற்காகவும் எந்த ஒரு நியதிச்சட்டத்தினாலும் கீழ் அல்லது இலங்கை கணக்கீட்டு நியமத்தினாலும் குறிப்பிடப்படாததுமான ஒதுக்கங்கள்

(ஊ) நிறுத்தி வைக்கப்பட்ட இலாபங்கள் அல்லது ஒன்று சேர்ந்த நட்டங்கள்

(எ) அறவிடமுடியாத, ஐயத்துக்கிடமான கடன்களின் குறிப்பிட்ட ஒதுக்கத்திற்கு மேலதிகமாக ஒதுக்கப்பட்ட ஐயக்கடன்களுக்கான பொதுஒதுக்கம் அல்லது செயற்படும் கடன்கள் மீதான மேலதிக குறிப்பிட்ட ஒதுக்கம் மற்றும்

(ஏ) மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் (இணைப்பில் II கொடுக்கப்பட்ட வழிகாட்டலுக்கிணங்க மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக பணிப்பாளரின் முன்அனுமதியுடன் உள்ளடங்கலாம்)

10. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "கடன்வசதி" என்பதன் பொருளானது, கடன்கள் வாடகைக் கொள்வனவு அல்லது குத்தகை உடன்படிக்கைக்கான கீழ் வழங்கப்படும் வசதிகள், மீட்கப்படக்கூடிய திரண்ட முன்னுரிமைப் பங்குகள் மற்றும் முறிகள், தொகுதிக்கடன்கள், கடன்பிணைகளாக உள்ள சொத்துக்கள், வர்த்தகப் பத்திரங்கள், வாக்குறுதிச் சான்றிதழ்கள் போன்ற கடன் பிணைகள் கம்பனிகளுக்கிடையேயான கடன்கள், திரும்பிச்செலுத்தும் அடிப்படை நிதி வழங்குவதற்கான ஒழுங்குகள், நிகழத்தக்க பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கான உறுதிப்பாடு அல்லது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்ட வேறு ஏதேனுமொரு நிதி வசதி என்பனவாகும்.

11. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "கம்பனிக்கிடையேயான கடன்" என்பது குறிப்பிட்ட நிறுவனமானது தனது பணிப்பாளருக்கோ அல்லது தமது உறவினர்களுக்கோ மற்றும்/ அல்லது

தமது இணைக்கம்பனிகளுக்கோ மற்றும்/ அல்லது தமது துணைக்கம்பனிகளுக்கோ மற்றும்/ அல்லது தமது தாய்க்கம்பனிக்கோ வழங்குகின்ற கடன்வசதிகளைக் குறிக்கும். இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "உறவினர்" என்பது ஒரு தனிப்பட்ட நபரின் வாழ்க்கைத்துணை மற்றும்/ அல்லது தங்கியிருக்கும் பிள்ளையாகவோ இருக்கலாம். ஒரு கம்பனியானது பிறிதொரு கம்பனியின் முறையான "இணைக்கம்பனியாக" இருப்பதென்பது அக்கம்பனியின் வழங்கி இறுத்த பங்குமூலதனத்தில் 20 சதவீதத்திற்கு சமமாக அல்லது மேலதிகமாக ஆனால் 50 சதவீதத்திற்கு குறைவான பங்கினை வைத்திருத்தல் என்பதாகும்.

12. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "துணைக்கம்பனி" மற்றும் "தாய்க்கம்பனி" என்பதன் பொருளானது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள அதே அர்த்தத்தைக் கொண்டதாகும்.

13. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிப்பதாகும்.

பின்னிணைப்பு

## தகைமையுடைய மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்களை தீர்மானிப்பதற்கான வழிகாட்டல்கள்

பின்வரும் நிபந்தனைகளுக்கு உற்பட்டு இருப்பின் 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிதிக்குத்தகை (அதிகரிப்பு விகிதம்) மற்றும் 2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக்குத்தகை (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) போன்ற நோக்கங்களுக்காகக நூறு வீதமான மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் மூலதன ஒதுக்கங்களாக கருதப்படலாம்.

(அ) மதிப்பீடென்பது பணிப்பாளர், வங்கியல்லா நிதிநிறுவனங்களின் முன் அனுமதியுடன் செய்யப்படவுள்ளது.

(ஆ) ஒரு சொத்தானது அது வாங்கப்பட்ட திகதியிலிருந்தோ அல்லது அதற்கு முன்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதியிலிருந்தோ எது பிந்தியதோ, அத்திகதியிலிருந்து 7 வருடங்களின் பின்னரே மறுபடியும் மீள்மதிப்பீடு செய்வதற்கு தகுதிபெறும்.

(இ) சொத்துக்கள் பின்வரும் தன்மைகளைக் கொண்ட மதிப்பீட்டாளர்

(i) ஒரு பட்டய மதிப்பீட்டு அளவையியலாளராக இவை மதிப்பீடு செய்யப்படவேண்டும்; அல்லது

(ii) இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் உறுப்பினராக இருப்பதுடன், ஒரு பட்டதாரியாகவோ அல்லது மதிப்பீட்டில் ஒரு டிப்போளாமா பட்டதாரியாகவோ இருப்பதுடன் 15 வருட சேவைக்கால அனுபவத்தையும் கொண்டிருத்தல்;

(iii) 18 வருட சேவைக்கால அனுபவத்துடன் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் ஒரு பட்டதாரி உறுப்பினராக இருத்தல் வேண்டும்;

(iv) 20 வருட சேவைக்கால அனுபவத்துடன் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் இணை உறுப்பினராக இருத்தல் வேண்டும்; அல்லது

(v) 25 வருட சேவைக்கால அனுபவத்துடன் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் இடைநிலை தேர்வில் சித்திபெற்றவராக இருத்தல் வேண்டும்.

## 2000ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக்குத்தகைச் சட்டம்

*2000 ஆம் ஆண்டின் 56 இலக்க நிதிக்குத்தகைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.*

திருதி.எல்கே. குணதிலக்க

பணிப்பாளர்
வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

*28 ஆம் திகதி திசெம்பர் 2005*

## 2005 ஆம் ஆண்டு 4ஆம் இலக்க
## நிதிக்குத்தகை (அதிகரிப்பு விகிதம்)பணிப்புரை

1. இப்பணிப்புரையானது 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிதிக்குத்தகை (இணைப்பு விகிதம்) பணிப்புரையாக கருதப்படலாமென்பதுடன் 1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கிச்சட்டத்தால் ஆளுகை செய்யப்படும் உத்தரவு பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உத்தரவுபெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், 1932 ஆம் ஆண்டு 98 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தினால் ஆளுகை செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் என்பன தவிர்ந்த ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகை நிறுவனங்களுக்கும் பொருந்தும். இப்பணிப்புரையானது 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 2 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது.

2. இப்பணிப்புரை பிரயோகிக்கப்படக்கூடிய ஒரு பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகை கம்பனியின் கடன்பாடுகளினது ஆகக்கூடிய வெளிநின்ற தொகை (இதன் பின்பு "பொருத்தமான நிறுவனம்" என அழைக்கப்படும்)

   பின்வருவனவற்றை விஞ்சக்கூடாது

   (ஆ). இப்பணிப்புரையின் 3 ஆம் மற்றும் 4 ஆம் பந்திகளுக்கிணங்க, இப்பணிப்புரையின் ஆரம்பத்திலிருந்து முதல் மூன்று வருட காலப்பகுதியில், எந்த ஒரு நேரத்திலும் அப்பொருத்தமான நிறுவனத்தினை மூலதன நிதியத்தின் பத்து (10) மடங்கு

   (ஆ) இப்பணிப்பரையின் ஆரம்பத்திலிருந்து முதல் நான்காம் வருட ஆரம்பத்திலிருந்து எந்த ஒரு நேரத்திலும் அகக்குறிப்பிட்ட நிறுவனத்தின் மூலதன நிதியத்தின் ஏழ (7) மடங்கு

3. இப்பணிப்புரையின் தொடக்கத்தில் குறிப்பிட்ட நிறுவனத்தின் கடன்பாடுகளினது வெளிநின்ற தொகை மேலே குறிப்பிட்ட பகுதி 2(அ) வில் குறிப்பிட்ட வரையறையை விஞ்சியிருப்பின் அக்குறிப்பிட்ட நிறுவனமானது இப்பணிப்புரை ஆரம்பித்த திகதியிலிருந்து இரண்டு வருட அவகாசத்தை மேலே குறிப்பிட்ட பந்தி 2 (அ) வின் கீழ் உள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக வழங்கலாம்.

4. இப்பணிப்புரையானது ஆரம்பிக்கப்பட்ட திகதியில் ஒரு குறிப்பிட்ட நிறுவனமானது நிதிக்குத்தகை வியாபாரத்தில் ஒரு வருடத்தை பூர்த்தி செய்யாத பட்சத்தில் இப்பணிப்புரையின் 2 (ஆ) பந்தியிலுள்ள தேவைப்பாடுகளை இப்பணிப்புரை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 5 வருட காலப்பகுதிக்கு பின்வருவனவற்றிற்கிணங்க பூர்த்தி செய்ய வேண்டும்.

   (அ) இப்பணிப்புரையின் ஆரம்பத்திலிருந்து முதல் மூன்று வருட காலப்பகுதியில், இக்குறிப்பிட்ட நிறுவனத்தின் கடன்பாடுகளின் வெளிநின்ற தொகை எந்த நேரத்திலும் இப்பணிப்புரையின் ஆரம்பத் திகதியில் அமைப்பு அகவிதியில் அனுமதிக்கப்பட்ட மட்டத்தை மிஞ்சக்கூடாது.

(ஆ) குறிப்பிட்ட நிறுவனத்தின் கடன்பாடுகளின் வெளிநின்ற தொகை மேலே பந்தி 2(ஆ) இக்குறிப்பிடப்பட்ட மட்டத்தை மூன்றாம் வருட இறுதியில் மிஞ்சியிருப்பின் இந்த பணிப்புரை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து நான்காம் வருட ஆரம்பத்திலிருந்து இக்குறிப்பிட்ட நிறுவனம் தனது வெளிநின்ற கடன்பாட்டுத் தொகையினை மேலேயுள்ள பந்தி 2 (ஆ) வில் குறிப்பிட்ட அளவு எல்லைக்கு குறைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல் வேண்டும்.

5. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "கடன்பாடு" என்பது கடன்கள்/ வங்கி மேலதிகப் பற்றுக்கள் அல்லது மீட்கக்கூடிய மற்றும் திரண்ட முன்னுரிமைப் பங்குகளை வழங்குதல் கடன்பத்திரங்கள், தொகுதிக்கடன் பத்திரங்கள், வாக்குறுதிச் சான்றிதழ்கள்/ வர்த்தகப் பத்திரங்கள் மற்றும் பணிப்பாளரால் தீர்மானிக்கப்பட்ட வேறு ஏதேனும் வழியிலான கடன்பெறுதல், இவற்றின் மூலம் பெறப்படும் நிதியைக் குறிப்பதாகும்.

6. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "மூலதனநிதியம்" என்பது பின்வருவனவற்றின் கூட்டுத்தொகையாகும்.

(அ) வழங்கி இறுத்த, சாதாரண பங்குமூலதனம்

(ஆ) வழங்கி இறுத்த, மீட்கப்பட முடியாத, திரளாத முன்னுரிமைப்பங்குகள்

(இ) பங்குவட்டம்

(ஈ) 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிக்குத்தகை (ஒதுக்குநிதியம்) பணிப்புரையின் கீழ் பராமரிக்கப்படும் ஒதுக்குநிதியம்.

(உ) எந்த ஒரு காரணத்திற்காகவும் நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது இலங்கை தரக்கணக்கியலின் கீழ் குறிப்பிடப்படாததுமான ஒதுக்கங்கள்.

(ஊ) நிறுத்தி வைக்கப்பட்ட இலாபங்கள் அல்லது ஒன்றுசேர்ந்த நட்டங்கள்

(எ) நடப்பு வருடத்திற்கான இலாபங்கள் அல்லது நட்டங்கள்

(ஏ) செயற்படாக் கடன்களின் குறிப்பிட்ட ஒதுக்கத்துக்கு மேலதிகமாக ஒதுக்கப்பட்ட ஐயக்கடன்களுக்கான பொதுஒதுக்கம் அல்லது செயற்படும் கடன்கள் மீதான மேலதிக குறிப்பிட்ட ஒதுக்கம்.

(ஒ) மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் (பணிப்பாளரின் முன் அனுமதியுடன் பின்னிணைப்பு II இல் குறிப்பிட்ட வழிகாட்டல்களுடன் இணைந்து செல்லும்படியான சொத்துக்களின் மீள் மதிப்பீட்டை உள்ளடக்கலாம்)

7. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "பணிப்பாளர்" என்பதன் பொருள் இலங்கை வங்கியின், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆவார்.

பின்னிணைப்பு

## தகைமையுடைய மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்களை தீர்மானிப்பதற்கான வழிகாட்டல்கள்

பின்வரும் நிபந்தனைகளுக்கு உற்பட்டு இருப்பின் 2005 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிதிக்குத்தகை (அதிகரிப்பு விகிதம்) மற்றும் 2005 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க நிதிக்குத்தகை (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) போன்ற நோக்கங்களுக்காகக நூறு வீதமான மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள் மூலதன ஒதுக்கங்களாக கருதப்படலாம்.

(அ) மதிப்பீடென்பது ப[illegible]பாளர், வங்கியல்லா நிதிநிறுவனங்களின் முன்அனுமதியுடன் செய்யப்படவுள்ளது.

(ஆ) ஒரு சொத்தானது அது வாங்கப்பட்ட திகதியிலிருந்தோ அல்லது அதற்கு முன்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதியிலிருந்தோ எது பிந்தியதோ, அத்திகதியிலிருந்து 7 வருடங்களின் பின்னரே மறுபடியும் மீள்மதிப்பீடு செய்வதற்கு தகுதிபெறும்.

(இ) சொத்துக்கள் பின்வரும் தன்மைகளைக் கொண்ட மதிப்பீட்டாளர்

(i) ஒரு பட்டய மதிப்பீட்டு அளவையியலாளராக இவை மதிப்பீடு செய்யப்படவேண்டும்; அல்லது

(ii) இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் உறுப்பினராக இருப்பதுடன், ஒரு பட்டதாரியாகவோ அல்லது மதிப்பீட்டில் ஒரு டிப்போளாமா பட்டதாரியாகவோ இருப்பதுடன் 15 வருட சேவைக்கால அனுபவத்தையும் கொண்டிருத்தல்;

(iii) 18 வருட சேவைக்கால அனுபவத்துடன் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் ஒரு பட்டதாரி உறுப்பினராக இருத்தல் வேண்டும்;

(iv) 20 வருட சேவைக்கால அனுபவத்துடன் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் இணை உறுப்பினராக இருத்தல் வேண்டும்; அல்லது

(v) 25 வருட சேவைக்கால அனுபவத்துடன் இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவனத்தின் இடைநிலை தேர்வில் சித்திபெற்றவராக இருத்தல் வேண்டும்.

## 2000ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக்குத்தகைச் சட்டம்

*2000 ஆம் ஆண்டின் 56 இலக்க நிதிக்குத்தகைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.*

*திருதி.எல்கே. குணதிலக்க*

*பணிப்பாளர்*
*வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்*
*இலங்கை மத்திய வங்கி*

*28 ஆம் திகதி திசெம்பர் 2005*

### 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிக்குத்தகை (ஒன்று சேர்ந்த வட்டி) பணிப்புரை

1. இப்பணிப்புரையானது 2005 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க (வருமதி வட்டி) ஆகக் கருதப்படலாமென்பதுடன், 1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் ஆளுகை செய்யப்படும் உத்தரவுபெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உத்தரவுபெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் 1988 ஆம் ஆண்டு 78 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஆளுகை செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் தவிர்ந்த ஏனைய பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு நிதிக்குத்தகைய நிறுவனத்திற்கும் இது பொருந்தும். இந்தப் பணிப்புரையானது 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 2 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றது.

2. இதன் கீழ், பந்தி 3 இல் குறிப்பிட்ட விதிகளுக்கிணங்க இப்பணிப்புரை ஏற்புடையதாய் உள்ள எந்த ஒரு பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகை நிறுவனமும் (இதன்பின் "பொருத்தமான நிறுவனம்" என குறிப்பிடப்படும்) ஆறு மாதங்களுக்கு அல்லது அதற்கு மேலாக வட்டி மற்றும்/ அல்லது மீளச்செலுத்தும் கடன்தொகை நிலுவையாக உள்ள கடன்வசதியின் வருமதி வட்டியை வருமானமாக கணக்கில் காட்டுதல் கூடாது.

3. மாதாந்தம் திருப்பிச்செலுத்தாத கடன் வசதிகளைப் பொறுத்தவரை எந்த ஒரு பொருத்தமான நிறுவனமும் கடன்வசதியின் வருமதியாகவுள்ள வட்டித்தொகையை கணக்கிலெடுக்கக்கூடாது என்பதுடன், அக்கடன் வசதியின் தவணைக்கட்டணங்கள் அத்திகதியில் செலுத்தப்படாது என அறியும் பட்சத்தில் வருமதியாயுள்ள வட்டித்தொகையை கவனத்திலெடுக்கக் கூடாது.

4. ஒவ்வொரு தொடர்பான நிறுவனமும் (கணக்கியல் பதிவேடுகளைப் பராமரித்தல் தொடர்பாக) மேற்கூறப்பட்ட பந்தி 2 மற்றும்/ அல்லது 3 பொருந்தக்கூடிய கடன்வசதிகளை ஏனைய கடன்வசதிகளிலிருந்து வேறுபடுத்தி பொதுப்பேரேட்டில் பிறிதொரு கட்டுப்பாட்டு கணக்கின்கீழ் பேணவேண்டும்.

5. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "கடன்வசதி" என்பதன் பொருளானது, கடன்கள் வாடகைக் கொள்வனவு அல்லது குத்தகை உடன்படிக்கைகளின் கீழ் வழங்கப்படும் வசதிகள் மீட்கப்படக்கூடிய திரண்ட முன்னுரிமைப் பங்குகள் மற்றும் பிணைகள், தொகுதிக்கடன்கள், கடன் பிணைகளாக உள்ள சொத்துக்கள், வர்த்தகப் பத்திரங்கள் /வாக்குறுதிச் சான்றிதழ்கள், படுகடன் பிணையங்கள் கம்பனிகளுக்கிடையேயான கடன்கள், திருப்பிச்செலுத்தும் அடிப்படையில் நிதி வழங்குவதற்கான ஒழுங்குகள், நிகழத்தக்க பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கான உறுதிப்பாடு அல்லது பணிப்பாளரால் தீர்மானிக்கப்பட்ட வேறு ஏதேனுமொரு நிதி வசதி என்பனவாகும்.

6. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "கம்பனிகளுக்கிடையேயான கடன்" என்பது குறிப்பிட்ட நிறுவனமானது தனது பணிப்பாளர்களுக்கோ அல்லது தமது உறவினர்களுக்கோ அத்துடன்/

தாய்க் கம்பனிக்கோ வழங்குகின்ற கடன்வசதிகளைக் குறிக்கும். இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "உறவினர்" என்பது ஒரு தனிப்பட்ட நபரின் வாழ்க்கைத் துணை அத்துடன்/ அல்லது தங்கியிருக்கும் பிள்ளையாகவோ வேறு இருக்கலாம். ஒரு கம்பனியானது பிறிதொரு கம்பனியின் "இணைக்கம்பனியாக" இருப்பதென்பது அக்கம்பனியின் வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட பங்குமூலதனத்தில் 20 சதவீதத்திற்கு சமமாக அல்லது மேலதிகமாக ஆனால் 50 சதவீதத்திற்கு குறைவான பங்கினை வைத்திருத்தல் என்பதாகும்.

7. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "துணைக்கம்பனி" மற்றும் "தாய்க்கம்பனி" என்பதன் பொருளானது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிககள் சட்டத்தின் 150 ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள அதே அர்த்தத்தைக் கொண்டதாகும்.

8. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிப்பதாகும்.

## 2000ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க நிதிக்குத்தகைச் சட்டம்

*2000 ஆம் ஆண்டின் 56 இலக்க நிதிக்குத்தகைச் சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.*

*திருமதி.எல்கே. குணதிலக்க*

*பணிப்பாளர்*
*வங்கியல்லா நிதிநிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்*

*இலங்கை மத்திய வங்கி*
*28 ஆம் திகதி திசெம்பர் 2005*

## 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிக்குத்தகை (ஒதுக்கு நிதியம்) பணிப்புரை

1. இப்பணிப்புரையானது 2005 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க நிதிக்குத்தகை (ஒதுக்குநிதியம்) ஆகக் கருதப்படலாமென்பதுடன், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் ஆளுகை செய்யப்படும் உத்தரவுபெற்ற வர்த்தக வங்கிகள், மற்றும் உத்தரவுபெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், மற்றும் 1988 ஆம் ஆண்டின் 98 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தினால் ஆளுகை செய்யப்படும் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகள் தவிர்ந்த ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகை நிறுவனத்துக்கும் ஏற்படையதாகும். இப்பணிப்புரையானது 2006 ஆம் ஆண்டு சனவரி 2 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்றது.

2. இப்பணிப்புரை ஏற்படையதான ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட நிதிக்குத்தகை கம்பனியும் (இதன் பின்பு "தொடர்பான நிறுவனமென" அழைக்கப்படும்) ஒரு ஒதுக்க நிதியத்தை பராமரிக்க வேண்டியதுடன். (இதன் பின்பு "ஒதுக்க நிதியம்" என அழைக்கப்படும்) என்பதுடன் வரிக்குப் பின்னரான பங்குஇலாபம் பிரோரிக்க முன்னரான தேறிய இலாபத்தில் பின்வரும் முறையில் மாற்றல் செய்தல் வேண்டும்.

   (அ) தொடர்பான நிறுவனத்தின் ஒதுக்கு நிதியத்திற்கு சாதாரண பங்குமூலனத்தின் 50 சதவீதத் திற்கு சமமாக ஒதுக்க நிதியத்தின் தொகை வரும்வரை இவ்இலாபத்தின் 5 சதவீதத்திற்கு குறையாத தொகை மற்றும்.

   (ஆ) பொருத்தமான நிறுவனத்தின் வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட, இறுத்த சாதாரண பங்குமூலதனத்திற்கு சமமாக ஒதுக்க நிதியத்தின் தொகை வரும்வரை இவ்இலாபத்தின் 2 சதவீதத்திற்கு குறையாத தொகையை மாற்றல் செய்தல்.

3. தொடர்பான நிறுவனங்கள் ஒதுக்கங்கள் மற்றும் பகிரப்படாத இலாபங்கள் என்பவற்றைக் கொண்டிருப்பதுடன் அவை நியதிச் சட்டத்தின் அடிப்படையிலோ அல்லது இலங்கை தரக் கணக்கீட்டு நிதியங்களிலோ குறிப்பிட்ட நோக்கத்திற்கென குறிப்பிடப்படாவிடின் இவ்வொதுக்கங்கள், ஒதுக்க நிதியத்திற்கு மாற்றப்படலாம். இவ்வாறு மாற்றப்பட்ட தொகையானது மேற்கூறிய பந்தி 2 (அ) மற்றும் 2 (ஆ) உள்ள நிபந்தனைகளை திருப்தி செய்யுமானால் அந்த நிறுவனம் அதன் பின்பு அவ்வொதுக்க நிதியத்திற்கு எத்தொகையையும் மாற்ற வேண்டிய அவசியமில்லை. மற்றும் 2 (ஆ) வில் குறிப்பிட்ட நிபந்தனைகளை திருப்தி செய்யாத பட்சத்தில் அந்த தொடர்பான நிறுவனமானது தனது வரிக்கொடுப்பனவுக்குப் பின்னரான ஆனால் எவ்விதப் பங்கிலாபமும் வெளிப்படுத்த முன்னரான இலாபத்தில் ஒதுக்க நிதியத்திற்கு மேலே குறிப்பிட்ட பந்தி 2 (அ) மற்றும் 2 (ஆ) ஆகியவற்றின் தேவைப்பாட்டுக்கு இணங்க தொடர்ந்தும் மாற்றல் செய்தல் வேண்டும்.